# தமிழர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் இரு தீர்மானங்கள்

Registered as a Newspaper in Ceylon

வார மலர் ★ விலை சதம் 20




# ஈழநாடு
EELA NADU

**முக்கிய அறிவித்தல்**

எமது ஸ்தாபனத்தின் பெயரைச் சொல்லி வரும் எவருக்கும் நன்கொடைகள் எதுவும் கொடுக்கவேண்டாம் என்று அன்புடன் வேண்டிக் கொள்ளுகிறோம்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்.

மலர் 11 | இலக பங்குனி 27 | முஹறம் 21 | (9-4-69) | புதன்கிழமை | இதழ் 58

## இன்று அறிவிக்கப்படும்

### திரு. அமிர்தலிங்கம் தகவல்

யாழ்ப்பாணம், புதன்

தமிழ்மக்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் இரு முக்கிய தீர்மானங்கள் இன்று மாலை யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் நடைபெறும் தமிழரசுக்கட்சிப் பொதுக் கூட்டத்தில் பகிரங்கமாக அறிவிக்கப்படவிருக்கிறது.

1961-ம் வருடம் எந்த இடத்தில் போராட்டம் விடப்பட்டதோ அதேயிடத்திலிருந்து போராட்டத்தை ஆரம்பித்து நடத்துவதற்கான திட்டம் பற்றி நேரடி நடவடிக்கைக்குழு நேற்று பலமாக ஆலோசனை செய்தது.

திரு. எம். இராசமாணிக்கம் தலைமையிலமைந்துள்ள இக்குழுவில் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. க. பொ. இரத்தினம், எஸ். ராஜதுரை, கே. ஜெயக்கொடி ஆகியோர் அடங்கியுள்ளனர்.

சிங்களஸ்ரீ எதிர்ப்பு, சத்தியாக்கிரகம், பாதயாத்திரை மறியல் போராட்டம், பகிஷ்கரிப்பு இயக்கம் ஆகியவை பற்றி நேற்று இக்குழு நீண்டநேரம் ஆராய்ந்தது.

போராட்டத்திட்டம் பற்றி இக்குழுநேற்றுஎடுத்த முடிவுகள் இன்று காலை நடைபெறும் அரசியல் விஷயாலோசனைக் கூட்டத்தில் ஆலோசனை செய்யப்பட்டு பகிரங்கக் கூட்டத்தில் அறிவிக்கப்படும். போராட்டத்துக்கான புதியதிட்டங்களும் திகதியும் இன்று நடைபெறும் பகிரங்கக் கூட்டத்தில் வெளியிடப்படும்எனத் தெரியவருகிறது.

**தலைவர் கருத்து**

தேசிய அரசாங்கத்துக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையே இருந்துவந்த நான்குவருட தாம்பத்திய உறவு இன்று நள்ளிரவுடன் அற்றுப் போய்விடுமென நேற்று தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

# பொருளாதார, கல்வித் துறைகளில் புறக்கணிப்பு

## தென்னிலங்கையில் தமிழ் பிள்ளைகள் உதாசீனம்

### தமிழரசு மகாநாட்டில் திரு. இராஜமாணிக்கம் தலைமையுரை

— நமது காரியாலய நிருபர் எஸ். திருச்செல்வம் —

யாழ்ப்பாணம், புதன்

"பொருளாதாரத்துறையிலும் கல்வித்துறையிலும் தமிழர்புறக்கணிக்கப்பட்டுள்ளனர். தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டபின், முந்திய அரசாங்கத்தினல் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் நீக்கப்படுமென்று மக்கள் எதிர்பார்த்தனர். அரசாங்கம் சிறுபான்மை மக்களின் நம்பிக்கையில் மண்ணைப்போட்டுவிட்டது என்றே கூற வேண்டும். தென்னிலங்கையில் வாழ்கின்ற தமிழ்ப் பிள்ளைகளின் கல்விவசதிகள் மாற்றுந்தாய் மனப்பான்மையோடு உதாசீனம் செய்யப்பட்டுவருகின்றன."

உடுவிலில் நடைபெற்ற தமிழரசு மகாநாட்டில் தமிழரசுக்கட்சியின் புதிய தலைவர் திரு. சி. மு. இராசமாணிக்கம், நேற்று தமது தலை

னர்கள். தமிழ் மொழிச் சட்ட விதிகள் அமுல் நடத்தப்படவேண்டுமானல் ஐக்கிய தேசியக்கட்சியின் கொள்கைப்பிரகடனத்தில் கூறப்பட்ட பிரகாரம் அரசாங்க ஊழியர் தமிழும் கற்கச்செய்யவேண்டியது அத்தியாவசியம். ஆனல் சிங்கள ஊழியர்களைப் பொறுத்தவரையில் தமது கொள்கையை அமுல் நடத்துவதற்கே இதுவரை ஐக்கிய தேசியக்கட்சி துணியவில்லை. புதிய தமிழ் ஊழியர்கள் சிங்களத்தில் தேர்ச்சிபெற வேண்டுமென்ற பண்டாரநாயக்கா அரசாங்க கொள்கையை அதிதீவிரமாக அமுல் நடத்தி பல தமிழ் ஊழியர்களுக்கு வேலை நீக்க உத்தரவு கொடுத்திருக்கும் இந்த அரசாங்கம் இவ்விடயத்தில் 1965-ம் ஆண்டு எடுக்கப்பட்ட மந்திரிசபை தீர்மானத்தை. உள்ளடக்கிய திறைசேரி சுற்றறிக்கைகள் 700, 701 இரண்டையும் தானும் நியாயமாக

முதலில் பிரகடனப் படுத்தியவர் காலம் சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா அவர்களே. அவருடைய கொள்கையை ஏற்று நடத்துவதாக கூறும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் தமது ஆட்சிக் காலத்தில் இக் கொள்கையைத்தமது சிம்மாசனப் பிரசங்கத்தில் வெளியிட்டுமாவட்ட சபை மசோதாவை தயாரித்ததற்கு ஓர் உத்தியோகஸ்தர்குழுவினையும் நியமித்தனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியோடு லங்கா சமசமாஜக் கட்சியும் சேர்ந்து கூட்டாட்சி அமைத்தபின் முன் குறிப்பிட்ட உத்தியோகஸ்தர் தயாரித்த மசோதாவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்போவதாக சிம்மாசனப் பிரசங்கத்தில் கூறினர்

1967-ம் ஆண்டு ஆடி மாதத்தில் மாவட்டசபை மசோதாவை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏன் என்று கேட்ட லங்கா சமசமாசக் கட்சித் தலைவர் கலாநிதி என். எம். பெரேரா தாம் மாவட்ட

## வேற்றுமைகளைக்களைந்து ஒற்றுமைப்படுவது அவசியம்

அமுல செய்ய[illegible] ... பதை நூற்று
டது. சிங்களத்[illegible] ... விதம் ஆதரிப்ப
சைகளின் தரத்தை உயர்த் தாக பாராளுமன்றத்தில்
... 1968

## 'அரசாங்கத்தின் கைப்பொம்மைகளாக முதலாளிகள் சுகம் அனுபவிக்கிறார்கள்'

### தொழிலாளர் மகாநாட்டுல் பருத்தித்துறை எம். பி.

யாழ்ப்பாணம். புதன்

முதலாளிகள் அரசாங்கத்தின் கைப்பொம்மைகளாக இருந்துகொண்டு சுகபோகம் அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். அதேநேரம் தொழிலாளர்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். தொழிலாளர்கள் ஒன்றுபடவேண்டும். அவசியம் ஏற்பட்டால் போராட்டத்தில் குதிக்கத் தயாராக வேண்டும்.

தொழிலாளர் மகாநாட்டில் பேசிய பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. துரைரத்தினம் மேலும் கூறியதாவது: தொழிலாளருக்கு இந்நாட்டில் மதிப்புக் கொடுப்பதில்லை. சிவபெருமான்கூட பிட்டுக்கு மண் சுமந்தபோது கூலியை நிர்ணயித்த பின்னரே வேலைக்குச் சென்றார். நபிகள் நாயகம்கூட வியர்வை வற்றுமுன் கூலி கொடுக்க வேண்டுமென்றார். ஆனல் நமதுநாட்டில் வேலைக்கு தகுந்த சம்பளம் கொடுக்க பின்நிற்கிறார்கள். இந்த நிலை மாறவேண்டும்.

கலியாணவீடு; மரணவீடுகளில் தொழிலாளருக்கு மதிப்புக் கொடுப்பதில்லை. உழவுக்கும் தொழிலுக்கும் மதிப்புக் கொடுக்காத நாடு முன்னேற முடியாது.

இலங்கை தொழிலாளர் கழகச் சார்பில் திரு. மு. எல்லாளனும், சுருட்டுத்தொழிலாளர் கழக சார்பில் திரு. சி. நடராசாவும், நெசவு தொழிலாளர் சார்பில் திரு, ஆசீர்வாதமும், இலங்கை பஸ்தொழிலாளர் சார்பில் திரு. இ. பீதாம்பரமும், காங்கேசன்துறை சீமெந்துத் தொழிலாளர் கழக சார்பில் திரு. கே. நாகரராசாவும், மீன்பிடி தொழிலாளர் கழக சார்பில் திரு. வி. அழகரத்தினமும், மட்டுநகர்அளவை தொழிலாளர் கழக சார்பில் திரு. வ. பாலசிங்கமும், திருமலை துறைமுக தொழிலாளர் கழகசார்பில் திரு. ஈழத்துநாதனும் இம்மகாநாட்டில் கலந்துகொண்டார்கள். (கா. நி.)

## குழப்பம் விளைவிக்க முயலும்

## பட்டதாரிகளுக்கு பிரதமர் உறுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். தென்னிலங்கையில் வாழுகின்ற தமிழ்ப் பிள்ளைகளின் கல்விவசதிகள் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு உதாசீனம் செய்யப்பட்டுவருகின்றன.''

உடுவிலில் நடைபெற்ற தமிழரசு மகாநாட்டில் தமிழரசுக்கட்சியின் புதிய தலைவர் திரு சி. மு. இராசமாணிக்கம், நேற்று தமது தலைமைப் பேருரையில் மேற்கண்டவாறு கூறினர். திரு. இராசமாணிக்கம் மேலும் கூறியதாவது:

எமது கட்சியின் சரித்திரத்தில் அதிக முக்கியமான ஒரு கட்டத்தில் நடைபெறும் இப்பதினேராவது மாநில மாநாட்டின் தலைவராக என்னை மீண்டும் தெரிவு செய்தமைக்கு கட்சிஉறுப்பினர்க்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1961-ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 7-வது மாநாட்டிற்கும், 1962.ல் மன்னரில் நடைபெற்ற 8-வது மாநாட்டிற்கும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு இரு முறை பணியாற்றிய என்னை மூன்ருவது முறையாக இப் பொறுப்பைத் தாங்கும் வண்ணம் தெரிவுசெய்து என்னையும்கிழக்குமாகாணத் தமிழ் பேசும் மக்களையும் கௌரவித்தமைக்கு நான் விசேஷமாகநன்றி கூறக்கடமைப்பட்டிருக்கின்றேன்.

கட்சி ஆரம்பித்த காலம் தொடக்கம் கட்டுப்பாடாக கட்சிக்கு ஆதரவளித்த உடுவில் தொகுதியில் இம் மாநாடு நடைபெறுவது எல்லாவகையிலும் பொருத்மானதே.

இலங்கையில் தொடர்ந்து பல நூற்ருண்டுகளாகத் தமிழரசு நடைபெற்ற சிறப்பு யாழ்ப்பாணத்திற்கே உண்டு. அன்றியும் தமிழ் மக்கள் செறிந்து, தமிழ் மொழியையும்பண்பாட்டையும் சிறப்பாகக் காத்து வருகின்றனர்.

இவ்விருபதாம் நூற்ருண்டில் தமிழ் உலகு முழுவதும் மதிக்கும் முத்தமிழ்வித்தகர் விபுலானந்த அடிகளைப்பெற்றெடுத்த கிழக்கு மாகாணத்திலிம்ந்துவ நான் 19-ம்நூற்ருண்டில் தோன்றி தமிழையும் வைத்தையும் இலங்கையில் மாத்திரமல்ல தமிழ் நாட்டிலும்வளர்த்தஆறுமுக நாவலர் அவதரித்த யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மாநாட்டில் தலைமை தாங்குவது வடக்கிலங்கையிலும் கிழக்கிலங்கையிலும் வாழ் தமிழ்மக்களின் ஒற்றுமையின் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது என்றே நான் கருதுகிறேன்.

யாழ்ப்பாணத்தில்1961-ம் ஆண்டு நடைபெற்ற 7-வது மாநில மாநாட்டின் பின் நடந்த சம்பவங்களை இக் கட்டத்தில் நினைவு கூருவது பொருத்தமாகும். மாநாடு முடிந்து ஒருசில நாட்களின் பின் நாம் ஆரம்பித்தஅறப்போர் அரசாங்கத்தையே அயர்ச்சி கொள்ளச்செய்தது. இரண்டு மாதங்களுக்கு மேலாக தனிச்சிங்களத் திணிப்பை எதிர்த்து நாம் நடத்தியசாத்வீகப்போராட்டம் அவசரகால சட்டத்தினல் அடக்கப்பட்டாலும் அன்றைய அரசாங்கமோ அதன்பின் வந்த அரசாங்கமோ திட்டமிட்டபடி தனிச்சிங்களத் திணிப்பை வடக்கு கிழக்கு மாகாணங்ளில் நடத்தமுடியாமல் போனமைக்குநாம் நடத்திய

## கஷ்டம் மிகுந்த காலம் எதிர்நோக்கியுள்ளது

போராட்டமே காரணமாகும்.

**மாற்றத்தின் எடுத்துக்காட்டு**

சென்ற மாநில மாநாடு கல்முனையில் நடைபெற்ற போதிருந்த அரசியல் சூழ்நிலைக்கும் இன்றிருக்கும் சூழ்நிலைக்கும் பாரதூரமான வித்தியாசம்உண்டு கல்முனை மாநாட்டில் நாட்டின் முதலமைச்சர் கௌரவ டட்லி சேனநாயக்கா அவர்களும் கலந்துகொண்டு உரையாற்றியதும், இன்றைய மாநாட்டில் ஆளும் கட்சியை சேர்ந்த எவரையும் அழைக்காது எமது கட்கியின் உறுப்பினர்கள் மாத்திரம் தனித்து கலந்து கொள்ளுவதும் குறிப்பிடத்தக்கது. 1965-ம் ஆண்டு தொடக்கும் ஆளும் கட்சிகளும் எமக்குமிடையில்

## அரசாங்கத் திடம்பாகுபாடற்ற அபிவிருத்தித் திட்ட இல்லை

உண்டாகிய உறவில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தின் எடுத்துக்காட்டே இதுவாகும்.

10-வது மாநாட்டை அரசாங்கத்தின் ஓா அங்கமாக நாம் இருந்து நடத்தினேம். இன்று அரசாங்க கட்சியிலிருந்து வெளியேறி தனித்தியங்கும் கட்சியாக எமது மாநாடு நடைபெறுகிறது. அன்று எமக்களித்த வாக்குறுதிப்படி தமிழ் மொழிச்சட்டவிதிகள் நிறைவேற்றப்பட்ட சூழ்நிலையில் ஏனைய வாக்குறுதிகளும் அதிவிரைவில் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையோடு கல்முனையில் கூடினோம். இன்று இவ்வரசாங்கம் எம் பிரச்னைகளை தீர்க்க இனி எதுவும் செய்ய மாட்டாது என்ற நிச்சயத்தோடு கூடியிருக்கிறோம். எனவே எமது கட்சியின் வரலாற்றில் மீண்டும் ஒரு திருப்பு முனையில் நிற்கும் இந்நேரத்தில் இனத்திற்கு சரியான வழியைக் காட்டவேண்டிய பெரும் பொறுப்பு இப்பதினோராவது மாநாட்டினதே.

**மூன்று கோரிக்கைகள்**

எமது சென்ற மாநில மாநாட்டில் தேசிய அரசாங்கத்திடம் மூன்று முக்கியமான கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. 1966-ம்ஆண்டு ஜனவரி 8-ம் திகதி நிறைவேற்றப்பட்ட தமிழ்மொழி விசேட ஏற்பாடு சட்டவிதிகளை நடைமுறைப்படுத்தவும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிர்வாகத்தை தமிழில் நடத்தவும் தக்க ஒழுங்குகள் செய்யப்படாமை குறித்து கவலைதெரிவித்து தமிழ்பேசும் மக்கள் திருப்தியடையக் கூடியதாக அந்த சட்டவிதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய நிர்வாக அமைப்பினை உடனே நிறுவும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டோம். ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் கழிந்தும் அண்மையில் வெளியிடப்பட்ட திறைசேரி சுற்றறிக்கையொன்றைத்தவிர அச் சட்டவிதிகளை அமுல் செய்வதற்கு நடவடிக்கையெதுவும் எடுக்கப்படவில்லை.

இச்சட்டவிதிகளை பூரணமாக நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு தமிழ் தெரிந்த அரசாங்க ஊழியர் பல்வேறு துறைகளில் பணிபுரிய வேண்டியது அவசியமாகும். ஐக்கிய தேசியக் கட்சி 1964-ம் ஆண்டு வெளியிட்ட கொள்கைப்பிரகடனத்தில் சிங்கள, தமிழ் அரசாங்க ஊழியர் மற்றமொழியிலும் தேர்ச்சிபெறவேண்டுமென்பதே தமது கொள்கையென்று பிரகடனப்படுத்தி

## ...ஒற்றுமைப்படுவது அவசியம்

அமுல செய்யத் தவறிவிட்டது. சிங்களத்தேர்ச்சி பரீட்சைகளின் தரத்தை உயர்த்தியும் சிங்களத் தேர்ச்சி தேவையற்ற, சிற்றூழியர்களுக்கும் சமீபத்தில் சிங்கள தேர்ச்சி நிபந்தனையை விதித்தும் 1965-ல் ஏற்கப்பட்ட மந்திரிசபை முடிவில் இருந்து இந்த அரசங்கம் விலகிவிட்டது என்பதை நான் பகிரங்கமாகக்கூற விரும்புகிறேன்.

**நடவடிக்கை இல்லை**

எமது கல்முனை மாநாட்டில். கிழக்கு மாகாணத்தில் சகல துறைகளிலும் நிறைவு பெற்றஒருபல்கலைக்கழகமும் தமிழ் பேசும் மக்களுக்காக நிறுவப்பட வேண்டுமென்று நாம் கோரினேம். சென்ற கௌரவ பிரதம மந்திரியும் கல்வி அமைச்சரும் திருகோணமலையில் ஒருபல்கலைக் கழகம் நிறுவப்படுமென்று எமக்கு உறுதியளித்தும் இதுவரை ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இத்தேசிய அரசாங்கத்தின் முதலாவது சிம்மாசனப் பிரசங்கத்திலிருந்து மாவட்ட சபைகளை நிறுவி அதிகாரத்தைப் பரவலாக்குவது தமது கொள்கையென்று ஒவ்வொரு சிம்மாசனப்பிரசங்கத்திலும் பிரகடனம் செய்து வந்தனர். இவ்வரசாங்கத்தை அமைக்க

## தீண்டாமை நோய் பலவீனப்படுத்தியுள்ளது

ஆதரவு கொடுப்பதற்கு எமது முக்கிய நிபந்தனைகளில் ஒன்ருக இருந்தது இந்த மாவட்ட சபைக்கோரிக்கையாகும். மாவட்ட சபை நிறுவுவதுபற்றிய தமதுவாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு கௌரவ பிரதமமந்திரி அவர்களும் அரசாங்கமும் தம்மாலான நடவடிக்கைகளை எடுத்தார்கள் என்பதை நாம்மறுப்பதற்கில்லை. ஆயினும் அவர்கள் இம் மசோதாவை தயாரிப்பதில் தேவையற்ற காலதாமதத்தை ஏற்படுத்தி எதிர்ப்பு சக்திகள் திரண்டு மசோதாவை முறியடிப்பதற்கு வாய்ப்பளித்தனர் என்றே கூறவேண்டும்.

**எதிர்க் கட்சிகளின் கொள்கையற்ற போக்கு**

இந்தக் கட்டத்தில் எதிர்க் கட்சிகள் நடந்துகொண்ட கொள்கையற்ற வாதத்தைப்பற்றி ஒரு வார்த்தை கூற கடமைப்பட்டிருக்கிறேன். பிரதேச சபைகள் அமைப்பதை அரசியல் அரங்கில் தனது கொள்கையாக சபை அமைப்பதை நூற்றுக்குநூறு வீதம் ஆதரிப்பதாக பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார். ஆனல்1968 ஆண்டு மசோதா தயாரான நேரத்தில் தமது கொள்கைகளை எல்லாம் காற்றில் பறக்கவிட்டு சிங்கள மக்களின் வகுப்பு வெறி உணர்ச்சியை தூண்டி அம் மசோதாவை சமர்ப்பிக்கமுடியாதசூழ்நிலையை ஏற்படுத்திய எதிர்க்கட்சித் தலைவர்களின் போக்கை அரசியலில் கண்ணியத்தை விரும்பும் எவரும் கண்டிக்கவே செய்வர். இவ் விடயத்தில் தமிழ் மக்கள் மத்தியில் இயங்கும் மற்றக்கட்சியான அகில இலங்கை தமிழ்ககாங்கிரஸ் நடந்துகொண்டவிதம் வேதனை தருவதாகும். தமிழ் மக்களை சிங்கள ஆட்சியின் பிடியிலிருந்து ஒரு சிறிதாவது விடுவிக்கக்கூடிய மாவட்ட சபை மசோதாவை ஒரு தமிழ்க் கட்சியே எதிர்த்த விபரீதமான செயலை நாடும் நாமும் கண்டுபிரமித்தோம்.

இதுவரை நான் கூறியதிலிருந்து அரசாங்கமும் எதிர்க் கட்சிகளும் நமக்கு நன்மை தரும் காரியங்களை செய்யத் யங்குவதையும் சிங்கள மக்களை ஒரு சிறிதுதானும் பாதிக்கக்கூடிய எந்தக் காரியத்தையும் செய்ய பின் நிற்பதையும் கண்டோம். அதே நேரத்தில் சிங்கள ஊழியர்களின் தொழிற் சங்கங்களும் தீவிர மனப்பான்மை கொண்ட புத்த பிக்குமார்களும் வகுப்பு வெறிகொண்ட சிங்கள அரசியல் வாதிகளும் வற்புறுத்தியவுடன் தமிழ் மக்களுக்கு இன்னல் விழைவிக்கக்கூடிய எந்தக் காரியத்தையும் தடையின்றி செய்வதையும் காண்கின்றோம்.

இதற்கு காரணம்இந்நாட்டில் சிங்கள மக்களை ஆளும் இனமாகவும் தமிழ்ப்பேசும் இனத்தை ஆளப்படும் இனமாகவும் ஆக்கிவைத்திருக்கின்ற ஒற்றை ஆட்சி அரசியல் அமைப்பேயென்பது எமது கட்சியின் தீர்க்கமான முடிவாகும். ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் வாழும் எந்த நாட்டிலும் இனவாரி பெரும்பான்மையின் கையில் அரசியல் அதிகாரத்தை ஒப்படைப்பது சிறுபான்மையினத்தின் அழிவிற்கே வழி வகுக்கும். கடந்த 21 ஆண்டுகளாக இலங்கையில் நடந்த சம்பவங்கள் இவ்வுண்மையை ஊர்ஜிதம் செய்கின்றன.

(6-ம் பக்கம் பார்க்க)

மேலும் கூறியதாவது: கழகச் சார்பில் திரு. மு. எல... தொழிலாளருக்கு இந்நாட்...

...கள். (கா. நி.)

## குழப்பம் விளைவிக்க முயலும் கட்சிகள்

### எச்சரிக்கை வேண்டும்

### என்கிறர் திரு அழகக்கோன்

யாழ்ப்பாணம், புதன்

சில பிற கட்சிகள் தமிழினத்திற்குள் புகுந்து தீண்டாமை என்ற சாட்டை வைத்துக்கொண்டு தமிழினத்தை, சிறுபான்மை, பெரும்பான்மை எனப் பிரித்து நாட்டில் குழப்பத்தை உண்டு பண்ணி வருகின்றனர். இக்கட்சிகள் மீது தமிழ் மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். கலை நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிப் பேசிய மன்னர் எம். பி, திரு. வி. ஏ. அழகக்கோன் மேற்கண்டவாறு கூறினர். அவர் மேலும் கூறியதாவது: கலைகளை அழியவிடக்கூடாது. கலை அழிந்தால் இனம் அழிந்துவிடும். ஐக்கியம் குன்றிவிடும். தமிழர் ஐக்கியப்பட வேண்டும். இல்லாவிடில் பேராபத்து ஏற்படும்.

தமிழரின் உரிமை பெற அரசாங்கத்துடன் சேருவதும், உறவைத் துண்டித்துக் கொண்டு வெளியேறுவதும் அரசியல் தந்திரங்களே. இதனை தமிழ் மக்கள் தவருக எண்ணக்கூடாது. தமிழினத்தின் விடுதலைதான் முக்கியம். (கா. நி.)

## வாக்களிக்கும் உரிமை உள்ளவர்கள்

கொழும்பு, செவ்.

அடுத்த பொதுத் தேர்தலின் போது 1968-ம் வருட வாக்காளர் இடாப்பின் படியே வாக்காளர்கள் வாக்களிப்பார்கள் எனவும் இதற்கிடையில் புதிய வாக்காளர் இடாப்பு தயாரிக்கப் படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 55 லட்சம் பேருக்கு வாக்களிக்கும் உரிமை இருக்கும்.

## ஆலயங்கள் திறக்கப்படும்

திருவனந்தபுரம், ஏப். 8

கேரளத்தில் ஹரிஜனர்களுக்கு மேலும் பல ஆலயங்கள் திறந்து விடப்படவிருக்கின்றன.

காந்தி நூற்ருண்டு விழாவை யொட்டியே இவ்வித ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## கருணநிதி காயமடைந்தார்

சென்னை, ஏப். 8

தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணநிதி இன்று பொதுக்கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் மேடையைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த பந்தல் சரிந்து விழுந்ததால் காயமுற்ருர்.

கோவில் செட்டிபாளையத்திலேயே இச்சம்பவம் நடைபெற்றது.

பலத்த மழையும் காற்றுமே இப்பந்தலை சரித்து வீழ்த்தியது பந்தல் சரிந்து வீழ்ந்தபோது திரு. கருணநிதி காயமடைந்தார். அவருக்கு அதிககாயம் ஏற்படவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது. இப்பந்தலில் தமிழக நிதிஅமைச்சர் திரு. மதியழகன் பொதுப்பணித் துறை அமைச்சர் ஜனுப் சாதிக்பாட்சா ஆகியோரும் அமர்ந்திருந்தனர்,

## பட்டதாரிகளுக்கு பிரதமர் உறுதி

கோட்டை, செவ்வாய்

அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் உடுப்பிட்டி ஆட்சிமன்ற அங்கத்தினரும் உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவைத் சந்தித்தனர். பிரதமரைச் சந்தித்த இச் சங்கத்தைச் சேர்ந்த திருவாளர்கள் கே. சதானந்தன், ஆர். சுந்தரலிங்கம், எஸ். சிவபாதம், செல்வி எம். அபயசிங்கா, எஸ். எம். டபிள்யூ. ஞானேஸ்வரா, சங். மெத கொடி தா ஜோதி, சங். ஏ. ஆர். எ. எம். எ. அநமதம் பதிலக ஆகியோர் வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினையைக் தீர்பதற்குரிய வழிவகைகள் அடங்கிய மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

இந்த மகஜரைப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுப்பதாகப் பிரதமர் இவர்களுக்கு உறுதியளித்துள்ளதோடு தான் இப் பிரச்சினை சம்பந்தமாக தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திட்ட அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். முப்பது வயதுக்கு மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பளிக்க உடனடியாக நடவடிக்கை யெடுக்கப்படுமெனவும் பிரதமர் கூறினர்.

பிரதமரைச் சந்தித்த குழுவுக்கு தலைமை தாங்கிய திரு. எம். சிவசிதம்பரம் நாட்டின் சகல துறைகளிலும் பட்டதாரிகளை நியமிக்க வேண்டுமெனச் கோரியுள்ளனர். இந்தக் கோரிக்கையை நன்கு ஆலோசனை செய்வதாகப் பிரதமர் வாக்குறுதி அளித்தார்.

......

## பரவுகிறது

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவில் குடிதண்ணீர் பஞ்சம் ஏற்பட்டுவருவதாலும், குளம், குன்றுகள் கேணிகளில் தண்ணீர்வற்றி வருவதாலும், மாடுகள் மண்டித் தண்ணீரையும், சேற்றுநீரையும் குடிப்பதால் அவற்றிற்கு கழிச்சல் நோய் பரவி வருகின்றது. இதனல் பல மாடுகள் இறக்கலாம் என அஞ்சப் படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தில் ஒளி பிறக்க ....

— கரவை கிழார் —

நட்பு, காதல், பக்தி ஆகியவற்றிற்கு அடிப்படையாக விளங்குவது விழுமிய உணர்ச்சியே. ஓர் ஆடவனுக்கும் இன்னோர் ஆடவனுக்கும் இடையே அல்லது ஓர் அரிவைக்கும் இன்னோர் அரிவைக்கும் இடையே நிகழும் உணர்ச்சிப் பிணைப்பையே நட்பு என்று அழைக்கின்றோம். ஆடவனுக்கும் அரிவைக்கும் இடையே மலரும் உணர்ச்சி இணைப்பைக் காதல் என்கிறோம். இறைவனுக்கும் அடியார்க்கும் இடையே ஒளிரும் உணர்ச்சிப் பிழம்பை பக்தி என்கிறோம். தேசத்திற்கும் தொண்டனுக்கும் இடையே அல்லது மொழிக்கும் தொண்டனுக்கும் இடையே மிளிரும் உணர்ச்சி ஒளியை தேசபக்தி அல்லது மொழிபக்தி எனச் செப்புகிறோம். காதல் வாழ்வில்மட்டுமே உடல் உறவு இடம் பெறுகிறது. மற்றைய உணர்ச்சிக் கட்டங்களாகிய மொழி பக்தி, தேசபக்தி, நட்பு, இறை பக்தி முதலியவற்றில் புணர்ச்சி இடம்பெறவில்லை. முழுமை பெற்ற விழுமிய உணர்ச்சியே முகிழ்த்து, மலர்ந்து மணமும் ஒளியும் வீசுகின்றது. இறைபக்தி கொண்ட செந்தண்மை பூண்ட அறவோர்கள் தேச பக்தி கொண்ட வீரர்களாகவும் திகழ்ந்திருக்கிறார்கள். சுவாமி விவேகானந்தர் இந்திய சுதந்திரக்கனலை தமது வீறுகொண்ட சொற்பொழிவின்மூலம் ஊட்டினார். எமது சைவநாயன்மார்களும் நாட்டுப்பற்று மொழிப்பற்று நிறைந்த நெஞ்சம்கொண்ட இறைபக்தர்களாக விளங்கி நாட்டுக்கும் மொழிக்கும் சைவத்திற்கும் தொண்டு செய்தார்கள்.

''புணர்ச்சி பழகுதல்
வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்''

எனக் கூறினார் செந்நாப் புலவர் வள்ளுவப் பெருந்தகை. புணர்ச்சியும் வேண்டாம்; பழகுதலும் வேண்டாம்; உணர்ச்சி ஒன்றே நட்புக்குப் போதுமானது. எடுத்துக்காட்டாக இந்தியாவில் வாழ்ந்த காந்தியடிகளும் ரஷ்யாவில் வாழ்ந்த அறிஞர் டால்ஸ்டாயும் ஒருவரை ஒருவர் கண்டு பழகவில்லையாயினும் உயர்ந்த நண்பர்களாக விளங்கினர். உணர்ச்சி நட்பாங் கிழமை

விண்ணிடைக்
குருகாவூர்
வெள்ளடை
நீயன்றே''

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புரிந்த இடையறாத தமிழ்த் தொண்டுபற்றி இன்னொரு தேவாரத்தில் சுந்தரர் மிக அழகாகப் பாடியுள்ளார்:

''நாளும் இன்னிசையால்
தமிழ்பரப்பும் ஞானசம்
பந்தனுக்கு உலகவர்முன்
தாளம் ஈந்தவன் பாடலுக்
கிரங்கும் தன்மை
யாளனை என்மனக்
கருத்தை
ஆளும் பூதங்கள் பாடநின்
றாடும் அங்கணன் றனை
எண்கணம் இறைஞ்சும்
கோளிலிப் பெருங்கோயி
லுளானைக் கோலக்
காவினில் கண்டு கொண்
டேனே''

மலையாள் அன்பைக்
கொட்டிவளர்க்கும் பிள்ளை
அயலவ ராகும்வண்ணம்
தமிழ்-என் அறிவினில்
உறைதல் கண்டனர்''

திருமணம் செய்யாது பிரமச்சாரியாய் இருப்பவர் துறவு பூண்டு தொண்டு செய்வதை விட, இல்லறத்தில், தாய் தந்தை, பெண்டு பிள்ளை, அண்ணன், தம்பி, உற்றார் உறவினர் என்னும் பந்தபாசத்தில் கட்டுண்டு வாழும் ஒருவன் துறவுபூண்டு சிந்தையாலும் சொல்லாலும் செயலாலும் தொண்டு புரிவதே மிக உயர்ந்தது. குடும்பத்திலும் பிள்ளைப் பாசம் உள்ளத்தை உருக்கி உணர்ச்சிப்பெருக்கை உண்டாக்குவது: உயிரையே தியாகம் செய்யத்தூண்டுவது. எனவேதான் புரட்சிக் கவிஞர் ''அன்பைக்கொட்டி

''நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும்'' என்ற அடியிலுள்ள உண்மையை, சைவமும் தமிழும் இரு கண்கள் என்றும், அவை பின்னிப் பிணைந்தவை; பிரிக்க முடியாதவை எனவும் கூறிப் புளகாங்கிதம் அடையும் சைவ மெய்யன்பர்கள் உய்த்து உணரவேண்டும். உணர்ந்தால்தான் திருஞானசம்பந்தரைப்போல நாளும் இன்னிசையால் தமிழ்பரப்ப முன்வருவார்கள்.

நமது நாயன்மார்கள் சைவத்தை மட்டும் ஓம்பி வளர்த்துப் பரப்பவில்லை. சைவம் உறையும் தமிழையும்பேணிவளர்த்துப் பரப்பினார்கள். சைவம்என்றுகூறிக் கொள்வதற்கு சான்றுகளாக உள்ள திருமந்திரமும், சிவஞான போதமும், நாயன்மார்களின் தேவாரங்களும், நெஞ்சை உருக்கும்திருவாசகமும், இன்னோரன்ன பிறவும் எந்த மொழியில் உறைகின்றன என்பதைஎண்ணிப் பார்க்கவேண்டும். தமிழ் இன்றேல் சைவம் இல்லை. தமிழ் வாழ்ந்தால்தான் திருமந்திரமும் திருவாசகமும் தேவாரங்களும் வாழமுடியும். இவ்வுண்மையை உணர்ந்து சைவமெய்யன்பர்கள் தமிழுக்கும் தொண்டாற்றவேண்டும். தமிழ் மொழியை தெய்வமாக ஏத்திப் போற்றினார், ''மனோன்மணியம்'' என்னும் நாடக நூலை இயற்றியபேராசிரியர்

வளர்க்கும் பிள்ளை'' எனப் பாடினார். அழகுதமிழ் அவர் அறிவில் உறையும்போது அன்பைக்கொட்டி வளர்க்கும் பிள்ளையும் அயலவராகத்தான் தோன்றிற்று. தமிழுக்கு ஊறு நேரும்போது எத்தகைய உயர்ந்ததியாகத்தையும் செய்யச்சித்தமாக இருக்கவேண்டும் என்பதை எழிலுற இதயத்தைத் தொடும் வகையில் பாவேந்தர் பகர்ந்திருக்கிறார்.

''ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தத் தேனினைச் சொரியும்'' திருவாசகம் தீந்தமிழில் அல்லவா பாடப்பட்டுள்ளது. செந்தமிழ்ச் சொற்களில் தேக்கிவைக்கப் பட்டுள்ள விழுமியஉணர்ச்சி வெள்ளம்உள்ளத்தில்பாயும் போதுதானே உள்ளொளிப் பெருக்கம் ஏற்படுகிறது. அத்தகைய உணர்ச்சிவெள்ளத்தைத் தன்னுள் அடக்கி வைத்திருந்து உளம்நொந்து வாடும் மைந்தர்களுக்கு உய்வுதரும் உத்தமியாம் தமிழ் அன்னையைத் தனயர்கள் மறந்தால் தரணியில் உள்ளோர் தாயை மறந்த தனயரெனத் தூற்றுவர். திருவாசகத்தின் அருமை பெருமையினை உணர்ந்த வணக்கத்திற்குரிய டாக்டர் ஜீ. யு. போப் அவர்கள் அதனை ஆங்கில மொழியில் பெயர்த்துள்ளார். அம்மொழி பெயர்ப்பு நூலின்

வோர் தம் மாணவர்களுக்கு ஓர் உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளார். ''For many years I have not ceased to ay there inIndia and here in Oxford-to successive classes of students, you must learn n t only to think in Tamil,but alsot o feel in Tamil if you are to be intelligib e and useful among the Tamil people.''

''தமிழில் சிந்திப்பது மட்டும் போதாது, தமிழில் உணரவும்வேண்டும்' என்கின்றார் டாக்டர் போப் அவர்கள்.

காந்தியடிகளின் தாய்மொழிப் பற்றின் பெற்றியை தமிழ்த்தென்றல்திரு. வி. கலியாண சுந்தரனார் பின்வருமாறு ''மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும்'' என்ற தமது நூலில் கூறுகின்றார்: ''காந்தியடிகள் என்றும் உரிமை வேட்கை உடையவராக வாழ்ந்ததைப் பார்க்கும்பேறு பெற்றோம். உரிமையின் பொருட்டுஅவர் பட்டபாடு நமக்குத் தெரியும். உரிமைக்காக அவர் உயிரையும் விட முனைந்து நின்றார். இதற்கு அடிப்படை எது? அடிகள் தாய்மொழி மாட்டுக் கொண்ட தணியா அன்பேயாகும். தாய்மொழியின் இடத்து அன்பில்லா ஒருவன் தாய்நாட்டின் அன்பனாகான். நாட்டன்பிற்கு நாட்டுமொழி அன்பேஉயிர்-உயிரென்க.''

தமிழர்கள் எல்லோரும் ஏகோபித்த விழுமிய தமிழுணர்ச்சியால் ஒருமைப்பாட்டினைப் பெற்றால் அன்றி சகோதரத்துவமோ சமத்துவமோ நிலவுவது சந்தேகமே. சமரசசன்மார்க்கத்தை போதித்து ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்காக அயராது உழைத்த அருட்சோதிவள்ளல் இராமலிங்க அடிகளாரின் திருவருட்பாதான் தமிழர்களுக்கு ஒளிகாட்டும் விளக்காக ஒளிரவல்லது.

''எத்துணையும் பேதமுறுது
எவ்வுயிரும் தம்முயிர்
போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய்
உவக்கின்றார் யாவரவர்
உள்ளந்தான் சுத்த
சித்துருவாய் எம்
பெருமான் நடம்புரியும்
இடமெனநான்
தேர்ந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கு
ஏவல்புரிந்திட என்
சிந்தை-மிக விழைந்த
தாலோ.''

## கம்பர் கவி விருந்து

# விஸ்வாமித்திரனின் நடுநிலைமை

இராமாயண இரசிகமணி
**ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்**
(நல்லை ஆதீன கர்த்தர்)

தாடகையைப் பற்றி விஸ்வாமித்திரன் கூறியதும் ராமன் என்னபதில்சொல்லுகின்றான்.

''அங்கிறைவன் அப்பரி(சு)உ
ரைப்ப அதுகேளா
கொங்குறை நறைக்குல
மலர்ச்செனி குலுக்கா''

பூச்சூட்டியதன் முடியைக் குலுக்கிக்கொண்டு இப்பேர்ப்பட்ட கொடியவள் எங்கிருக்கிறாள் என்று கேட்கிறானாம், கோதண்டராமன். அந்தக் கோதண்டத்தைதான்- ''வில் ஒன்று தாங்கினான் உலகம் தாங்கினான்'' என்கின்றான் கவிஞன். ஆம் கோதண்டத்தை இடது கையில் தாங்கிக்கொண்டு உலகம் தாங்கப்புறப்பட்டானாம் ராமன் விஸ்வாமித்திரரோடு. பெற்ற அன்னை கோசலை விடைபெறும் போது ராமனுக்குக் குஞ்சியில்பூச்சூட்டி விட்டிருக்கலாமல்லவா? அதைக் கவனித்த விஸ்வாமித்திரருக்கு தன்னைத் தாயும் நீ என்று தசரதன் கூறியபடியால்தானும் காட்டுப்பூக்களைராமனுக்குச் சூட்டி அழகுபார்த்திருக்கலாம் என்று சூட்டியிருக்கலாமல்லவா? அத்தகைய பூச்சூட்டிய தலையைக்குலுக்கிக் கொண்டுதான் அந்தப் பாலைவனராணியின் இருப்பிடம் எங்கே என்று கேட்டுவிட்டான். இந்த ராமன் யார்.

''எங்குறைவ(து)
இத்தொழில்
இயற்றுபவள்?'' என்றான்
சங்குறை கரத்தொரு
தனிச்சிலைதரித்தான்

என்று எவ்வளவு பயபக்தியோடு கம்பன் அறிவிக்கின்றான். இடதுகையில் ஏற்கெனவே இருந்த சங்கைத் துறந்து வில்லைத் தரித்துக் கொண்டானும்பரந்தாமன், ராமனாக. இப்படிப்பேசிக் கொண்டே ஒரு குன்றுக்கருகே வந்துவிட்டார்கள். அப்போதுதான் முனிவனும், ''பேசிக்கொண்டே அவள் இருப்பிடத்திற்கே வந்துவிட்டோமே'' என்கிறான். பெரும் பாறைகளும்உலர்ந்துபோன மூங்கிலும் இருந்தஇடத்தை முனிவன் காட்டி, ஐய!

இவ்வரை இருப்பதவள்
என்பதனின் முன்(பு) ஓர்
மைவரை நெருப்பெரிய
வந்ததென வந்தாள்

முனிவன் சொல்லி வாய் மூடுவதற்குள் வந்து விட்டாள். தாடகை சூலாயுதத்தை [illegible]ந்து கொன்றுவிடு[illegible] என வந்த நிலையிலும், பெண்ணல்லவா என்றுகருதி பேசாதிருக்கிறான் ராகவன். இவனது உள்ளத்தைப் புரிந்துகொண்ட முனிவன், 'ராமா இவளும் பெண்ணு!'

தீதென்(று) உள்ளவை
யாவையும் செய்(து)
எமைக்
கோதென்(று) உண்டிலள்!
இத்தனையே குறை;
யாதென்(று) எண்ணுவ(து)
இக் கொடியாளையும்
மாதென்(று) எண்ணுவ
தோ? மணிப்பூணாய்!

தீது, தீமை என்று சொல்லுக்குப் பொருளாகத் தாடகையின் செயல் என்றுகுறிப்பிட்டால் போதுமாம். இவளையா மாதுசிரோன்மணி என்று எண்ணுவது, என்கிறான் விஸ்வாமித்திரன். இப்படிச் சொல்லும்போது ராமன் சந்தேகப்படக்கூடும் என்று ஒரு விளக்கம் தானாகவே கூறுகிறான் முனிவன். முனிவனின் ஆஸ்ரமம் இவளது இருப்பிடத்திலிருந்து தூரமில்லையே; இவரை இவள் இதுவரை ஏதும் செய்ததாகத் தெரியவில்லையே என்று ராமன் எண்ணலாமல்லவா? ஜீவஹிம்சையே தொழிலாகக்கொண்டவள் இந்த முனிவனை உண்ணாமல் விட்டுவிடுவாளா என்ற சந்தேகம் ராமன் உள்ளத்தில் தோன்றக்கூடுமல்லவா? அதற்காகவே! ''எமைக்கோதென்று உண்டிலள்''. இதுவே குறை என்று முனிவன் கூறுகிறான். தங்களை அவள் உண்ணாதது, தங்கள்குறை தானும். தவமும் வேள்வியும் செய்து உடல் வற்றி எலும்பும் தோலுமாகஆகிவிட்டதாம். இந்த உடம்பு இறைச்சி என்ற பசையில்லாத சக்கைதானே இதனால் உண்ணாது விட்டு வைத்திருக்கிறாளாம் தாடகை. இப்படிப்பட்டவளை எப்படித்தாய்க்குலமாகக் கருதுவது; தகாது என்கின்றான் முனிவ . அது மாத்திரமா? இவள் யமனைவிடக்கொடியவளாம். யமபாதகன் என்று ஒரு சொல் வழக்கத்திலுண்டு. உண்மையில் யமன் அவ்வளவு பாதகனில்லையாம். யமதர்மராஜா அல்லவா? தர்மம் பார்த்து, ஆயுள் முடியும் நாள் பார்த்து, உயிரைக் கொண்டுபோகின்றான் யமன். ஆனால் தாடகையோ ஆயுளைப் பார்க்க மாட்டாளாம். அறத்தையும் நோக்கமாட்டாளாம். நரவாசனை மூக்கில் ஏறினால் போதும். அப்படிக்கூடச் சொல்லவில்லை. நரவாசனை வீசுகின்றது என்று கேட்டாலே, போதுமாம், உடனே ருசிபார்க்கக் கிளம்பிவிடுவாளாம்.

''நாற்றம் கேட்டதும்
தின்ன நயப்பதோர்
கூற்றம்''

இவளா பெண்.

'சாற்று நாள் அற்ற(து)'
என்று தருமம் பார்த்(து)
ஏற்றும் விண்ணெனப(து)
அன்றி இவளைப்போல்
நாற்றம் கேட்டதும்
தின்ன நயப்பதோர்
கூற்றம் உண்டுகொல்?
கூற்(று)உறழ் வேலினாய்

வசிஷ்ட மகரிஷியின் ஞானபுத்திரனாகிய ராமனை நோக்கி ராஜரிஷியான விஸ்வாமித்திரன், ''உனக்கு உலகஞானம் போதாது ராமா. அதனால்தான் மின்னுவதெல்லாம் பொன்னாகக் காண்கின்றாய். அப்படி நினைப்பது புத்திக் குறைவு என்று தெளிவாகத் துணிவுடன் முனிவன் கூறுகின்றான்.

'பின்னும் தாழ்குழல்
பேதைமைப் பெண் இவள்
என்னும் தன்மை,
எளிமையின்பாலதே'

என்கிறான் முனிவன். கடைசியாக முனிவன் ஒரு நீதிபதிபோல் தீர்ப்புக் கூறுகிறான். நீதிபதிக்குக் குற்றவாளிமீது கோபமோ துவேஷமோ கிடையாது. அதுபோல் தாடகைமேல் தனக்குக் கோபமோ, துவேஷமோ கிடையாதாம். தீர்ப்புக் கூறுகிறான்,

'ஈறில் நல்லறம்
பார்த்(து) இசைத்தேன்;
இவள்
சீறி நின்றிது
செப்புகின்றேன்
அலேன்:
ஆறி நின்ற(து)
அருளன்(று) அரக்கியைக்
கோறி'

தாடகையைக் கொல்ல வேண்டும், இன்றே கொல்ல வேண்டும், இப்போதே கொல்லவேண்டும், தயங்காமல்-தாமதியாமல் கொல்ல வேண்டும். இதுவே அருள் என்கின்றான். ஆனால் இளைஞனான ராமனுக்கோ, ''ஹிம்ஸையே அஹிம்சையாகும்'' என்ற கொள்கை தெளிவாகப் புரியவில்லை. ராமனது பதிலைக் கேளுங்கள்.

(தொடரும்)

# ஞானப்பிரகாசர் பிறந்த ஊரில் அவரது குருபூசை நடைபெற்றது

## மணிமண்டபம் நிறுவவும் தீர்மானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாம்; உணர்ச்சி ஒன்றே நட்புக்குப் போதுமானது. எடுத்துக்காட்டாக இந்தியாவில் வாழ்ந்த காந்தியடிகளும் ரஷ்யாவில் வாழ்ந்த அறிஞர் டால்ஸ்டாயும் ஒருவரை ஒருவர் கண்டு பழகவில்லையாயினும் உயர்ந்த நண்பர்களாக விளங்கினர். உணர்ச்சி நட்பாங் கிழமையைத் தந்தது. கோப்பெருஞ் சோழன் உயிர்நீத்தான் எனக் கேள்வியுற்ற பிசிராந்தையார் வடக்கிருந்து தம்முயிரையும் நீத்தார். இவ்விரு உயர்ந்த நண்பர்களும் ஒருவரை ஒருவர் நேரில் கண்டு பழகியதில்லை.

சுந்தரமூர்த்தி நாயனார் தம் தாய் மொழியாகிய தீந்தமிழ்மீது தீராக் காதல் கொண்டு இறைவனை ஏத்திப் போற்றி நாளும் தொண்டு செய்தார். இறைவனையே தமிழுக்கு ஒப்பானவன் என மொழிகின்றார், பின்வரும் தேவாரத் திருப்பதிகத்தில்:

“பண்ணிடைத் தமிழ்
ஒப்பாய்
பழத்தினில் சுவை
ஒப்பாய்
கண்ணிடை மணி
ஒப்பாய்
கடுவிருட் சுடர்
ஒப்பாய்
மண்ணிடை
அடியார்கள்
மனத்திடர்
வாராமே

தமிழ் வாழ்ந்தால்தான் திருமந்திரமும் திருவாசகமும் தேவாரங்களும் வாழமுடியும். இவ்வுண்மையை உணர்ந்து சைவமெய்யன்பர்கள் தமிழுக்கும் தொண்டாற்றவேண்டும். தமிழ் மொழியை தெய்வமாக ஏத்திப் போற்றினர், “மனோன்மணியம்” என்னும் நாடக நூலை இயற்றியபேராசிரியர் சுந்தரம்பிள்ளை

,இறைவனை அடைவதற்கு உலகத்திலுள்ள அத்தனை பந்தங்களையும் சொந்தங்களையும் துறந்துவிட்டதாக மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளினார்.

“உற்றாரை
யான்வேண்டேன்
ஊர்வேண்டேன்
பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்
. கற்பனவு மினியமையும்
குற்றாலத் தமர்ந்துறையும்
கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருகவேண்டுவனே”

மொழிமீது நீங்காப் பற்றுக்கொண்ட புரட்சிக்கவிஞர் பாரதிதாசனும் பந்தத்தையும் சொந்தத்தையும் தமிழுக்காகத் துறந்துவிட்டதாகத்தான் பாடினர்...

“பயிலுறும் அண்ணன் தம்பி
அக்கம் பக்கத்துறவின்
முறையார்
தயைமிக உடையாள்
அன்னை என்னைச் சந்ததம்
மறவாத் தந்தை
குயில்போற் பேசிடும்

தமிழ் அன்னையைத் தனயர்கள் மறந்தால் தரணியில் உள்ளோர் தாயை மறந்த தனயரெனத் தூற்றுவர். திருவாசகத்தின் அருமை பெருமையினை உணர்ந்த வணக்கத்திற்குரிய டாக்டர் ஜீ. யு. போப் அவர்கள் அதனை ஆங்கில மொழியில் பெயர்த்துள்ளார். அம்மொழி பெயர்ப்பு நூலின் முன்னுரையில் அவ்வற

ஒத்துரிமை உடையவராய்
உவக்கின்றார் யாவரவர்
உள்ளந்தான் சுத்த
சித்துருவாய் எம்
பெருமான் நடம்புரியும்
இடமென நான்
தேர்ந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கு
ஏவல்புரிந்திட என்
சிந்தை-மிக விழைந்த
தாலோ.”

இவ்வரை இருப்பதவள்
என்பதனின் முன்(பு) ஓர்
மைவரை நெருப்பெரிய
வந்ததெனை வந்தாள்
முனிவன் சொல்லி வாய்
மூடுவதற்குள் வந்து விட்டாள். தாடகை சூலாயுதத்தை எறிந்து கொன்றுவிடுவேன் என வந்த நிலையிலும், பெண்ணல்லவா என்றுகருதி

# பகவானும் பாபுவும் — மீராபென்

[ஜனவரி 30-ம் தேதி, சுமார் 7-30 மணிக்குப் படுகொலைபற்றிய செய்தி எனக்குக் கொண்டுவரப்பட்டது. நான் வெளியே தாழ்வாரத்திற்கு வந்திருந்தேன். அச்சொற்கள் என் காதில் விழுந்ததும் நான் செயலற்று நின்றுவிட்டேன். வானை நோக்கிக் காட்டு மரங்களுக்கு அப்பால் ஒளி வீசிக்கொண்டிருந்த விண் மீன்களைக் கண்டேன். ‘பாபு, பாபு, கடைசியில் அது நடந்து விட்டதே’ என்ற சொற்கள்தான் இதயத்தில் ஒலித்தன. அதன் பின்பு, பொறிகளையே தகர்த்த, அதிர்ச்சிக்கும் மேலான, அமைதி உணர்வு ஓங்கியது.

சில நாட்களுக்குப்பின் பத்திரிகைகளுக்கு நான் எழுதிய கட்டுரையைக் கீழே தருகின்றேன்.

## ஒன்றுகிவிட்டனர்

எனக்கு இருவர் தான் இருந்தனர். பகவானும், பாபுவும். இப்பொழுது அவர்கள் இருவரும் ஒன்றுகிவிட்டனர்.

அச்செய்தியை நான் கேட்டபோது என் அகத்தே அந்தரங்கத்தின் அடித்தளத்தில் ஏதோ ஒன்று திறந்தது-சிறைப்பட்ட ஆன்மாவுக்கு வாயிற்கதவு; பாபுவின் ஆவி அங்கு குடிகொண்டது. அக்கணம் முதற்கொண்டு, அழிவற்ற அமரத்துவம்பற்றிய புதிய தார் உணர்வு என்னுள் குடிகொண்டுள்ளது.

பேரன்பிற்குரிய பாபு, ஊனுடலில் நம்முடன் இனி இருக்கமாட்டார் எனினும், அவர் புனித ஆவி முன்பை விட நம்முடன் நெருங்கியுள்ளது. “இந்த யாக்கை இல்லாதபோது, பிரிவு நேரிடாது; நான் உனக்கு இன்னும் அருகாண்மையில் இருப்பேன். யாக்கை ஒரு தடையேயாகும்’ என்று சில சமயங்களில் பாபு என்னிடம் கூறியதுண்டு. விசுவாசத்துடன் அவர் சொல்லுக்கு நான் செவிசாய்த்தேன். இன்றே, அனுபவத்தின் மூலம் அச்சொற்களின் தெய்வீக உண்மையை நான் உணர்ந்துள்ளேன்.

என்ன நேரிடப்போகிறது என்பது பாபுவுக்குத் தெரியுமா? டில்லியைவிட்டு ரிஷிகேஷுக்குப் புறப்படுவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்பு, டிசம்பர் மாதத்தில் ஒருநாள் மாலையில் பாபுவிடம் நான் கேட்டேன். “பாபு மார்ச்சு மாதத்தில் மாட்டுத் தொழுவங்கள்கட்டிமுடித்து வேலையையும் கட்டுப்பாடாக அமைத்தபின் திறப்பு விழாவுக்கு நீங்கள் வந்து வேதனைப்பட்டு பரிதாபத்திற்குரியதாக உள்ள இந்தியப் பசுவுக்குஉங்கள் ஆசீர்வாதத்தை அளிக்கச் சிறிது அவகாசம் கிடைக்குமா?” “நான் வருவதுபற்றி எண்ணுதே” என்று பாபு பதிலளித்துவிட்டுப் பாதி தமக்குத்தாமே பேசிக்கொள்வதுபோல், “பிணத்தை நம்பிப் பயனென்ன’ என்று கூறினர். அச்சொற்கள் மிகப் பயங்கரமாக இருந்ததால் அவற்றை நான் எவரிடமும் சொல்லாமல் என் இதயத்தில் மௌனமாகப் பூட்டிவைத்து, இறைவனுக்கு ஒரு பிரார்த்தனையையும் அத்துடன் சேர்த்தேன். உண்ணு நோன்பு தொடங்கி முடிந்தது. அவர் சொன்ன சொற்களின் பொருளுக்கு இனிப்பொருத்தமில்லை என்று நான் எண்ணினேன். ஆனல் அவர் சொன்ன சொற்கள் தூரதரிசனத்துடன் சொல்லப்பட்டவை. அந்த ஞான திருஷ்டி நிறைவேறியும்விட்டது.

அத்துன்ப மாலையிலே நான் நேராக அமர்ந்து செயலற்றுத் தியானத்தில் ஆழ்ந்திருந்தபோது, உலகம் முழுவதும் வேதனையின் நடுக்கம் பாய்ந்தது போன்ற உணர்வு என்னை ஆட்கொண்டது. மனித இனம் உய்வதற்காக [illegible] தாரப் [illegible] தம் சிந்திய ஒரு கொடிய பாவச் செயலின் சுமையும் பயங்கரமும் தாளமல், உலகமே ஓலமிட்டது.

அப்பாவம் ஒருமனிதனின் பாவமல்ல; யுகத்திலிருந்து யுகம்வரை உலகனைத்தும் பெருக்கெடுக்கின்ற பாவம் அது. இறைவனுக்குப்பிரியமானவர் சிலுவையில்அறைபடுவதன் மூலம், அப்பாவப் பெருக்த்தைத் தடுத்து அணைபோட முடியும்.

பாபு நமக்கு விட்டுச் சென்றுள்ள பணியைஇனிது நிறைவேற்ற நாம் பகீரத முயற்சி செய்யவேண்டும். பாபு வாழ்ந்ததும் இறந்ததும் நம் அனைவருக்காக-ஆண், பெண், குழந்தை ஒவ்வொருவருக்குமாக. பகைமை, பேராசை, வன்முறை, பொய்மை எனும் தீயவழியிலிருந்து நம்மைத் திருப்பும் பொருட்டுப்பாபு, தம் வாழ்நாளில் ஓயாது உழைத்தார்; அதற்காகவே தியாகமரணத்தையும் தழுவினர். நம் பாவங்களுக்காகப் பிராயச்சித்தம் செய்து பாபுவின் புனிதக்குறிக்கோளுக்காகத் தொண்டாற்றவேண்டுமானல், வகுப்புவாதம் எந்த வடிவில் அது தோன்றியிருந்தாலும், ஒழிய வேண்டும். அத்துடன், கள்ள வாணிபம் லஞ்ச ஊழல், நியாயமற்ற நேசச்சலுகைகள், பொருமை, பகைமை, உணர்வு-இவை போன்று, பொய்மை, வன்முறை ஆகியவற்றின் எண்ணற்ற இருட்தோற்றங்கள் அனைத்தும் அகலவேண்டும். உறுதியான மனத்துடன், தயங்காத கையுடனும் அவற்றை எதிர்க்கவேண்டும். பாபு அன்பே உருவானவர்; மென்மையே அவர் பண்பு. ஆயினும் தீயவற்றுடன் போராடுவதில் அவர் சிறிதும் இரக்கம் காட்டவில்லை.

நம்மகத்தே இருந்த தீமையை வென்றதால்தான். புறத்தே தலைதூக்கிய தீமையுடன் பாபுவால் போராட முடிந்தது. நம்முன்னுள்ள மகத்தான பணிக்கு நம்மை ஒரு அருங்குதயாக்கும் வகையில், இறைவன் நம்மைத் தூய்மைப்படுத்துவாராக.

[காந்தி நூல்கள் 16-வது தொகுப்பிலிருந்து]

# செழிக்கவே வருக சித்திரை

— வே. குமாரசாமி —

குயிலும் பாடல்செய குலவு தென்றல் மெலக்
குளிர மேனி தழுவவே
மயிலும் ஆடஒளி மிளிரவே அழகு
மலர, வெய்யகதிர் துளிரவே
பயிலும் மாதர்இசை பரவவே அருமைப்
பருவ மேதவழும் தொனியிலே
செயலில் ஓங்குவன உலகிலே உளது
செழுமை யோடெழுக, மகிழவே.

கருணை கூரப்பெருங் கலைகள் வாழ எழில்
கவிகவே இன்பம்பொழிக, வான்
தெருஉ லாவிவரும் புதுமை ஞானம் மிகப்
பொலிக, நாளும் நலன் வளரவே
உருகும் ஏழை எம துழவரின் துயரும்
ஒழிக, மேநிலையில் உயரவே
சொரிக, வாழ்வுதனில் தருமமே பெருக,
செழிக்க வேவருக சித்திரை.

அமுத மென்தமிழின் அழகுசா ரவரு
அருமை யான தமிழிலே
அமரும், பின்பனியின் பின்பிறந் துவரும்
புகழினள் சித்திரையினள்
கமல மொட்டவிழ, கனலை விட்டகல
கலைகள் மிக்கு தரம்நிலவவே
எமது தோள்களிலே இணையிலா வலிமை
இயைய வேவருக வருகவே.

# ஞானப்பிரகாசர் பிறந்த ஊரில் அவரது குருபூசை நடைபெற்றது

## மணிமண்டபம் நிறுவவும் தீர்மானம்

ஞானப்பிரகாசமுனிவர் அவதரித்த யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலியில் பங்குனித்திங்களில் பூசநட்சத்திரத்தன்று அதாவதுகடந்த 28-3-69 திகதியன்று குருபூசையும் விழாவும் சிறப்பாக நடைபெற்றன.

ஞானப்பிரகாச முனிவர் பெருமான் தில்லைச்சிதம்பர தேவனின் திருவடியடைந்து கிட்டத்தட்ட முன்னூற்று நாற்பது ஆண்டுகளாகின்றன. அது நடந்தது பங்குனித்திங்கள் பூசநட்சத்திரத்தன்று. வருடம் சரியாகத் தெரியவில்லை.

இதுகாறும் திருநெல்வேலியில் நடவாத குருபூசையும் விழாவும் இப்பொழுது நடந்தேறியதற்குக் காரணமென்ன? ‘ஈழநாடு வாரமலர்’ செய்த தொண்டேயாம். சென்ற சில வாரங்களாக ‘நாவலர் பெருமான் ஐந்தாங்குரவர்’ என்ற தலைப்பில் தொடர்ந்து சில கட்டுரைகள் வெளிவந்ததும், அவற்றில் ஞானப்பிரகாச முனிவரைப்பற்றிக் குறிப்பிடப் பட்டிருந்ததும் நினைவிருக்கலாம். இதனைக் கண்ணுற்ற திருநெல்வேலி சைவமுன்னேற்றக் கழகத்தார் விழிப்புப்பெற்று, இதுவரை முனிவர் பற்றி எதுவும் தெரிந்து கொள்ளாதிருந்துவிட்டோமெனக்கவலையுற்றதுடன் இனிமேலும் வாளாதிருப்போமாவென்று குறிக்கோளுக்காக உலகைத் துறந்த உத்தமன் எங்கள் கிராமத்தில் 400 ஆண்டுகளுக்குமுன் அவதாரம்செய்தமை எமக்கே தெரியாதிருந்த போது அதனைச்சுட்டிக்காட்டியபெருமை ‘ஈழநாடு’க்கேயென்று விழாவின்போது பேசிக்கொண்டனர்.

அனுமான் சஞ்சீவிமலையைக் கொண்டு வந்தது போல, கழகத்தார் ஞானப்பிரகாசமுனிவரின் படத்தை வரைவித்து, விரிவுரைக்கூட்டமும் விழாவும், குருபூசையும் நடந்த விடத்தில் தொங்க விட்டிருந்தார்கள். மக்கள் அதை ஆவலுடன் தரிசித்தார்கள். துறைபோகக் கற்றவர்கள் விரிவுரையாற்றினர்கள். சில முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை வருமாறு:

1. சைவமுன்னேற்றக்கழகமென்பதை மாற்றி ‘ஞானப்பிரகாசமுனிவர் சபை’ எனப் பெயரிடுவது; 2. வருடந்தோறும் முனிவர் பெருமானின் குருபூசையை நடத்துவது. அவ்வமயம் மகேசுர பூசை செய்வது; 3. முனிவரின் உருவப்படத்தைச்சைவ பரிபாலனசபை நாவலராச்சிரம மண்டபத்திலிருந்து, ஊர்வலமாக மேளவாத்தியத்துடன் விழா நடக்கும் திருநெல்வேலிக்குக் கொண்டுவருதல் வேண்டும்;

4. முனிவர்பெருமானெழுதிய சிவஞானசித்தியாருரையை எல்லாருக்கும்பயன் படக்கூடியவிதத்தில் அச்சேற்றுவித்தல் வேண்டும்;

5. முனிவர்பெருமான்குடியிருந்த போராராட்சியார் என்ற காணியில் அவருக்குக் கோவில்கட்டுதல், நூல்நிலையம், மணிமண்டபம்அமைத்தல் வேண்டும்;

6. முனிவர் பெருமான் வடமொழியில் எழுதிய பத்து நூல்களையும் ஒவ்வொன்றுகத் தமிழில் மொழிபெயர்த்தல்.

7. முனிவர் பெருமானின் சரித்திரத்தைத் தூய தமிழில் எழுதி, நாடெங்கும் பரப்புதல்.

8. பசுக்களையும் காளைகளையும் வதை செய்யாமல் ஓம்புதல். இவைபோன்ற நற்பணிகளில் ஞானப்பிரகாச முனிவர்சபை ஈடுபடவேண்டுமென்று ஏகமனதாக ஏற்கப்பட்டது.

தீயானது முற்றுக அவிந்துகொண்டு போகின்ற நிலையிலே ஒரு பொறிமாத்திரம் எஞ்சியிருந்து மீண்டும் பெருந் தீ ஏற்பட ஏதுவாயிருப்பதைப்போல, முனிவர் பெருமானின் நினைவை அடியோடு மறந்துபோகாமல் காத்த பெருமை யாழ்ப்பாணத்து சைவ பரிபாலன சபைக்கே முழுவதும் உரியது.

இச்சபை, இற்றைக்கு எண்பத்திரண்டு வருடங்களுக்குமுன், நாவலர் பெருமானின் அடிச்சுவட்டைப் பின்பற்றி சைவத்திற்கும், தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் தொண்டாற்றிவந்த சைவப் பெரியார்களால் நிறுவப்பட்டது. யாழ். இந்துக் கல்லூரியை ஸ்தாபித்ததும் இந்தச் சபையே. ஞானப்பிரகாச அச்சுயந்திரசாலையை ஸ்தாபித்து தமிழுக்கும் சைவத்திற்கும் இச்சபை தொண்டாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. தமிழிலும் ஆங்கிலத்திலும் சமயப் பத்திரிகைகள் இரண்டை இச்சபை நடத்திவருவதுடன் அறுபத்துமூன்று நாயன்மாருடைய குருபூசைகள், நாவலர்பெருமானின் குருபூசை ஞானப்பிரகாசமுனிவரின் குருபூசைகளை நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.

சைவபரிபாலனசபை ஞானப்பிரகாச முனிவர் பெருமானின் குருபூசையை வருடந்தோறும் கிரமமாக நடத்திவந்ததினலும், ‘ஈழநாடு’ வாரமலர் முனிவரைப்பற்றி கட்டுரைகள் வெளியிட்டதனலும் திருநெல்வேலி மக்கள் விழித்தெழுந்துவிட்டார்கள்; இனி அச்சமில்லை.

‘ஐந்தாங்குரவர் ஆறுமுக நாவலர்’ என்ற தொடர் கட்டுரையில், நாவலரை அறிந்துகொள்வதற்கு அவரது காலத்தை அறிந்துகொள்வது அவசியமென்றும், அவர் காலத்தைத் தெரிந்துகொள்வதற்கு முன்னைய காலத்தை அறிவது அவசியமென்றும்கூறி, நாவலருக்கு முன்னைய காலக்கட்டத்தை, கடந்த கட்டுரையில் ஆராய்ந்திருந்தோம். மிகுதியை அடுத்த வாரம் காண்போம்.

## அறநெறிக் காவலர் முதலியார் செ. முத்துத்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பனை மீண்டும் காண...

—காரை செ. சுந்தரம்பிள்ளை—

கம்பனை மீண்டும் காணக்
காத லொன் றுருவே யாகி
அம்புவி யாவும் சுற்றி
அலைந்துயான் அலுத்தே போனேன்
வெம்பிடும் உள்ளத் தோடு
வேதனைத் துயரத் தோடு
நம்பிக்கை யிழந்தி டாது
நடந்திட லானேன் எங்கும்

காவியக் கலைஞன் நல்ல
கற்பனைக் கவிஞன்; சொல்லால்
ஓவியம் தீட்டு கின்ற
ஒளிமிகு புலவன்; பூத்த
வாவியை ஒத்த ராமன்
வாழ்கதை பாடி வைத்திப்
பூவினில் புகழாம் முச்சிப்
பொருப்பினில் நிற்கும் மேலோன்

அன்னவன் தன்னைக் காணும்
ஆசைமே லீட்டால் இந்தச்
சின்னவன் தேச மெல்லாம்
திரிந்தலைந் திறுதி யாகத்
தென்னவர் தமிழ கத்தார்
திராவிடர் உறையும் நாடாம்
சென்னையை அடைந்தேன், அங்கே
சிலையான கம்பன் நின்ருன்.

### வேறு

செத்தவர்க்கே சிலை வைக்கும் தமிழ்த்திருச்
சேய்கள் பிறந்த மண்ணில்
நித்தமும் வாழும் உனக்கா சிலையென
நெஞ்சம் உருகி நின்றேன்

அப்பொழுதந்தச் சிலையசைந் திட்டது
ஆவி வரப்பெற்றது
இப்படிவா மகனே யென்றழைத்தது
இவற்றை உரைத் திட்டது.

### வேறு

என்னைத் தூக்கித் தலையில் வைக்கும்
இந்தக் கால மக்கள்
என்ன செய்கின்ருர்க ளென்ப
வெண்ணிப் பார்க்க வேண்டும்
தன்னிகரில் ராம காதை
சாற்றும் நீதி முறைகள்
ஒன்றையேனும் அனுச ரிக்கா(து)
உளறித் திரிகின் ருர்கள்.

### வேறு

சத்தியம் காத்த தயரதனுக்கிணை
தாரணி மீதில் இல்லை - என
நித்தமும் பேசித் திரிந்திடுவோ ரிங்கு
நீசராய் வாழு கின்ருர்
உத்தம ராமன் கதையுரைப்பார்-ஒரு
உண்மை புகன்றிடார்கள் - பெரும்
சுத்தர்கள் போல்நடிப்பார் ஏழை மக்களைச்
சுரண்டிப் பிழைத் திடுவார்.

தாய்மைக் கிலக்கண மாகிய கோசலை
சத்வ குணம் படைத்தாள் - என்று
வாய்கிழியத் தினம் பேசிநிற்பார் அதை
வாழ்வில் அனுசரியார்
பேய்மைக் குணமுடையாள் கூனியென்று
பிதற்றித் திரிவதல்லால்-அந்தப்

# ஒரு வரலாற்றுச் சித்திரம்

**மானிருக்கும் இடத்தோடும் வலத்தோடும் கைலையினீர்**
**கூனிருக்கு மதி முடித்து குடியிருப்பதறியாமல்**
**ஊனிருக்க உயிரிருக்க உரையிருக்க நாவிருக்க**
**நானிருக்க இன்றளவும் ஏத்தாமல் இருந்தேனே.**

[வரராமதேவன் மலைக்குகையில் வைத்துச் சென்ற செப்பேட்டையும், திரவியங்களின் விபரங்களையும் குளக்கோட்டு மன்னனுக்கு மக்கள் கூறுகின்ருர்கள். மன்னவன் செப்பேட்டை எடுத்துப் படித்தான், அங்கிருந்த திரவியங்களையும், தான் கொண்டுவந்த திரவியங்களையும் எடுத்து தந்தையார் விட்டுச்சென்ற ஆலயத் திருப்பணியைச் செய்யத் தொடங்கினுன்.]

**குளக்கோட்டன்:-** அமைச்சரே! எனது தந்தையாராகிய வரராமதேவனுடைய ஆத்ம திருப்தியனைத்தும் இந்தச்செப்பேட்டில் பிரதிபலிக்கின்றதை நான் நன்கு உணர்ந்துகொண்டேன். திரிகரண சுத்தியோடு என் தந்தையார் ஆரம்பித்துவைத்த கோணநாயகரின் ஆலயத் திருப்பணியைக் காணும் பாக்கியம்பெற்றேன். செப்பேட்டில் திட்டமிடப்பட்டிருக்கும் திருப்பணியைச் சோழப்பரம்பரையின் புகழ் ஈழத்தில் நின்று நிலவத்தக்க ஆலயத்தை அமைக்கலாம். அப்பணியைச்செய்யத் தக்க உலககுரு ஆசாரி சித்திர குரு ஆசாரி, சதுர்வேதகுரு ஆசாரி, அட்சர குரு ஆசாரி, வாமதேவ குரு ஆசாரி ஆகிய ஐவரும் நம்பாலுளர். அவர்களிடம் ஆலயத் திருப்பணியை ஒப்படைக்கலாமே

**குளக்கோட்டன்:-** அது நல்ல யோசனைதான். இன்றேஅவர்களை அழைத்து வேண்டிய திரவியங்களைக் கொடுத்து திருப்பணி வேலைகளை ஆரம்பிப்போம்.

**2**

[குளக்கோட்டு மன்னன் கோணநாயகப் பெருமானுக்கு ஆலயம் அமைக்கத் தொடங்கி நான்கு திக்குகளிலும் கோபுரங்களை எழுப்பலும் ஒருதலையாய்ச் சொல்லலும்வல்ல தமைச்சு'' என்ற மறைமொழியை மெய்ப்பித்துவிட்டீர்கள்.

**மந்திரி:-** அரசே! மருங்கூரிலிருந்து கொண்டுவரப்பட்டவர்களுக்கு தானத்தார் என்றும், காரைக்காலிலிருந்து கொண்டுவரப்பட்ட வர்களுக்குவரிப்பத்தார் என்றும், நாமஞ்சூட்டி கொட்டியாபுரப்பற்று, கட்டுக்குளப்பற்று, தம்பலகாமப் பற்றுக்களில் குடியேற்றியுள்ளேன். ஆலயத்திற்செய்யவேண்டிய தொழும்புகளையும் வரையறுத்து அவர்களிடம் ஒப்படைத்துள்ளேன். இவை அனைத்தையும் தனியுண்ணப் பூபாலவன்னிமை பரிபாலித்து ஆலயத் திரவியங்களின்கணக்குகளையும் கவனித்துக்கொள்ள ஏற்பாடுசெய்திருக்கின்றேன் மன்னவா.

**குளக்கோட்டன்:** என்ன.... ஏற்பாடுகள் செய்துவிட்டீர்களா...இம்... இன்னும் ஒரு கவலை என் மனத்தைக் குடைந்துகொண்டிருக்கிறது. எம்பெருமானின் ஆலயத்திலே நித்திய நைமித்தியங்கள் குறைவின்றி நடைபெறுவதற்காக நாளொன்

இன்னே கலத்தில் ஏற்றி
ஏகிடச் செய்குவாய்.

விசித்திரயூகியே! இப்பொழுதே சேனைகளுடன் திருக்கோணமலைக்குப் புறப்பட்டுப் போய் அவன் செய்திருக்கும் திருப்பணிகளை அழித்து, அவனையும் மரக்கலத்தில் ஏற்றி அனுப்பிவிட்டு வா.

**விசித்திரயூகி:** மகாராணியே! தங்கள் கட்டளையை நிறைவேற்ற இப்பொழுதே கோணமாமலைக்குப் புறப்படுகிறேன்.

**4**

**விசித்திரயூகி:** (தனக்குள்ளாக) பல வருடங்களுக்குப் பின்னர் கோணமாமலையைப் பார்க்கின்றேன். பொருட்சிறப்பும் அருட் சிறப்பும் பொலிந்து விளங்கும் புனித பூமியாகக் காட்சி அளிக்கிறதே. இந்த மாபெரும் ஆலயத் திருப்பணியைச் செய்த குளக்கோட்டு மன்னனைப் பற்றி மக்கள் கூறுவதைக் கேட்டால் நமது அரசியாரின் கட்டளையை நிறை

உண்டு. அவரிடம் கூறி குளம் கட்டுவதற்குரிய ஏற்பாடுகளை உடனே செய்கின்றேன். தாங்கள் கவலை ஒழியுங்கள்.

ஆடகசௌந்தரியின் உதவியுடன் குளக்கோட்டுமன்னன் கந்தளாய்க்குளத்தைக் கட்டுவித்தான். 2700 அவணம் நெல்விதைக்கும் வயல்வெளிகளை உண்டாக்கினுன். கோணநாயகரின் நித்திய நைமித்தியங்கள் குறைவு படாமல்நடைபெற ஏற்பாடுகள் செய்தான். ஆலயத்துக்கும் குடிமக்களுக்கும் மானியங்கள் வழங்கினுன். குளக்கோட்டுமன்னனுக்குப் பின் பதின்மூன்ரும் நூற்ருண்டில் புவனேகவீர பாண்டியன் கோணமாமலைக்கு வந்து ஆலயத்துக்கு மானியம் வழங்கினுன். பாண்டிய மன்னரின் இருகயல் இலச்சினையை கோணேஸ்வரத்தில் பொறித்து அச்சிலாசாசனத்தில்

முன்னே குளக்கோட்டன்
மூட்டும் திருப்பணியை
பின்னே பறங்கி
பிரிக்கவே-மன்ருகேள்
பூனைக்கண் செங்கண்
புகைக்கண்ணன் போனபின்
தானே வடுகாய் விடும்.

# கோணமாமலை

செய்வதற்கு, இறைவா! நீயே அருள்பாலிக்கவேண்டும். தேவாதி தேவா! என் தந்தையாரின் . விருப்பம் மாத்திரம் என்ன, என்விருப்பத்தையும் நீயே நிறைவேற்றியருளவேண்டும்.

**மந்திரி:-** மன்னவா! ''எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின்'' என்னும் மறைமொழி பொய்யாகிப்போய் விடுமா? தங்களது உறுதியும் கோணநாயகர்மீது தாங்கள் வைத்திருக்கும் பக்தியும் பேரன்பும் உங்கள் எண்ணத்தை நிறைவேற்றும் என்பது எனது துணிபு. அறுபத்து நான்கு - கலாசாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த வல்லுனர்கள் நம்முடன் வந்திருக்கின்ருர்கள். நீங்கள் காலால் இட்டவேலையைத் தலையாற் செய்துநிறை

பினுன். ஆலயத்தைச் சூழ மணிமதில் அமைத்தான். கோணநாயகப் பெருமான் எழுந்தருளிவந்து தீர்த்தம் ஆடபாபநாச சுனைக்கருகே ஆயிரங்கால் மண்டபத்தைக் கட்டினுன். வேதியர்கள், முனிவர்கள், தலயாத்திரிகர்கள் வந்து தங்குவதற்காக மண்டபங்களை அமைத்தான். கோணநாயகர் எழுந்தருளி வருவதற்கு ரதத்தையும் ரதோற்சவம்நடத்தவீதிகளையும் அமைத்தான். திருப்பணிவேலைகள் பூரணமாக நிறைவேறியபின்பு மங்கள வாத்தியங்கள் முழங்க, முனிவர்கள்வாழ்த்தொலிஎழுப்ப பஞ்சாட்சரத்தின் மேன்மை விளங்கச் சிவனடியார்களின் வினைகள் நீங்க, தானதருமங்கள் [illegible] சைவநெறி தழைக்க [illegible] யும் மாதுமை அம்பாளையும் பிரதிஷ்டை செய்து ஆகம

றுக்கு இரண்டவணம் அரிசி வேண்டும். தொழும்பாளர்களின் பராபரிப்புக்காக மானியம் வழங்கவேண்டும். இதை உத்தேசித்து காடு திருத்திக் கழனிகள் அமைத்தோம். கழனிகளை நீர்ப்பாய்ச்ச அல்லைக்குளம், வெட்டரசன் குளங்களை வெட்டினேம். அவற்றில் தேக்கப்படும் நீர் போதாமையால் விளைவு குன்றிவிட்டது. என்ன செய்வது என்று தோன்றவில்லை.

**3**

[கோணமாமலையில் குளக்கோட்டு மன்னன் கோயில் [illegible] காலத்தில் ஈழநாட்டின் தென்பகுதியிலே உன்னுச்சி கிரியிலிருந்து அரசு புரிந்து வருகிருள். ஆடக

வேற்றலாம்போல் தோன்றவில்லை. சரி; எதற்கும் மன்னனையே நேரில் பார்த்துவிடுவோமே.

(விசித்திரயூகி குளக்கோட்டு மன்னனைச் சந்தித்துப் பேசுகிருர்)

**விசித்திரயூகி:** மன்னவா! நான் உன்னுச்சிகிரியிலிருந்து அரசு புரியும் ஆடகசௌந்தரி அரசியாரின் மந்திரி. விசித்திரயூகி என்பது என் பெயர். தாங்கள் கோணமாமலையில் செய்திருக்கும் திருப்பணிகளைக் கேள்வியுற்ற அரசி, மகிழ்ச்சி அடைந்து தங்களுக்கு தன்னுலாகக்கூடிய உதவிகள் ஏதும் உண்டோ என்று அறிந்து வரும்படி என்னை அனுப்பியிருக்கிருர்.

**குளக்கோட்டன்:** மந்திரியாரே! விசித்திரயூகி என்ற பெயருக்குப் பொருத்த

என்ற தீர்க்கதரிசனக் கவி ஒன்றை எழுதிவித்தான். அனுரதபுரத்தில் இருந்து அரசாண்ட கஜபாகுமன்னன் முதலானவர்களும் திருக்கோணேஸ்வரத்திற்கு மானியங்கள் வழங்கிப்பாதுகாத்துவந்தனர்.

சோழ, பாண்டிய, சிங்கள, ஆரிய மன்னர்களால் போற்றப்பட்டு வந்த கோணேஸ்வரத்தை மிலேச்சர்களாகிய போர்த்துக்கீசர் 17-ம் நூற்ருண்டில் கைப்பற்றினுர்கள். பொருளாசை கொண்ட போர்த்துக்கீச தளபதியாகிய கொன்ஸ்டன் டைன் டிசா 1624-ம் ஆண்டில் கோணேஸ்வரத்தை இடித்தளித்தான். ஈழத்துச்சைவ அடியார்கள் 1963-ம்ஆண்டு மீண்டும் கோணேசர் ஆலயத்தைக் கட்டி கும்பாபிஷேகம் செய்தார்கள்.

# நாய் வாழ்க்கை

நாய்களுக்கு இருக்கும் சொகுசு கூட சாதாரண மனிதனுக்கு இல்லையே என்று நம் நாட்டில் அநேகர் பணக்காரவீட்டு நாய்களைப் பார்த்துவிட்டு புழுங்குகிருர்கள்.

'நாய்கள்கவனம்' என்று போர்ட்டுகள் போட்டுக்கொண்டு பெரிய வீடுகளில் நாய்களை வளர்ப்பதைப் பார்க்க அநேகர் அருவருப்பு அடைகிருர்கள். இவர்களில் முக்கால் வாசிப்பேர் திறந்த வீடுகளில் ஆளில்லாத சமயங்களில் அரவமில்லாமல் நுழைந்து பிறர்சொத்தை தம் சொத்துப்போல்எடுத்துக் கொண்டு போகும் பேர்வழிகள். இப்படியானவர்களுக்கு மரியாதை செய்வதற்காகத்தான் பெரிய வீடுகளில் நாய் இல்லாவிட்டாலும் எச்சரிக்கைக்காக 'நாய்கள் கவனம்' என்று போர்ட்டு போட்டு வைத்திருக்கிருர்கள். இந்த போர்ட்டுவீட்டுக்குள் காவல் புரியும் நாய்களைக் குறிக்கிறதா வெளியில் திருடுவதற்காகத் திரியும் சொறிநாய்களைக் குறிக்கிறதா என்பதுசம்பந்தப்பட்ட ஜீவன்களுக்குத்தான் தெரியும். நம்நாட்டில் மட்டுமென்ன அனேகமாக எல்லாநாடுகளிலும் மனிதர்களையும்விட சுகமான வாழ்க்கையை நாய்கள் அனுபவிக்கின்றன. அதேசமயம் கஷ்டப்படும் மக்களைப் போலவே கஷ்டப்படும் நாய்களும் உண்டு.

வேலைக்காரர்களை சிலர் நாய்களைவிட மோசமாக நடத்துவார்கள். ஆனுல் நாய்களையோ உயிருக்கும் மேலாக மதிப்பார்கள்.

சர்வாதிகாரி ஹிட்லர் இருந்தார்அல்லவா? அவர் இலட்சக்கணக்கான மக்களின் உயிர்களை மிகச் சாதாரணமாக நினைத்து ஆட்டுக்கடாய்களைப் போல் பலியிட்டார். ஆனுல் 'புளண்டி' என்ற அவருடைய நாயின் மீது உயிரையே வைத்திருந்தாராம் அந்த மகாபுருஷன். எத்தனையோ மனிதர்கள் அவருக்கு வால் பிடித்தார்கள். ஆனுல் அந்த நாயைப்போல அவர்களால் வாலை ஆட்டமுடியவில்லை. அதனுல் அந்த நாயிடம் அவருக்குஅலாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தம ராமன் கதையுரைப்பார்-ஒரு
உண்மை புகன்றிடார்கள் - பெரும்
சுத்தர்கள் போல்நடிப்பார் ஏழை மக்களைச்
சுரண்டிப் பிழைத் திடுவார்.

தாய்மைக் கிலக்கண மாகிய கோசலை
சத்வ குணம் படைத்தாள் - என்று
வாய்கிழியத் தினம் பேசிநிற்பார் அதை
வாழ்வில் அனுசரியார்
பேய்மைக் குணமுடையாள் கூனியென்று
பிதற்றித் திரிவதல்லால்-அந்தப்
பேய்மைக் குணத்தை விடார் நல்ல மக்களைப்
பிரித்து மகிழ்ந் திடுவார்.

பிஞ்சுக் குழந்தைகள் துஞ்சும் பசியினுல்
கெஞ்சும் பொழுதினிலும் பெரும்
மஞ்சில் துயின்றிடும் அஞ்சுகங்கள் மனம்
மாறு உணவளியார்
வஞ்சகச் சூதுக் குணம்படைத்தார்-பொருள்
வெளவும் நினைவுடையார்-பெரும்
நஞ்சு மரத்தினை யொப்பர் பிறருக்கு
நன்மை புரிந்துவிடார்.

கற்ற குருவிடம் காதல் உடையவன்
காகுத்தன் ராமபிரான்-இன்று
அற்ப மதிப்பு மிலாதவ ராயினர்
ஆசிரியத் தொழிலார்
முற்றுந் துறந்த முனிவரைப் போற்றினன்
முன்னவன் ராமபிரான்-இன்றோ
கற்பனைக் கெட்டாக் கடவுளே ஆயினும்
கைதொழாப் பண்பு கொண்டார்.

கங்கைக் கரையினில் வேடன் சகோதரக்
காட்சி அளித்திடுவான்-வெளி
எங்கும் பறக்கும் கழுகுக் கரசனும்
ராமர்க்குற வுடையான்
தங்கும் புவிமிசை வானர சாதியும்
சகோதரமாகி விடும்-சினம்
பொங்கும் அரக்கனும் தம்பியுறவாகும்
புதுமையைக் கண்டிடலாம்.

சாதி சமயப் பிரச்னை யில்லை தீச்
சண்டை புரட்சி யில்லை -அங்கு
வேதியர் வேறென்ற வேற்றுமை யில்லை ஓர்
வேலையில்லாமை யில்லை
நீதி நெறியுடை மக்கள் இருந்தனர்
நெஞ்சிலே வஞ்ச மில்லை- அவர்
ஓதிய வண்ண மொழுகியதால் நல்
ஒழுக்கம் உயர்ந்ததுவே.

## வேறு

கூடியே பிறக்காதவ ராயினும்
குணத்தினுல் ஒன்றுபட்டுச் சிறந்தனர்
கூடி நின்ற அக்கோசலை அன்னையும்
குழந்தைகாள் எனக்கூட்டி அணைத்தனள்
வீடு வாசலில் சின்னப் பிணக் கெனின்
வெட்டுப் பட்டு மடிந்து சிதைந்திடும்
கேடுகெட்ட உலகினில் ஒற்றுமை
கெட்டழிந்து தொலைவதைக்காண்கிருேம்.

தம்பி அண்ணனை விஞ்சிடு வானெனில்
சற்றுமோ பொருன் அண்ணனுய் வாய்த்தவன்
அம்புவி தனில் ஆயிரம் வேற்றுமை
அதற்குள் ஆயிரம் ஆயிரம் வேற்றுமை
கம்பன் காவியம் காட்டிடும் ஒற்றுமைக்
காட்சி கூறிடும் கற்றவர் மற்றவர்
எம்முள் ஊறிய சிக்கல் களைந்த பின்
இராம காதையை மேடையில் பேசலாம்.

கற்பு வாழ்க்கையே கண்ணிய மானது
காமுகர் இருகால் மிருகங்களே
அற்புதக் குறளோதும் நெறி யிது
ஆணுக்கும் கற்பவசிய மானதே
குற்றமற்றவன் ராமன்; ஒரு தாரக்
கொள்கை கொண்டவன்; வேறு மகளிரைச்
சற்றுமே காமக் கண்கொண்டு நோக்கிலன்
தமிழ்மறைப்படி வாழ்ந்த பெரியவன்.

தந்தை தாயரின் சொற்கடவாமையே
தர்மம் என்பது ராமன் அருள்நெறி
இந்த உண்மையைக் கூற எழுந்ததே
இராம காவியம்; ஆயினும் இப்புவி
தந்தை தாயரைப் பேண மறுக்குது
சகோதரங்களைக் காண வெறுக்குது
எந்தநாள் இந்தத் தீமை ஒழியுமோ
ஈசனுர் அன்றி யாரறிவா ரிங்கே.

## வேறு

கம்பனுரோ இந்த வாறு உரைத்திடக்
கண்கள் கசிந்து நின்றேன்-அவர்
தம்பி இதை மட்டும் கேட்டிடுவாய் என்று
சாற்றத் தொடங்கி விட்டார்.

நான் படைத்திட்ட அவ்விராம கதையினை
நன்கு படிப்பா யெனில் - அங்கு
நான் இருப்பேன் ஆனுல் 'நான்' இருக்காது நம்
நாட்டவர் பண் பிருக்கும்.

எந்தனை மீண்டும் நீ கண்டிட வேண்டுமேல்
இராமகதை படிப்பாய் - எனச்
செந்தமிழ் வாய்திறந்தே மொழிந்தார் பின்
சிலையென நின்று விட்டார்.

[வண்ணை சிறீ வெங்கடேசவரதராஜப்பெருமாள் கோவிலில் 1-4-69-ல் நடைபெற்ற சிறீராம பட்டாபிஷேக விழா கவியரங்கில் வாசிக்கப் பெற்ற கவிதை]

## — சைவப்புலவர் பண்டிதர் இ. வடிவேலு —

கோணநாயகர்மீது தாங்கள் வைத்திருக்கும் பக்தியும் பேரன்பும் உங்கள் எண்ணத்தை நிறைவேற்றும் என்பது எனது துணிபு. அறுபத்து நான்கு கலாசாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த வல்லுனர்கள் நம்முடன் வந்திருக்கின்ருர்கள். நீங்கள் காலால் இட்டவேலையைத் தலையாற் செய்துநிறைவேற்ற மக்கள் ஆவலோடு காத்து நிற்கின்ருர்கள்.

**குளக்கோட்டன்:-** உன்வார்த்தைகள் என்னை மகிழ்விக்கின்றன. ஆனுல்......

**மந்திரி:-** அரசே! ஏன் தயக்கம் அடைகின்றீர்கள்? தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்துங்கள் அரசே.

**குளக்கோட்டன்:-** அமைச்சரே! கோணநாயகர் எழுந்தருளி இருந்து அகில உலகிற்கும் அருள்பாலிக்கவல்ல அற்புதமான ஆலயம்ஒன்றை அமைக்கவேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால் ஏத்திட ஆத்தமாம் பேறு கொடுத்தவர் கோணநாயகர். அதோ, இராவணன்வெட்டுஅதற்குச்சாட்சி கூறுகின்றது பார்த்தாயா? அகங்காரம்கொண்ட தக்கனுடையவேள்வியைத் தடுத்தவர். பின்னரும் தன்னருள் பெருமையும் வாழ்வும் கொடுத்தவர். பெரும்புகளாளர் அல்லவா கோணநாயகர். ஆதலால் அருட்கடலாகிய எம்பெருமானுக்கு அற்புதமான ஆலயம் அமைக்கவேண்டுமென ஆசைப்படுகின்றேன்.

**மந்திரி-** மன்னவா! தங்கள் தெய்வ பக்தியையும் கலை ஆர்வத்தையும்கண்டு பேரானந்தம் அடைகின்றேன்.

பணிவேலைகள் பூரணமாக நிறைவேறியபின்பு மங்கள வாத்தியங்கள் முழங்க, முனிவர்கள்வாழ்த்தொலிஎழுப்ப பஞ்சாட்சரத்தின் மேன்மை விளங்கச் சிவனடியார்களின் வினைகள் நீங்க, தானதருமங்கள் ஓங்க, சைவநெறி தழைக்க, கோணநாயகரையும் மாதுமை அம்பாளையும் பிரதிஷ்டை செய்து ஆகம விற்பன்னர்களைக்கொண்டு கும்பாபிஷேகம் செய்வித்தான்.]

**குளக்கோட்டன்:-** அமைச்சரே! கோணநாயகரின் திருவருளால் ஆலயம் எழுந்ததைக்கண்டுஅளவிலா மகிழ்ச்சியடைகின்றேன். ஆனுல்... ஆலயத்திற்குதொண்டுபுரிய தொழும்பாளர்களை நியமிக்கவேண்டுமேஎன்றுதான் யோசனை செய்துகொண்டிருக்கின்றேன்.

**மந்திரி:-** அரசே! மருங்கூரிலிருந்து கொண்டுவரப்பட்ட முப்பது குடிமக்களையும், காரைக்காலில்இருந்து கொண்டுவரப்பட்ட இருபத்தொரு குடிமக்களையும், ஆலயத்தொண்டுபுரிய ஏற்பாடு செய்யலாம். இவர்களையும் ஆலயத்தையும் பரிபாலனம் செய்ய மதுரைமாநகரில் இருந்துஅழைத்துவரப்பட்ட சந்திரகுலத்தவனுன தனியுண்ணுப்பூபாலனை நியமிக்கலாம்.

**குளக்கோட்டன்:** நல்லது அமைச்சரே, உங்கள் யோசனையைப் போற்றுகின்றேன். ''தெரிதலும் தேர்ந்து செய

### 3

[கோணமாமலையில் குளக்கோட்டு மன்னன் கோயில் எடுத்த காலத்தில் ஈழநாட்டின் தென்பகுதியிலே உன்ஞச்சி கிரியிலிருந்து அரசு புரிந்து வருகிருள், ஆடக சௌந்தரி. சோழர் குலத்தவளாகிய அவ்வரசியின் மந்திரி விசித்திரயூகி எனப்படுவார். தன் ஆட்சிக்குட்பட்ட ஈழநாட்டின் கிழக்குக் கரையிலே அன்னியன் ஒருவன் அனுமதி இன்றிப் புகுந்து கோணமாமலையில் கோயில் எடுக்கிறுன் எனக் கேள்விப்பட்டுச் சினங்கொள்கிருள் ஆடக சௌந்தரி. அதனுல் மந்திரி விசித்திரயூகியை அரச சபைக்கு அழைக்கின்ருள்.]

**ஆடகசௌந்தரி:** விசித்திரயூகியே ஈழநாட்டின்கிழக்குக் கரையிலே நமது ஆட்சி அதிகாரங்கள் முட்டின்றி நிகழ்கின்றனவா?

**விசித்திரயூகி;** ஆமாம். அதில் என்ன சந்தேகம்.

**ஆடகசௌந்தரி:** நன்று சொன்னுய். விசித்திரயூகி என்ற பெயருக்குப் பொருத்தமாக செயல்படவேண்டாமா?

**விசித்திரயூகி:** அரசியே! இதுவரை எந்தவித தவறும் நான் செய்யவில்லை. காலத்திற்குக்காலம் பிரதானிகள், தூதுவர்கள்மூலம் கிழக்குக் கரை ஆட்சியைக் கவனித்துக்கொண்டு தான் வருகிறேன்.

**ஆடகசௌந்தரி:** அப்படியா? கோண மாமலையில் இப்போது என்ன நடக்கின்றது என்பதையும் என்ன செய்ய வேண்டும் என்பதையும் கூறுகின்றேன் கேள்.

வேற்ருன் ஒருவன் இங்கு
போற்றிப் புகழவந்து
ஆற்றும் பணியை அழிப்
பாய் விசித்திரயூகி
போற்றும் திருக்கோண
மாமலை தன்னிலே
நேற்று வந்தவனுக்கு
நிலையாம் இடமு
முண்டோ.

மந்திரியே! வேற்று நாட்டு மன்னவன் ஒருவன் திருக்கோணமலையில் கோவிற் திருப்பணி செய்து மக்களுடைய உள்ளத்தில் இடம் பிடித்துக் கொண்டானும். நமது ஆட்சியைப்பற்றி அவன் அறியான்போலும்.

என்னர சாட்சியை
எடுத்தியம்பி அவனை
ஏளனம் செய்துமே
கோழையனுக்கி
முன்னம் முடிந்த பணி
தன்னை அழித்து அவனை

ருக்கும் திருப்பணிகளைக் கேள்வியுற்ற அரசி, மகிழ்ச்சி அடைந்து தங்களுக்கு தன்னுலாகக்கூடிய உதவிகள் ஏதும் உண்டோ என்று அறிந்து வரும்படி என்னை அனுப்பியிருக்கிருர்.

**குளக்கோட்டன்:** மந்திரியாரே! விசித்திரயூகி என்ற பெயருக்குப் பொருத்தமாகப் பேசிவிட்டீர்கள். செய்யவந்தது ஒன்று, சொல்வது பிறிதொன்ருய் இருக்கின்றதே. எல்லாம் கோணநாயகரின் கருணைதான். எம்பெருமானுடைய திருவருளாலேயே இப்பணிநிறைவேறியது. நாம் அவனுடைய கருவியாக இருந்து இயங்குகின்ருேம். நீங்கள் இங்கு வந்ததும் ஓர் அளவில் நல்லதுதான். கோணநாயகருக்கு கோயில் எடுத்தோம், குளம் தொட்டோம், நாம் எதிர்பார்த்த அளவு வளம் பெருகவில்லை. என்றுலும் குறைவுபடாமல் நீர்வளம் நிறைந்திருக்கக் கூடியகுளம் ஒன்று வெட்டி, விளை நிலங்களை அதிகரிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அதற்கேற்ற இடம் எங்கிருக்கிறது கூறுங்கள்.

**விசித்திரயூகி:** அரசே! கோணமாமலைக்குத்தெற்கே ஓர் அமைப்பான இடம் இருக்கின்றது. இரண்டுமலைகளை இணைத்து அணைகட்டினுல் அந்த இடம் பெருங் குளமாகமாறும். நமதுஅரசியாரிடம் நிறைய ஆட்பலமும் பொருட்பலமும்

பொருளாசை கொண்ட போர்த்துக்கீச தளபதியாகிய கொன்ஸ்டன் டைன் டிசா 1624-ம் ஆண்டில் கோணேஸ்வரத்தை இடித்தளித்தான். ஈழத்துச்சைவ அடியார்கள் 1963-ம்ஆண்டு மீண்டும் கோணேசர் ஆலயத்தைக் கட்டி கும்பாபிஷேகம் செய்தார்கள்.

### 5

(பக்தர்கள் இருவருக்குள் சம்பாஷணை.)

பக்தர் 1 பெண்; கோணநாதப்பெருமானின் அழகிய திருக்கோலக்காட்சியைக் காண்பதற்குப் பதினுயிரம் கண்ணிருந்தாலும்போதாது போலத்தோன்றுகின்றது.

பக்தர் 2 ஆண்: ஆமாம் பாரதநாட்டில் கூடப் பார்க்கமுடியாத அழகிய திருவுருவம்தான்.

''வாய்ந்த சிலைமலரடியும்
மலரடிமேல் ஏறிட்டு
வைத்த தாளும்
காந்துமணிச்சிலம்
பொலியும் ஒருபாகம்
புகவிடுத்த கையும்
மார்பும்
பாந்தளெலாம் விரித்தாட
விரித்த சடைப் பரப்பும்
ஒருபாகமாதும்
ஏந்தி ஒரு கயிலை மலை
வீற்றிருக்கும் இறைவனை''

அவனருளாலேதான் பார்க்கின்ருேம். 1950-ம் ஆண்டு தமது திருவுருவத்தை நிலத்தில் இருந்து வெளிப்படுத்தியது அவனருள்தானே.

பக்தர் 1 பெண்: என்ன சொல்கிறீர்கள். ஒன்றும் புரியவில்லையே.

(4-ம் பக்கம் பார்க்க)

அவருடைய நாயின் மீது உயிரையே வைத்திருந்தாராம் அந்த மகாபுருஷன். எத்தனையோ மனிதர்கள் அவருக்கு வால் பிடித்தார்கள். ஆனுல் அந்த நாயைப்போல அவர்களால் வாலை ஆட்டமுடியவில்லை. அதனுல் அந்த நாயிடம் அவருக்குஅலாதி பிரியம். கடைசிக்காலத்தில் தலைமறைவாய் இருந்தபோதுகூட அந்த நாயைத்தம் உதவியாட்களைக் கொண்டு நல்ல காற்று வீசும் பகுதிகளில் உலாத்திவர அனுப்புவாராம். ஜெர்மனியில் ஒரு வழக்கு நடந்தது. பிள்ளைகள் பிறந்தால் தனது இரு நாய்களுக்கும் பொருமை ஏற்பட்டுவிடும் என்று கணவன் குழந்தைபிறப்பதையே விரும்பவில்லையாம். இதனுல்தான் மனைவி விவாகரத்துகோரி வழக்குப் போட்டிருந்தார்.

லண்டனில் ஒரு சுவையான வழக்கு: மனைவி, தன் நாயைக் கணவனைப்போலவும், கணவனை நாயைப் போலவும் நடத்திஞராம். இந்த அம்மையார், தன் கணவனை கன்னத்தில் அறைவாராம். ஏளனமாகப் பேசுவாராம். நண்பர்கள் மத்தியில் தலைகுனிய செய்வாராம். படுக்கையில் நாய்தான் பக்கத்தில்படுத்துக் கொள்ளும். கணவர் தனியாகப் படுத்துக்கிடப்பார். டெலிவிஷன் பார்க்கும் போதும் நாயும் அம்மையாரும் சுகமான ஆசனத்தில் அமர்ந்துகொள்ள கணவர் அவர்களின்

(4-ம் பக்கம் பார்க்க)


# தம்பி அண் கோ.,

284, K K S ரோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

நிரந்தர சேமிப்புக்கு கீழ் குறித்த வட்டி கொடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 வருடத்திற்கு | — | வருடம் 8 சத வீதம் |
| 2 வருடத்திற்கு | — | வருடம் 9 சத வீதம் |
| 3 வருடத்திற்கு | — | வருடம் 10 சத வீதம் |


மேற்குறித்த நிரந்தர சேமிப்பை எப்பொழுதும் 30 நாள் அறிவித்தலில் வருடம் 8 சத வீத வட்டியுடன் எடுக்கலாம்.

இந்த மாதிரி 10 விளம்பரம் தருபவர்க்கு ஒரு சுவீப் டிக்கட் இனாமாகக் கொடுக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய புதுவருடம் எமக்குத்தரும் புதியபாடம்

## முஹர்ரம் மாதம் சிறப்படையக் காரணமென்ன?



நம்முடைய வீடுகளிலே நல்ல பண்புள்ள பேச்சுக்களில்லை; மரியாதையற்ற முறையிலே உரையாடுகிறோம். தாய் தந்தையர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் பழக்கம் அறவே ஒழிந்துவிட்டது. எம்பெருமானார் றசூலே கரீம் (ஸல்) அவர்கள், ஒரு பிள்ளையின் சுவனபதி அப்பிள்ளையின் தாயின் பாதத்தின்கீழ் உண்டென்று திருவாய் மலர்ந்தருளினார்கள்.

இந்துக்களுக்கும், பௌத்தர்களுக்கும் சித்திரை மாதம், புதுவருடத்திற்குரியது. கிறிஸ்தவர்களுக்குப் புதுவருடமாகத் தைமாதம் அமைந்துள்ளது. இவ்வாறே முஸ்லிம்களின் புதுவருடம் முஹரம் மாதத்தை ஆரம்பமாகக் கொண்டுள்ளது. ஆயினும் இந்து, பௌத்த, கிறிஸ்தவர்களுக்குப் புதுவருடங்கள் ஒரு குறிப்பிட்ட திகதிகளில் வருவதுபோன்று முஸ்லிம்களின் புத்தாண்டு ஒரு குறித்த திகதியில் வருவதில்லை என்பதை நாம் மனத்தில் இருத்திக்கொள்ளுதல் வேண்டும். இந்த வருடம் இஸ்லாமிய புத்தாண்டு பங்குனி மாதம் 20-ம் தேதி வந்துள்ளது. சென்றவருடம் பங்குனி மாதம் 20-ம்தேதி வராது 7-ம் தேதி வந்துள்ளது. இஸ்லாமியர் பிறை தோன்றுவதைக் கொண்டே மாதங்களைக் கணக்கிடுவராதலின் மேற்கூறிய மாற்றங்கள் புதுவருடத்தில் ஏனைய மதத்தவர்களது திகதிகளைப்போன்று குறித்த அதே தினத்தில் வந்தமையாதேற்படுகின்றன.

இஸ்லாமிய புதுவருடம் முஹர்ரம்மாதத்தை ஆரம்பமாகக்கொண்டுள்ளது ஏன் என்பதை ஆராய்வது

கைத்தடியினால் அடிக்கவே நைல்நதியின் இரு புறங்களும் இடம்கொடுத்தன. பின் அவை பன்னிரண்டு வழிகளாக மாறி நபிமூஸாவின் கூட்டத்தினர் செல்லக் கூடியதாக வழிகொடுத்தன. அதன் ஊடாக பிர் ஔனும் அவனதுபடையினரும் துரத்திச்சென்றபோது நைல் நதி இறைவனின் ஆணைப்படி தன்னுள் ஆழ்த்தி அவர்களை அழித்துவிட்டதும் இது போன்ற ஒரு முஹர்ரம் மாதத்திலேதான்.

'யூனுஸ்' நபியவர்களை மீனின் வயிற்றினின்றும் வெளியேற்றிப் பாதுகாத்ததும் முஹர்ரம் மாதத்திலேதான்.

இப்றுஹீம் நபி (அலை) அவர்களை 'நம்றூத்தெனுங்கொடிய அரசன் பெரிய நெருப்புக்கிடங்கிலே தூக்கிஎறிந்தபோது அந்நெருப்பு இப்றுஹீம் நபியவர்களைக்கரிக்காது சுகண்டியாக மாறியதும் முஹர்ரம் மாதத்திலேதான்.

யூசுப் நபி (அலை) அவர்களை பாழுங்கிணற்றிலிருந்து வெளியேற்றப்பட்டதும் சிறைகூடத்தில் இருந்து வெளியானதும் முஹர்ரம் மாதத்திலேதான்.

நபிஈஸா (அலை) (ஏசுநாதர்) அவர்களை வானுலகத்திற்குயர்த்தியதும் இது போன்ற ஒரு முஹர்ரம்

வதாகத் தென்படவில்லை முற்றிலும் முஸ்லிம்களின் வாழ்க்கைக்கு மாறுபட்ட அநாகரிக அடிமை வாழ்க்கையாகவே அமைந்துவிட்டது.

அன்று நம் சகாப்பாப் பெருமக்கள் தங்களது உயிர்த்தியாகத்தினடிப்படையில் இஸ்லாத்தைப் பாதுகாத்து நம்மிடம் விட்டுச் சென்றனர். தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தார்கள். இருபத்திநான்கு மணிநேரமும் இறைபக்தர்களாக வாழ்ந்தனர். இறைவனின் கட்டளைகளுக்கு முற்றும் அடிபணிந்து பணிபுரிந்தனர். தொழுகைக்கென அதானெனும் பாங்கு சொல்லும்பொழுது எவ்வித நயந்தரும் வியாபாரமாயினும் சரியே அவற்றைப் பொருட்படுத்தாது இறைவனின் அழைப்பிற்குத் தலைசாய்த்து ஓடோடி வந்தனர், மஸ்ஜிதுகளைநோக்கியவண்ணம். இவ்வாறு நடந்துகொண்டதைக் கண்ட இதரமத மக்கள் 'இவர்கள்தான் சுவனலோகர்'' என்ற அழகிய பட்டப்பெயரையும் கொடுத்தனர். சுவனலோகர் மருவி இப்போது சோனகர் என வழங்கலாயிற்றென்பர் சரித்திர ஆசிரியர். இவர்களின் வழித்தோன்றல்களான நாம் என்ன செய்கின்றோம்? நம்முடைய வீடுகளிலே நல்ல பண்புள்ள பேச்சுக்களில்லை; மரியாதையற்ற முறையிலே உரையாடுகிறோம். தாய்தந்தையர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் பழக்கம் அறவே ஒழிந்துவிட்டது. எம்பெருமானார் றசூலேகரீம் (ஸல்) அவர்கள் ஒரு பிள்ளையின் சுவனபதி அப்பிள்ளையின் தாயின் பாதத்தின் கீழ் உண்டென்று திருவாய்மலர்ந்தருளினார்கள். அந்தோ! அதே தாயை இன்று எப்படி நடத்துகின்றார்கள் என்பதை, ஒவ்வொரு இஸ்லாமியனும் தத்தம் நெஞ்சத்திற் கைவைத்துப் பார்க்கட்டும். இனியாவது தங்கள் தாய் தந்தையரைப் பொன்னென மதித்து நடக்கட்டும். மனைவிமாரின் மந்திரத்தில் மயங்கி மருண்டு பின் தாய் தந்தையரை வையாது வாழ்த்தட்டும். வாரி வாரி வழங்கி வாயாரப் புகழ்ந்து வையகமும் வானகமும் வளம்பெற, வாலிபர்களும் மங்கையர்களும் உணர்ச்சி பெறுவார்களாக.

முஸ்லிம்களது வீழ்ச்சிக்கு அவர்களது வீட்டு நிகழ்ச்சிகளே முக்கிய காரணமாகுமென்றால் அது மிகையாகாது. குழந்தைகள் இஸ்லாமிய நெறியிலே வளர்க்கப்படவோ பழக்கப்படவோ இல்லை. பெற்றோர்கள் இதிலே சரியானபடி நடவடிக்கை எடுத்துக்கொண்டால் விரைவாக எமது சமுதாயம் முன்னேறும். முஸ்லிம் வட்டாரங்களிலே கீழ்த்தரமான வார்த்தைகளைப் பிரயோகிப்பதை ஒரு கலையாக ஆக்கிக்கொண்டனர். தாயும் தந்தையும் உட்பட இழி சொற்களையே பிரயோகித்துவருகின்றனர். நீங்கள், வாருங்கள், மக்களே என்ற வார்த்தைகளைக் கேட்பது மிக அரிதாகிவிட்டது. தமக்கென்று வாழும் சுயநலம் தாண்டவமாடுகின்றது. தனது சகோதரன் நல்லாக வாழ்வதை விரும்பாது பொறாமை கொண்டு இன்னல் தருகின்றனர்.

(தொடரும்)

## 'சுவனலோகரே சோனகராயினர்'

# பொருந்தா மனையில் பசு இருந்தும் பால் இரா

## சாஸ்திர அடிப்படையில் அமையும் இல்லத்தில் வாழ்வு சிறக்கும்

முன்னொரு காலத்தில் கமக்காரனொருவன் தனது கமத்தில் அட்டாளை கட்டி அதில் ஏறியிருந்து காவல் செய்துவந்தான். அப்பொழுது அவ்வழியே அரசபடையொன்று போய்க்கொண்டிருந்தது. இதனைக் கண்ட அந்தக் கமக்காரன் அவர்களைப் பசியுடன் போகவேண்டாமென்றும் தனது தோட்டத்தில் உள்ள கனிகளைப் பறித்துச் சாப்பிடும்படியும் கேட்டுக்கொண்டான். அவ்வாறே அந்தப் படையினரும் பழங்களைப் பறித்துத் தின்றுகொண்டே சென்றனர். ஆனால் அந்தக் கமக்காரன் அட்டாளையினின்றும் இறங்கியதும் அவர்கள் பழங்களைப் பறித்தமைக்காக மனங்கலங்கி ஏசினான். பழையபடியும் அவன் அட்டாளைமீது ஏறிக்கொண்டதும் மீண்டும் அந்தப் படையினரைப் பார்த்து பசியுடன் போகவேண்டாமென்றும், தனது தோட்டத்திலுள்ள பழங்களைப் பறித்துச் சாப்பிடும்படியும் கேட்டுக்கொண்டான். விஷயம் ஒன்றும் புரியாத அரசன் தன் மந்திரியிடம் கேட்டபோது, அது அட்டாளை இருக்கும் இடத்தின் மகிமை என்று சொன்னான் அந்த மதியூகி மந்திரி. - இது ஒரு கதை.

ஒரு மனிதனுக்கு வாழ்க்கை சிறப்பதற்கு அவன் வாழும் மனை அமைவு முக்கியமானதாகும்.

பொருந்தா மனையில் வாழும் கன்னி, மாங்கல்யப் பேற்றுக்காகக் கனவுகாணும் துர்ப்பாக்கிய நிலையும் பசு இருந்தும் பாலில்லாத கண்ணராவியும் நிலவும் முறையான மனை சாஸ்திர அமைவுக்கு ஏற்ப மனை அமைக்கப்பெறின், செல்வம் பொங்கி முட்ட வாழ்வர்.

பாடல்

ஆடித்திங்களில் இராவணன் பட்டதும்
பாடித்தே பெரும் பாரதமார்கழி.
வீடித்தே புரட்டாதி யிரணியன் வேதத்தோன்
முடியற்றது பங்குனி.
நாடித்தெயினில் நன்மைக் கேகிடில்
நாட்டில் மாந்தர் கள் நாச மடைகுவர்
ஓடித்தேசங் குடியேறிப் போனாலும்
ஒட்டிலே யிரந்துண்பது திண்ணமே.

இவற்றில் தைமாதத்தைச் சில நூல்கள் நன்மைதரும் மாதமாகவும், சில நூல்கள் மறுத்தும் உள்ளன.

இந்த மாதங்களை தேர்ந்து அவரவர் பாவபுண்ணியத்திற்கேற்ப மனையும் அமையும். எனினும், விதி எப்படி இருப்பினும் சிரத்தையுடன், இடம் தெரிந்தும், நாள் நட்சத்திரங்களைத் தெரிந்தும் கட்டிய வீடு, நல்வாழ்வு பெறுவது திண்ணம்.

குடிபுக வீடு கட்டவேண்டியமாதபலன் கீழ்வருமாறு:

சித்திரை மாதம் வீடு கட்டில் தனவிரயமும், வைகாசி மாதத்தில் வாழ்க்கைச் சிறப்பும், ஆனி மாதத்தில் மிருத்யுபயமும், ஆடி மாதத்தில் பசுக்கள் நஷ்டமும், ஆவணி மாதத்தில் இனபந்து உறவும் நல்வாழ்வும், புரட்டாதி மாதத்தில் நோய்பிணி பீடை கலக்கமும், ஐப்பசி மாதத்தில் பகை கலகம் அவமானமும், கார்த்திகை மாதத்தில் இலட்சுமி வாசமும், மார்கழி மாதத்தில் பயம் கிலேசமும், தைமாதத்தில் அக்கினி பயமும், மாசி மாதத்தில் பாய்க்கிய நல்வாழ்வும், பங்குனி மாதத்தில் இரத்தினம் ஆபரணம் நஷ்டமாகும்.

...தும், வாசல்வளம், முகட்டு வளங்களை அவதானித்தும் வீடு கட்ட ஆரம்பம் செய்யவும்.

ஆயர்பாடி சோதிடர் வே. த. மயில்வாகனம்

## கோணமாமலை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பக்தர் ii: புரியவில்லையா? புரியும்படி சொல்கிறேன் கேள். பொருளாசை கொண்ட போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றிய காலத்தில் 1624-ம் ஆண்டு கொன்ஸ்டன் டைன் டிசா என்ற தளபதியினால் திருக்கோணேஸ்வரத்தை இடித்தளித்தனர். அக்காலத்தில் ஆலயத்தில் பூசை செய்து வந்த அர்ச்சகர்கள் எம்பெருமானின் திருவுருவத்தை மிலேச்சர்கள் தீண்டாவண்ணம் மறைவாக எடுத்துச்சென்று நிலத்தில் மறைத்துவிட்டார்கள். பல்லாண்டுகளுக்குப்பின் எம்பெருமான் மக்களுக்கு கருணை செய்வதற்காக 1950-ம் ஆண்டில் வெளிப்பட்டார். அந்தத்திருவுருவங்கள்தான் இவைகள்.

அதோ பார், சோமாஸ்கந்தர், சந்திரசேகரமூர்த்தங்களையும், அம்பாளையும், ஆனைமுகவள்ளலையும், அஸ்திரதேவரையும் பார். நன்ருகப்பார். இத்திருவுருவங்களைக் காண்பதற்கு என்ன புண்ணியம் செய்தோமோ.

பக்தர் 1: ஆமாம் புண்ணியம் செய்தபடியால்தான் திருவுருவங்களைத் தரிசிக்கின்றோம். ஆனால் நாம் முற்பிறப்பிலும் இப்பிறப்பிலும் செய்த பாவங்கள் தொலைவதற்காக பாபநாசத்தில் தீர்த்தம் ஆடுவோம்வாருங்கள்.

பக்தர் ii; எம்பெருமான் திருக்கோலக்காட்சியை சிந்தித்ததில் தீர்த்தம் ஆடவந்ததையே மறந்துவிட்டேன். புறப்படுங்கள், சுவாமிதீர்த்தமாடப்புறப்பட்டு வந்துகொண்டு இருக்கிறார். நாங்களும் சேர்ந்தாடுவோம்.

### நாய் வாழ்க்கை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

காலடியில் தரையில் அமர்ந்து பார்ப்பாராம். நாய் வளர்ப்பில் அமெரிக்கர் போல அக்கறை

### இம்மாதம் 2ம் திகதி யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் மாநகர சபையின் ஆதரவில் நடைபெற்ற மெல்லிசை, வில்லிசைக் கச்சேரிகளை 'ரசிகன்' இங்கு விமர்சிக்கிறார்.

### ஆடல் அரசி அனார்க்கலி

கடைக்காரருக்கு மோகிமம் பணம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

றங்கள் புதுவருடத்தில் ஏனைய மதத்தவர்களது திகதிகளைப்போன்று குறித்த அதே தினத்தில் வந்தமையாதேற்படுகின்றன.

இஸ்லாமிய புதுவருடம் முஹர்ரம்மாதத்தை ஆரம்பமாகக்கொண்டுள்ளது ஏன் என்பதை ஆராய்வது பொருத்தமாகும். இஸ்லாமியவருடத்தில்பன்னிரண்டு மாதங்களுள. அவை முஹர்ரம், மாதத்தை ஆரம்பமாகக்கொண்டமைகின்றன அவையாவன:-

மூஹர்ரம், ஸபர், றபீஉல் அவ்வல், றபீஉல் ஆஹிர், ஜமாதுல் அவ்வல், ஜமாதுல் ஆஹிர், றஜபு, ஷஃபான், றமழான், ஷவ்வால், துல்ஹஃதா, துல்ஹஜ் என்பவைகளாகும்.

ஆதி மனிதன் என்று கூறப்படும் நபி ஆதம் (ஆதாம்) (அலை) அவர்கள் முஹர்ரம் மாதத்திலே படைக்கப்பட்டார். அவர்களது மனைவி ஹவ்வா (ஏவாள்) (அலை) அவர்கள் சுவர்க்கத்திற் புகுந்ததும் முஹர்ரம் மாதமேயாகும். நபி மூஸா (மோஸஸ்)(அலை) அவர்களை பிர் ஒளன் எனுங் கொடிய அரசன் தனது படைகளுடன் மூஸர்நபியையும் அவர்களது கூட்டத்தினரையும் துரத்திச்சென்றனன், நைல் நதி குறுக்கிட்டது. போகமுடியாதநிலையேற்படவேநபி மூஸர் (அலை) அவர்கள் தங்கள் இறைவனிடம் பிரார்த்தனைசெய்து, பின்னர் நைல் நதியிற்றமது கள் பாழுங்கிணற்றிலிருந்து வெளியேற்றப்பட்டதும் சிறைகூடத்தில் இருந்து வெளியானதும் முஹர்ரம் மாதத்திலேதான்.

நபிஈஸா (அலை) (ஏசுநாதர்) அவர்களை வானுலகத்திற்குயர்த்தியதும் இது போன்ற ஒரு முஹர்ரம் மாதத்திலேயே.

தாவூத் நபி (அலை) அவர்களுக்கு (தாவீது) ஆட்சிமுறை கொடுக்கப்பட்டதும் முஹர்ரம் மாதமே. எம்பெருமானார் (ஸல்) அவர்களின் பேரர் இமாம் ஹுஸைன் (றழி) யஸீதினுடைய கொடுங்கோலாட்சியைச் சீராக்கத் துணிந்து அறப்போர் புரிந்து வீர சுவர்க்கமெய்தியதும் இது போன்ற ஒரு முஹர்ரம்மாதமேயாகும்.

இவ்வாறாக இந்த முஹர்ரம் மாதம், மாதங்களிலே மிகவும் கீர்த்திவாய்ந்ததும் போற்றத்தக்கதுமாக அமைந்துள்ளதை நாம் அறிந்துவிட்டோம்.

எனவே இம்மாதத்திலே முஸ்லிம்கள் என்ன செய்தாகவேண்டும் என்பதை, அறிந்து உணர்ச்சியுடன் நற்கிரியைகள் புரிதல்வேண்டும். எமது பாபச் சுமையை அகற்றுவதற்குச் சிறந்த மாதங்களுள் முஹர்ரம் மாதமும் முக்கியமானதே. இன்று நம்முடைய வாழ்க்கையை நோக்கின் இஸ்லாமிய அடிப்படையில் அமை

**— எம. எச். எம். அப்துல்றஸாக் —**

அதிபர், வண்ணை அரசினர் முஸ்லிம் வித்தியாலயம்


''லேடன்''

**LEYDEN**

தயாரிப்புகள்

★ பெனியன்

★ ஸ்போட் சேட்

★ ரி சேட்

★ ரெறி சேட்

★ ரெறி பிளவுஸ்

★ பேபி வெஸ்ட்

★ கால்மேஸ்

(Nylon & Cotton)

**லேடன் காமென்ஸ்**

74A, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.

போன்: 330


## நாய் வாழ்க்கை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

காலடியில் தரையில் அமர்ந்து பார்ப்பாராம்.

நாய் வளர்ப்பில் அமெரிக்கர் போல அக்கறையுள்ளவர்கள் வேறு எவருமில்லையென்று தோன்றுகின்றது. ஆம் அங்குதானே பணக்காரர்கள் அதிகம்!

தம் நாயின் மூன்ருவது பிறந்தநாளை ஒரு மனிதஜீவனின் 21-வது பிறந்த தினத்துக்கு சமம் என்று தீர்மானித்து ஓர் அமெரிக்கர் அதற்குப்பிறந்த நாள் விமரிசையாகக் கொண்டாடினுர். சடங்கு வீட்டுக்கு 29 நாய்கள் அழைக்கப்பட்டன. அழைப்பை ஏற்றுக் கொண்ட நாய்கள் பரிசுகளோடு வந்துசேர்ந்தன.. அந்தப் பரிசுகளில் ஒன்று இசைப் பெட்டியாகும். ''ஹப்பி பேர்த்டே டு யூ மை டார்லிங்'' என்று அந்தஇசைப் பெட்டியில் இசை முழங்கியதாம். இந்த நாய்கள் எல்லாமே பெரிய சீமான் சீமாட்டிகளைப்போல் விலை உயர்ந்த நகைகளையும்' உடைகளையும் அணிந்து கொண்டு பிறந்தநாளுக்கு வந்து சேர்ந்தனவ ம்.

இன்னெருரு அம்மையார் தம் சொத்து முழுதையும் தம் நாய்க்கு எழுதி வைத்துவிட்டுக் கண்ணை மூடிக்கொண்டாராம்.

நியூயோர்க்கில் இன்னெருரு அன்பர் டெலிபோன் நம்பர் டைரக்டரியில் தமது பெயருக்குப் பதில் தம்நாயின் பெயரை அச்சடிக்கச் செய்தாராம். நண்பர்கள் அவருடன் பேசவிரும்பினுல் அந்த நாயின் பெயரிலுள்ள டெலிபோன் நம்பருக்குத்தான் டயல்பண்ணவேண்டும்.

புளோரிடாவில் ஒருவர் தமது நாய்க்கு காது சரியாகக் கேட்காதென்று மனிதருக்குப்போல்காதில் பொருந்தும் 'எய்டு' வாங்கிப் போட்டிருக்கிறுர்.

இன்னெருவர் நாய்களின் வசிப்பிடத்தை தங்கத்தால் முலாம் பூசியிருப்பதோடு படுப்பதற்கு வெல்வெட் 'குஷன்' களும் போட்டிருக்கிறுர். குடிக்கும் தண்ணீர் தங்கத் தொட்டியில் செயற்கை ஊற்றின் மூலம் அதுகளுக்குக் கிடைக்கிறது.

மேற்குநாடுகளில் நாய்களுக்கு இருக்கும் மவுசு பற்றி கெத்தலின்ஸாஸ் என்பவர் எழுதியுள்ளஒரு நூலில் இந்தத்தகவல்களில் சிலவற்றைக் காணலாம்.

— பேணு

**இம்மாதம் 2ம் திகதி யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் மாநகர சபையின் ஆதரவில் நடைபெற்ற மெல்லிசை, வில்லிசைக் கச்சேரிகளை 'ரசிகன்' இங்கு விமர்சிக்கிறுர்.**

# மெல்லிசையும் வில்லிசையும்

இன்று இலங்கையில் வளர்ந்துவரும் கலைநிகழ்ச்சிகளுள் மெல்லிசையும், வில்லிசையுமே வெகுதீவிரமாகியுள்ளன. இலங்கையின்எந்த மூலையிலாகுதல் ஏதாவது ஒரு மெல்லிசைக்கோஷ்டியோ, அல்லது வில்லிசைக் கோஷ்டியோ புதிதாக அரங்கேறுவதை அவ்வப்போது செய்திகள் வெளிக்காட்டுகின்றன. அமரகவிபாரதி சொன்னுன் தேமதுரத்தமிழோசை உலகமெல்லாம் பரவும்வகைசெய்தல் வேண்டும் என்று இந்தப்பாடலின் உட்பொருளின் நிதர்சன உண்மைக்கு இது எடுத்துக் காட்டாகும். இந்த வகையில் தமிழோசை பரவுவதை வரவேற்க வேண்டியதே... ஆனுல், தமிழ்க்கர்னுடக இசையின் தரமும், அதனைக் கற்பதிலுள்ள சிரமமும், அதனைச் சரியான வகையில் வெளியிட மேற்கொள்ள வேண்டியசாதனையும், யாவருக்கும் கைவரக்கூடிய ஒன்றல்ல. ஆனுல் மெல்லிசைக்கோ குரலில் கனிவும் ஓரளவுக்குச் சுதியுடன் இணைந்துபாடக்கூடிய ஞானமும் போதியதானுல்எவரும் அரங்கேற்றத்துக்கு வந்துவிடலாம்.

கதாகாலட்சேபம் செய்கின்ற வித்தகர்கள் கர்னுடக இசையில் மட்டுமல்லாது, நாடக பாவனை உணர்ச்சிகளிலும்மேம்பட்டு அரிய பிரசங்க ஞானமும் உடையவராக மிளிரவேண்டும். ஆனுல் இத்தகையசிரமம் இல்லாது கிராமியப் பாணியில் ஓரளவுக்கு கதாகாலட்சேபம் செய்கின்ற நிகழ்ச்சிதான் இன்று வில்லிசைப்பாட்டாக இங்கு பரிணமித்திருக்கின்றது. உலகம் மாற்றத்துக்குட்பட்டுக் கொண்டே இயங்கவேண்டுமென்பது நியதிதானே. இந்த நியதியின் பேருகவே நமது கலைகளும் மாறுதல் பெற்று மக்களின் இரசனைக்கேற்ற அளவுக்கு இலகுவாகச் செல்கின்றன போலும். இது மக்கள் யுகந்தானே...

ஒன்று இந்தக் கலைகளின் வளர்ச்சியும் மக்களின் வாழ்க்கைக்கு எதையாகுதல் சுட்டிக்காட்ட வேண்டும். அப்படிச் சுட்டிக்காட்டி மக்களுக்கு உறுதுணை செய்யவில்லையானுல் அது பயனற்ற சுயதிருப்தியாகவே அமைந்துவிடும்.

இந்தச் சிந்தனைக்கு வித்திட்டது 2-4-69ல் யாழ் மாநகர சபையின் ஆதரவில் யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற பௌர்ணமிக் கலைவிழாவாகும்.

இந்த நிகழ்ச்சியில் முதல் நிகழ்ச்சியாக அமைந்தது ஈழநல்லூர் அருணு கோஷ்டியினரின் மெல்லிசைக் கச்சேரி. திருவாளர்கள் ஜி. பரமேஸ்வரன் அருணுசலம், சண்முகரத்தினம், எஸ். ஆனந்தன், ரங்கன், குலசிங்கம், சுந்தரராஜன், மாணிக்கவாசகர் ஆகியோர் பங்குகொண்டனர். ஏற்கெனவே மேடையேறி இரசிகர்களைக்கவர்ந்த கோஷ்டியினர்போலன்றி இவர்களனைவரும் வயதிற் குறைந்த இளைஞர்களாகவே புலப்பட்டனர். ஆர்வமும் துடிப்பும் அவர்களை முன்னிழுத்து வந்திருக்கின்றன.

இரண்டாவது நிகழ்ச்சி சின்னமணி என்ற பட்டப் பெயருடன் அழைக்கப்படும்

(5-ம் பக்கம் பார்க்க)

**மேகலா தயாரித்து தரும்**




## ஆடல் அரசி அனுர்க்கலி

சிவகாமி நாடக மன்றம் சார்பில் நடிகை சந்திரகாந்தா 'ஆடல் அரசி அனுர்க்கலி' என்ற புதுநாட்டிய நாடகத்தை அரங்கேற்றம் செய்கிறுர்!

இந்த நாட்டிய நாடகத்துக்கான பாடல்களை மருதகாசி எழுத, இசையை புகழேந்தி அமைத்திருக்கிறுர்! ஜூன்மாதம் இதன் அரங்கேற்றம் நடக்கிறது!

## மேடையில் ஏறிய விஜயா நான்கு வார்த்தைகள் மட்டுமே பேசினுர்!

சிறந்தபடம், நடிகர் நடிகையைத் தேர்ந்து எடுத்து தமிழக அரசுபரிசு வழங்கியதல்லவா!

இந்தப் பரிசளிப்புவிழா சென்னை நூற்ருண்டு கலை மண்டபத்தில் நடந்தது! அதில் பரிசு பெற்ற கலைஞர்கள் நடிகர் ஏ. வி. எம். ராஜன், படஅதிபர் வீரப்பன் ஆகியோர் பேசினர்.

கே. ஆர். விஜயா பேசுவதற்கு ஒலிபெருக்கி முன்பு வந்துநின்றுர்.

''எல்லோருக்கும் எனது நன்றி வணக்கம்!''-என்று நாலே நாலு வார்த்தை தான் பேசினுர்.

கே. ஆர். விஜயாவினுல் அதற்குமேல் பேசவும் முடியவில்லை; சிரிப்பையும் அடக்கமுடியவில்லை.

ரசிகர்கள் கைதட்டல் வானைப் பிளந்தது.

## கடைக்காரருக்கு மோதிரமும் பணமும் கொடுத்து உதவினுர் சிவாஜி கணேசன்

டீக்கடைக்கு சிவாஜி கணேசன் பணமும் மோதிரமும் கொடுத்து உதவினுர்.

சிவாஜி பால் வியாபாரம் செய்துவந்தார். ஒருநாள் அவர் வழக்கமாக பால் கொடுக்கும் 'டீ'க்கடைக்கு பாலை அளந்து கொடுத்துவிட்டு, 'ஒரு டீ கொடுப்பா' என்று பெஞ்சில்உட்கார்ந்து கொண்டார். டீக்கடைக்காரர் சிவாஜி கணேசனிடம் பாலுக்கான பணத்தைக் கொடுத்தார். சிவாஜி கணேசன் அதை வாங்கி மடியில்சொருகிக்கொண்டார்.

இதை ராமப்பிரபா பார்த்துவிடுகிறுர். அவர் அந்தக் கட்டடத்தின் சொந்தக்காரர். அவருக்கு டீக்கடைக்காரர் பாக்கி தரவேண்டியிருந்தது.

எனவே டீக்கடைக்காரரிடம் போய் 'வாடகைப்பாக்கியை இப்போதே கீழே வை. இல்லேன்னு சட்டப்படி நடவடிக்கை எடுத்து இடத்தைக் காலிபண்ணச் செய்வேன்' என்று மிரட்டினுர்

டீக்கடைக்காரர் பணமில்லாமல் திண்டாடினுர். இதைப்பார்த்த சிவாஜி கணேசன் அவருக்கு உதவ முன்வந்தார்.

டீக்கடைக்காரருக்கு பணமும் மோதிரமும் கொடுத்து வாடகைப்பணத்தை கட்டி முடித்துவிடும்படி தெரிவித்தார்.

குருதட்சணைப் படத்திற்காக சாரதா ஸ்டூடியோவில் இக்காட்சி படமாக்கப்பட்டது.

## நடிகை ஷீலாவை கைவிட்டார் கணவர்!

தக்காளிப்பழமேனி அழகி ஷீலா. அழகுடன்நடனத் திறமையும் நளினமும் சேர்ந்து கொண்ட ஷீலா மீது ஒருவன் காதல்கொண்டான்.

### ஆசை அறுபதுநாள்

காதலித்தவனை ஷீலாவும் நழுவிஓடவிடவில்லை. விடாப்பிடியாக வலைவீசிப் பிடித்து திருமணம் செய்துகொண்டார்.

ஆசை அறுபதுநாள் மோகம்முப்பதுநாள்தானே. கொஞ்சநாட்கள் கடந்ததும் ஷீலா மீது கொண்டமோகம் அந்த ஆசாமிக்கு நீங்கியது. நடனக்காரி ஷீலாவை உதறினுன். உறவு முறிந்தது.

### கே. ஆர். விஜயா

உள்ளம் உடைந்தாள், ஷீலா. கண்ணீரும் கம்பலையுமாக ஷீலாவின் வாழ்க்கை கழிந்தது இந்த நிலையில் கணவனுடன் ஷீலாவை சேர்த்துவைக்க முயற்சிசெய்தார் கே. ஆர். விஜயா.

'உன்னை உன் கணவர் வீட்டில் சேர்த்து . நல்வாழ்வு கிடைக்க வழிசெய்கிறேன்!' என்று ஷீலாவிடம் கூறினுர், கே. ஆர். விஜயா.

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஜீரணம் மரணத்தையும் தரும் நொறுங்கத் தின்றால் நூறு வயது

சரியாக முறைப்படி இயங்கிக்கொண்டிருக்கும் உங்களது மோட்டார் காரின் இயந்திரத்திற்குள் ஒரு பிடி மணலை அள்ளிக் கொட்டுவீர்களா? அப்படி செய்வீர்களானால் உலகில் அதைவிடப் புத்தியீன மான செயல் வேறு இருக்காது. இருந்தும் இயந்திரத்திற்கு அப்படிச் செய்துவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் சில சமயங்களில் அதைவிடத் தீங்கு விளைவிக்கும் காரியத்தை உங்களுடைய சீரண உறுப்புகளுக்குச் செய்கிறீர்களே. இதை யோசித்துப் பார்த்ததுண்டா? உங்களுடைய ஜீரணத் தன்மையைப் பொறுத்துத்தான் உங்களுடைய சுகநிலை உள்ளது.

நாம் நம்மை வாழ்க்கையின் விதிகளுக்குச் சரியானபடி கீழ்ப்படுத்தும்போதுதான் ஆரோக்கியம் உண்டாகிறது. காரணமில்லாமல் வியாதி ஒருபொழுதும் வராது. ஆரோக்கிய விதிகளை மீறும்போது உடல் நலம் குன்றுவது சகஜமே. அநேகர் ருசிக்காகவே உண்டு உடல் நிலையைக் கெடுத்துக் கொள்கிறார்கள். இவர்கள் ருசியைத்தான் பார்க்கிறார்களேயொழிய நொறுங்க மென்று உண்பதைக் கைக்கொள்வதில்லை. மென்று உண்பதற்குத்தான் பல்லிருக்கிறது என்பதை அநேகர் மறந்து விடுகிறார்கள். மென்று உண்ணுதவர்கள், இரைப்பைக்குப் பற்கள் இல்லை என்பதை மனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இதனை வலியுறுத்துவதற்காகவே 'பாதிச்சீரணம் பல்லில் உள்ளது' என்று ஆன்றோர்கள் கூறியுள்ளார்கள். உணவுப் பழக்கங்களில் ஏற்படும் தப்பிதம் ஆரோக்கியத்தைப் பாதிக்கும். ஆரோக்கிய விதிகளை முறித்துக்கொண்டு ஆரோக்கியம் பெற இயலாது.

ஏதோ ஓர் உறுப்பு நோய் வாய்ப்பட்டிருக்கிறது என்று நம்மை எச்சரிப்பதற்காகவே குமட்டல், வாந்தி முதலிய ஜீரணக் கோளாறுகள் தோன்றுகின்றன. கொடிய அப்பெண்டிசயிட்டிஸ் என்னும் வியாதிக்கு முன் தூதனாக வயிற்றில் வலி உண்டாகி, குமட்டலும், வாந்தியும் வருகிறது. எனவே இயற்கை அன்னை கொடுக்கும் எச்சரிக்கைக்குச் செவி கொடுங்கள்.

ஒரு முறை எனது நண்பர் ஒருவர் மந்தியான வேளையில் திடீரென ஓடி வந்தார். தலை சுற்றுகிறது என்றார். உடல் யாவும் வியர்த்துக் குளிர்ந்துகொண்டிருந்தது வேதனையால் சுழன்று கொண்டிருந்தார். படுப்பதும், எழும்புவதும், உழத்துவது மாக இருந்தார். வயிற்றுக்குள் ஏதோ செய்கிறது என்றார். பின்பு வாந்தி வருவது போல் இருக்கிறது என்றார். விரலை வாய்க்குள் விட்டு வாந்தி எடுக்கும்படி செய்தேன். அப்பொழுது தான் விஷயம் புரிந்தது. அவர் உட்கொண்டிருந்த உணவு சீரணம் பெறாதிருந்ததைக் கண்டேன். வாந்தியின் பின் அவர் சற்று ஆறுதலடைந்தார். மென்று தின்னப் படாத உணவை இரைப்பை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. அப்படிச் சென்ற ணவை வாந்திமூலம்வெளி யேற்றியே தீரும்.

எவர் விஷய முணராதவர்களாய் மிருகங்களைப்போல் அளவின்றி அமிதமாகப் புசிக்கிறார்களோ, அவர்கள் அநேக விதமான வியாதிகளுக்குக் காரணமான அஜீரணவியாதியை அடைகிறார்கள். சாஸ்திரமறிந்து, மிதமாகப் புசித்துவருபவர் அவ்வியாதியைப் பெறமாட்டார். மயக்கம், அதிகாரம், வாந்தி, அதிக நாவறட்சி, வயிற்றுளைச்சல், தலைச்சுற்று கொட்டாவி, தேகதாபம், உடல் கருநிறங்கொள்ளல், நடுக்கல், இருநயத்தில் வேதனை. தலைவலி, உடல் பாரமாயிருப்பது போன்ற உணர்ச்சி, கன்னங்களிலும் கண்களைச் சுற்றிலும்வீக்கம், புசித்த உணவு மேல் நோக்குதல், வியர்வை, உடல் விறைத்தல், உடலெங்கும் வேதனை, வயிறு விம்முதல் அபானவாயு தடைப்பட்டு மேல் நோக்குதல், மலம் கட்டப்படுதல், புளித்தல் என்பன கண்டபடி உணவை ஏற்பதால் உண்டாகும். சில வேளைகளில் அஜீரணத்தில் மூர்ச்சை, பிதற்றல், வாயில் நீர் அதிகமாயூறுதல், தேக மிளைத்தல், அத்தோடு மரணமும் ஏற்படும்.

**கே. கே. ஜெயரத்தினம் டி. ஏ. எம்.**

அஜீரணத்திற்குக்காரணம் பெருந்தீனிதான். அளவாகச் சப்பிட்டு வந்தால் நாம் ஒருபோதும் விசனப்பட வேண்டியிருக்காது என்று வேடிக்கையாக ஒரு பெரிய உண்மையை பென்ஜமின் பிராங்கிலின் சொல்லியிருக்கிறார். இதையேநமதுசித்தர்களும் ஒரு பொழுதுண்பவன் யோகி யென்றும், இருபொழுதுண்பவன் போகியென்றும், முப்பொழுது உண்பவன் ரோகி என்றும் கூறியிருக்கிறார்கள். அநேக விதமான பதார்த்தங்கள் இருப்பதினாலேயே நாம் அளவுக்குமிஞ்சி அதிகமாய்ச் சாப்பிட்டு விடுகிறோம் இன்னொருகாரணம் நாம் விரைவாக உணவு அருந்துகிறோம். ஆற, அமர, பதறாமல் சாப்பிடுவோமானால் இவ்வளவு கோளாறுகளும் நமக்கு கடைசிவரையும் உண்டாகாது

நல்ல ஜீரணத்திற்கு ஆதாரம் நொறுங்க மெல்லுவது தான். இதற்கு ஆரோக்கியமான பற்கள் தேவை. பற்கோளாறுகளை நீக்க பல் வைத்தியரைச் சந்தியுங்கள். பல்லில் சொத்தை உண்டாகி உபத்திரவம் வருமட்டும் காத்திருக்கவேண்டாம். மூக்கு, தொண்டை முதலியவைகளையும் அடிக்கடிசோதிப்பதால் ரொன்சில், அடினெயிட்ஸ் முதலிய வாதைகள் வராமல் தடுக்கலாம்.

நாம் உண்ணும் உணவை இரப்பை நான்கு அல்லது ஐந்து மணி நேரங்களில் பாகு படுத்தி, ஜீரண உறுப்பின் அடுத்த பாகத்திற்கு அனுப்பிவைக்கின்றது. நன்றாய்ச் சாப்பிட்டபின் சுமார் இரண்டு அல்லது மூன்று மணிநேரத்திற்குள் ஒருவன் மிட்டாயோ, ஐஸ்கிரீமோ அல்லது கொக்கோவோ, வாழைப்பழமோ சாப்பிட்டால் இரைப்பையில் உள்ள உணவு சுமார் நான்கு அல்லது ஐந்து மணித்தியாலங்கள் தாமதித்தே அடுத்த பாகத்திற்கு அனுப்பப்படுகிறது. சில சமயங்களில் ஒன்பது மணி நேரம் சென்ற பின்பும் உணவுஇரப்பையை விட்டு நகருவதில்லை. அப்படியானால் அங்கு உணவு நுரைத்துப் புளித்துப்போய் விடுகிறது. அதுமாத்திரமல்ல, இரப்பைக்கு ஓய்வு இல்லாமல் போய்விடுகிறது.

இடை இடையேசாப்பிடும் பழக்கம் அஜீரணத்தில் கொண்டுபோய் விடும். வேளைக்கு வேளை ஒழுங்காக நாம்உண்ணவேண்டும். நமது உறுப்புகள் எல்லாம் ஒரு உன்னத முறையிலேயே வேலைசெய்கின்றன. எனவே அவற்றிற்கு ஓய்வுஅவசியம். அப்போதுதான் அவைதிறம்பட வேலைசெய்யமுடியும்.

நமது உணவும் அதனை நாம் உட்கொள்ளும் வகையுமே நமது ஆயுளை நிர்ணயித்து வருகிறது என்று சொன்னால் அது முற்றிலும் சரியே. எனவே சகல ஆரோக்கிய விதிகளையும் கடைப்பிடித்து, நொறுங்கத் தின்று நூறு வயது வாழ்வோமாக!

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணி:

யாழ்ப்பாண முனிசிப்பல் எல்லைக்குள் வீடு கட்டுவதற்கு பொருத்தமானது. திருநெல்வேலி உபதபால் கந்தோரின் இடப்பக்கத்து ஒழுங்கைக்குப் பக்கத்தில் உள்ள நிலம். விபரங்களுக்கு: செ. நாகலிங்கம், பள்ளிக்கூட வளவு, சுதுமலை வடக்கு, மானிப்பாய். 802

முட்டை இடும் கறுப்புக் கோழிகள் Ex. Nel Farm, மற்றும் ஒரு மாதச் சேவற் குஞ்சுகளும் பேட்டுக் குஞ்சுகளும் உடனடியாக விற்பனைக்குண்டு. பிரணவப் பண்ணை, கந்தரோடைவீதி, சுன்னாகம். 910

காணி

யாழ்ப்பாணம் நாவலர் வீதி 20 பரப்புக்காணி, வீடு, நன்னீர்க் கிணறு, செய்பயிர்களுடன் கண்டிவீதி, கச்சேரி, புங்கங்குளம் புகையிரத ஸ்தானம், கனகரத்தினம் மகாவித்தியாலயமாகிய இடங்களுக்கு அண்மையில் விற்பனைக்குண்டு பிரித்தும் கொடுக்கப்படும். 184, கண்டிவீதி இல்லத்தில் தொடர்புகொள்ளக. 905

### தேவை

வெல்டர்- (காஸ்-எலெக்றிக்) கிறுங்சாவ்ற் நிரப்புதல், மெற்றல், ஈயம் வைத்தல் முதலிய வேலைகளில் அனுபவம் வாய்ந்தவர் விண்ணப்பிக்கவும். யந்திரம்ஸ், 48, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 917

பங்காளர்

விவசாயக் கைத்தொழில் ஸ்தாபனத்திற்குப்பங்காளர் தேவை. ரூபா 5000/- முதலுக்கு மாதாந்த ஆதாயம் ரூபா 200/- வழங்கப்படும். விபரங்களுக்கு: கனிமனை. பூநகரி. 911

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு எதிரில் விசாலமான கடை வாடகைக்கு உண்டு. விசாரணை: 408, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 918

### கல்வி

1969-ம் ஆண்டுக்குரிய க. பொ. த. சாதாரண உயர்தர பரீட்சைகளுக்கு வர்த்தக, கலை, விஞ்ஞான ஆங்கில சிங்கள தையல் வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இருபாலாருக்கும் விடுதி வசதியுண்டு. வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. 1924-ல் ஆரம்பிக்கப்பட்டது 920

---

சென்னை ஏப் 4.

தமிழ் நாட்டில்பருவமழை தவறினால கடும் வரட்சி நிலவுகிறது; செங்கல பட்டுஜில்லாவில வரட்சி காரணமாக 12 லட்சம் விவசாயிகள் தொழில இழந்துள்ளனர்.

## ஷீலாவை ....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி ஒரு காட்சி விஜய சித்ரா பிலிம்சின் 'பெண்ணை வாழவிடுங்கள்' என்றபடத்துக்காக கோல்டன் படப்பிடிப்பு நிலையத்தில் படமாக்கப்பட்டது.

ஜெய்சங்கர் நடிக்கும் இந்தப் படத்தை எம். கே. சுப்

## என் வாழ்வில் ஒரு நாள்—(9)

# 'கமம செய்வோம், பண்ணை வளர்ப்போம்!'

அன்று நீங்கள் தேனியிடம் கதை கேட்டதை நான் பார்த்துக்கொண்டு தான் இருந்தேன். தேனி

கிறோமல்லவா? அதைப் போல இந்த உலகம் முழுவதிலும் சுமார் 2000க்கு மேற்பட்ட எறும்பு இனங்கள் இருக்கின்றன. இனத்துக் கினம் எங்கள் வாழ்க்கை

லவா? இவர்களை நீங்கள் செய்யும் தோட்டங்களில் காணலாம். தக்காளிச்செடியில் அழுக்கணவன் பிடித்து விட்டதென்று நீங்கள் சொல்வது எங்களுடைய பண்ணை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கலாதேவியின் கருணை ஒரு சுனைப் பெருக்கு

## அமைவை முன்கூட்டி அறிய முடியுமா?

குழந்தை ஒன்று பிறக்கின்றது. சோதிடனை நாடி பிதா செல்கின்றார். தன் பிள்ளைக்குச் சிறந்த கல்வி கற்கும் அமைவுண்டா என்று வினவுகின்றார். பிள்ளைக்குச் சுதாரிட்டம், கஷ்ட பலன் உண்டா என்பதை

ண்டாம் இராசி வாக்குச் சித்தியையும் 4 ம் இராசி படிப்பாற்றலையும், 5 ம் இராசி விவேகத்தையும் காட்டும், இராசிகளாகும்.

வியாழன் புதன் இரண்டாதிபர் ஆகிய கோள்கள், கேந்திரத்திலோ, திரிகோணத்திலோ ஆட்சி உச்சம்

யும் ஐந்தாதிபராக, நவாம்சத்தில் ஐந்தாதிபர் நின்ற வீட்டதிபர் சுபர் நோக்குப் பெறலால் தீவிரபுத்தியோகத்தையும்கோள்கள் 7 இராசியமைவுறலால் வல்லகியோகத்தையும் நீங்கள் காண முடியும். இவை பெருத்த சிநேகம். சங்கீதப்பிரியராகவும் சகல சாஸ்திர வல்லுந

சிரியராய் 25 ஆண்டுகளுக்கு மேல் திருநெல்வேலிசைவாசிரியர கலாசாலையில்கடமை யாற்றினார். அரிய பல நூல்களை ஆக்கி வெளியீடுசெய்துள்ளார். பண்டிதமணி அவர்களின் பரிபாலனத்தில் ஒரு நூல் வெளியீட்டுச் சபையே இயங்கிவருகின்றது. கந்தபுராண தட்ச

சித்ரா பிலிம்சின் 'பெண்ணை வாழவிடுங்கள்' என்றபடத்துக்காக கோல்டன் படப்பிடிப்பு நிலையத்தில் படமாக்கப்பட்டது.

ஜெய்சங்கர் நடிக்கும் இந்தப் படத்தை எம். கே. சுப்பிரமணியம் டைரக்ட் செய்கிறார்.

நாகேஷ், வி. கே. ராமசாமி, வாசு, சுந்தரிபாய் ஆகியோரும் நடிக்கிறார்கள்.

## மெல்லிசையும்

(4-ம்பக்கத்தொடர்ச்சி)

திரு. க. நா. கணபதிப்பிள்ளையின் வில்லிசைப்பாட்டு ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் பலமேடைகளில் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை நடத்திப் பேருற்ற பூங்குடி ஆறுமுகத்தின் வில்லிசை நிகழ்ச்சியில்- கதையை வாங்கி கருத்தும் விகடமும் சொல்லிவந்த கணபதிப்பிள்ளை இரசிகர்களுக்குப்பரிச்சியமானவர் தனது சொந்தப்பயிற்சியினுல் இந்தவிழாவில் சிலம்புச்செல்வி என்னும் கண்ணகி கதையைக் கூறினார். சுயபாணி சொல்லில் தெளிவு, காலத்திற்கேற்ற புதுமையான கருத்துக்கள் இவரது கதையினூடேவெளிவந்தன. ஆனுல் பக்கப்பாடகனுடைய இடத்தையும் இவரே தனதாக்கிக் கொண்டமையால் இரண்டு விதக்கடமையை ஏற்றுள்ளார். ஆயினும் நல்ல பயிற்சியும் தேர்ச்சியுமுள்ள ஈழநல்லூர் எஸ். எம். சோமசுந்தரம் (ஆர்மோனியம்), லயஞானபூபதி என். தங்கம் (மிருதங்கம்) ஆகியோர்களின் துணை இவரது வில்லிசை நிகழ்ச்சியை முழுமை செய்தது. நல்ல எதிர்காலம்( உண்டென்பதைக் காட்டிவிட்டார்.

மூன்ருவது யாழ்ப்பாணம் குருநகர் இளம்பகுதி நாடக மன்றத்தினரின் ஹெலன் என்ற சரித்திர நாடகம் நடைபெற்றது.

நமது நாட்டில் நாடகக் கலை துடிப்புள்ளவர்களின் கருத்துக்கிலக்காகியுள்ளதை இந்த நாடகம் புலப்படுத்தியது. இவர்களை மென்மேலும் வழிப்படுத்திஞல் நிச்சயம் நாம் நல்ல இடத்தைப் பெறமுடியும்.

அன்று நீங்கள் தேனியிடம் கதை கேட்டதை நான் பார்த்துக்கொண்டுதான் இருந்தேன். தேனியைப் பிரமாதமாகப் புகழ்ந்தீர்கள். பூச்சி உலக நாகரீகத்தின் சிகரமாக தேனீ விளங்குவது உண்மைதான். ஆனுல் நாங்கள் தேனீக்கு சற்றும் சளைத்தவர்களல்ல. எங்களுக்கு இறக்கை இல்லாத குறைதான் ஒன்று. இறக்கையை மட்டும் ஆண்டவன் தருவானுகில் நாங்கள் தேனீயையும் வென்று விடுவோம்.

ஏனென்ருல் தேனீ தேன் சேகரிக்கும் ஒரே ஒரு தொழிலைத்தான் செய்கிறது. நாங்கள் பல தொழில் விற்பன்னர்கள். எங்கள் குலத்தில் கமக்காரர் இருக்கிறார்கள்,

## சொன்னது: எறும்பு

பண்ணையாளர் இருக்கிறார்கள், என்ஜினியர்மார், தச்சர், போர்வீரர், தாதிகள் எல்லோரும் இருக்கிறார்கள். திருட்டு வேலை செய்பவர்களும் உண்டு.

இவர்களை எல்லாம் நேரில் சந்திப்பதற்கு உங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைப்பது அரிது, ஏனென்ருல் நாங்கள் உங்கள் கண்ணுக்குத் தெரியாத நிலவறைகளில்தான் பெரும்பாலும் சீவிப்பது. தேனீக்கள்போலவே நாங்களும் பெரிய பெரிய நகரங்கள் அமைத்து ஒரு பெரும் சமுதாயக் குடும்பமாக கூட்டுறவுச் சீவியம் நடத்துகிறோம். எங்கள் எறும்பு இனத்தில் பல வேறுபட்ட குடும்பங்கள் இருக்கின்றன. உருவம், நிறம், பருமன், குணம் முதலியவற்றில் எங்களுக்கிடையே வித்தியாசங்கள் உண்டு. ஏன், உங்களுக்குத் தெரியத்தக்கதாகவே இந்த ஊரில் சிற்றெறும்பு, கட்டெறும்பு, கொள்ளியெறும்பு, பிள்ளையார் எறும்பு, ஒழுக்கெறும்பு, நுள்ளான், முசுறு என்றெல்லாம் இருக்கிறோமல்லவா? அதைப்போல இந்த உலகம் முழுவதிலும் சுமார் 2000க்கு மேற்பட்ட எறும்பு இனங்கள் இருக்கின்றன. இனத்துக்கினம் எங்கள் வாழ்க்கை முறைகளும் வித்தியாசப்படும். ஆயினும் அவற்றிலே ஒரு பொதுவான ஒருமைப்பாடு இருப்பதை நீங்கள் காணலாம்.

ஒவ்வொரு குடும்பத்திலும் தொழிலாளர்களும், காவலாளிகளும், போர் வீரரும், தாதிவேலை செய்வோரும், பணியாளர்களும் இருக்கிறார்கள். உங்களில் சிலரைப்போல சும்மாஇருந்து வயிறு வளர்ப்பவர்களும் உண்டு. தேனீகுடும்பத்தில்போலவே எங்களுக்கும் ஒரு ராணி இருப்பாள். அவளை நீங்கள் ஒரு போதும் காணமுடியாது. எந்த நேரமும் வீட்டில் இருந்துகொண்டு முட்டையிடுவதுதான் அவளுடைய வேலை. அவளுக்கு வேண்டிய தீனியை நாங்கள் சேகரித்து ஊட்டுவோம். முட்டைகள் பொரித்தவுடனே சிறுவர்களைப் பேணிப் பாதுகாப்பதற்கு தாதிகள் இருக்கிறார்கள். உங்கள் வீடுகளிலுள்ள ஆயாமார்களைப் போலவே இவர்களும் சிறுவர்களுக்கு குறிக்கப்பட்ட நேரத்தில் உணவூட்டி, பொந்திலிருந்து வெளியே கொண்டுவந்து ஆதரவுடன் நடக்கப் பழக்கி, வயதாகும் வரை வளர்த்துவிடுவார்கள்.

தொழிலாளர்களாகிய எங்களுடைய முழு நேர வேலை இரைதேடவேண்டியது தான். ஒரு சோற்றுப்பருக்கையையோ, தானியக் குறுநலையோ, செத்த பூச்சி புழுவையோ கண்டுவிட்டோமானுல் கூடியவரையில் நாமே அதை இழுத்துவந்து கூட்டுக்குள் சேர்க்கப்பார்ப்போம். எம்மைவிடப் பத்து மடங்கு அதிக பாரமுள்ள வஸ்துகளையும் தூக்கக்கூடிய வல்லமை எங்களுக்கு இருக்கிறது. முடியாவிட்டால் தான் எமது இனத்தவரில் இன்னெருவருடைய உதவியை நாடுவோம். எங்கள் வாய்க்கருகில்இரண்டு சிறிய தும்பு போன்ற. வளர்ச்சிகள் இருப்பதை நீங்கள் பார்த்திருக்கலாம். அவையே எங்களுக்கு உணர்வூட்டிகள். எங்களுக்கு கண்பார்வையில்லையாதலால் அவற்ருல் ஸ்பரிசித்தே நாங்கள் வழிதேடுவதும் இரை தேடுவதும். எமது இனத்தவர்களை அடையாளம்கண்டு அவர்களோடு சம்பாஷித்துக்கொள்வதும் இந்தஉணர்வூட்டிகள் மூலமாகவே.

எங்கள் இனத்தில் பண்ணையாளர்களும் இருக்கிறார்கள் என்று கூறினேன் அல்லவா? இவர்களை நீங்கள் செய்யும் தோட்டங்களில் காணலாம். தக்காளிச்செடியில் அழுக்கணவன் பிடித்துவிட்டதென்று நீங்கள்சொல்வது எங்களுடைய பண்ணையைத்தான். பூதக்கண்ணுடியில் பார்த்தீர்களானுல் கருமையாக இருக்கும் அந்த அழுக்கணவன் மிகச் சிறிய பூச்சிகள் என்பதைக் காணலாம். இப்பூச்சிகள் எங்களால் வளர்க்கப்படும் கால்நடைகள். இவற்றை மேயக் கட்டுவதற்காகவே செடி நுனிகளில் அவற்றைக் கொண்டுவந்துவிடுகிருேம். அவற்றில் சுரக்கும்ஒருவகை இனிமையான பதார்த்தம் எங்களுடைய பசுப்பால். உணர்வூட்டிகளால் பூச்சி

## எழுதியது: வி. என். பி.


களைத் தட்டித்தட்டி பாலைக் கறப்போம். கடுமையான மழை அல்லது காற்றுவருகிறதென்று தெரிந்தவுடனே எங்கள் கால்நடைகளை மேய்த்துக்கொண்டுபோய் நிலவறைக்குள் இருக்கும் தொழுவங்களில்பத்திரமாக கட்டிவிடுவோம்.

தோட்டத்தை இன்னும் சற்று அவதானமாகக் கவனிப்பீர்களானுல் எங்கள் கமக்காரஎறும்புகளைக் காணலாம். ஒரு மூலையில் சுமார் மூன்று சதுர அடி நிலத்தில் சுத்தமான புல் வளர்கிறது. இதை ஓர் எறும்புக்கூட்டம் கண்ணென பாதுகாத்து வருகிறது. அந்த இனப் புல்லைத் தவிர வேறு புல்பூண்டு வளர்ந்தால்அவையெல்லாம் நறுக்கி அப்புறப்படுத்தப் படுகின்றன. புல் இன்னும் சில நாட்களில் வளர்ந்து பூத்துக் காய்க்கும். அதில் உண்டாகும் தானியத்தை ஒவ்வொரு எறும்பாகப் பொறுக்கி எடுத்துக் கூட்டுக்குள் கொண்டுபோய்ச்சேர்க்கும். மழைகாலத்துக்கென்று உங்கள் கமக்காரர் நெல்லைக் கூடைகளில் போட்டு வைக்கவில்லையா, அதுபோலத் தான்.

தானியக்களஞ்சியம் நிலத்துக்கடியில் பத்திரமாகஇருக்கும். சிறிது மழைநீர்பட்டு தானியங்கள் நனைந்துபோய் விடுவதுண்டு. அச்சமயங்களில் மழை வெளித்து சூரிய வெளிச்சம் வந்தவுடனே நனைந்த தானியங்களை அவர்கள் புற்றுக்கு வெளியே கொண்டுவந்துஉலரப்போடுவார்கள். நன்ருக உலர்ந்த பின் மறுபடியும் அவற்றை புற்றுக்குள் கொண்டுபோய் பத்திரப்படுத்தி வைப்பார்கள். ஏன், உங்கள் வீட்டிலும்சிதறிப்போகும் தானியத்துணுக்குகளைநாம் சேர்த்துக்கொண்டு போவதையும் வெளியே காயப்போடுவதையும் நீங்கள் காணவில்லையா?

எங்கள் இனத்தில் இன்னேர் இனம் புல்பூண்டுகளின் இலைகளை சிறுசிறுதுண்டுகளை நறுக்கிக்கொண்டுபோய் நிலத்துக்கடியில் சேமித்து வைக்கும். இது ஒருவித கூட்டுப்பசளையாக மாறும். அதில் பிடிக்கும் பூஞ்சணம் அவர்களுக்கு உணவாகிறது.

இப்படி இன்னும் எத்தனையோ வகையான எங்கள் சாதியாரை நீங்கள் காணக்கூடும். ஆனுல் ஜாக்கிரதையாக அவர்களுடன் பழக வேண்டும். சிலருடைய கடி பொல்லாத விஷம் நிறைந்தது. இரத்தப்பலியும்எடுத்துவிடுவார்கள். அதோ, ஒரு செத்த இலையானை நோக்கி தோழர்கள் போகிருர்கள். நானும் போகவேண்டாமா? வருகிறேன்.


காலத்துக்கேற்ற வேலைப்பாடு!
கருத்தைக் கவரும் புதுமை!
சிந்தையை நிறைவு செய்வது
உத்தரவாதமுள்ளது
நவீன தங்க வைர நகைகளுக்கு

தெய்வா நகை மாளிகை
(முட்டாஸ்கடைச் சந்திக்கு அருகாமை)
173, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.


## மேல்கரவை காவ. சிவப்பிரகாசன்

கின்றது. சோதிடனை நாடி பிதா செல்கின்றார். தன் பிள்ளைக்குச் சிறந்த கல்வி கற்கும் அமைவுண்டா என்று வினவுகின்றார். பிள்ளைக்குச் சுதாரிட்டம், கஷ்ட பலன் உண்டா என்பதை முதற்கண் அறிய முனையவில்லை. ''கேடில் விழுச் செல்வம் கல்வி; ஒருவர்க்கு மாடல்ல மற்றயவை'' என்ருங்கு, கல்விச் செல்வத்திற்குப் பிதா முக்கியத்துவம் கொடுக்கின்றார்.

கலைச் செல்வம் கிட்டுவதற்கு, ஒருவருக்கு அமைவு வேண்டும். பணத்தைக் கொண்டு அதனைப் பெற முடியாது. கோள்களின் பாகை கலை முதலியவற்ருேடு கூடிய இந்திய நிரயன' முறையில் கணிக்கப்பட்ட ஒருவரின் ஜெனன ஜாதகத்திலிருந்து, அவர் கலைகளில் தேர்ச்சி பெற்று அறிஞராய், பட்டதாரியாய் வர இடமுண்டா என்று எளிதில் கூறமுடியும்.

ஜெனன ஜாதக இராசிச் சக்கரம் பல்வேறு துறைகளைத் தன்னுள் அடக்கி நிற்கும். இராசிச் சக்கரத்தை மூலமாகக்கொண்டு கணிக்கப்படும் வித்தியாம்சம், தசாம்சம் ஆகிய சக்கரங்கள் இந்த ஆய்வுக்கு இன்றியமையாத துணைச்சாதனங்களாகும்.

வித்தைக்குக்குருபகவான், சந்திரன், புதன் ஆகிய கோள்கள் காரகக் கிரகங்களாகும். சுக்கிரனும் ஓரளவு பங்கு கொள்கின்ருர். இலக்கினம், சந்திர இலக்கினம் 2-4-5 ம் இராசிகள் முக்கிய பங்கு கொள்கின்றன இரடும் வித்தைலாபம் என்றும் 'அன்புசேர் கணக்கனுச் சமாகில் நல்வித்தை கூறே' என்றும், ''கூறிய புதனுமழாமதிபனுங் குருவுங் கூடிப், பேறுடன் திரிகோணங்கள், கேந்திரம் பிடித்திட்டாலும், திடவித்துவானுமாமே'' என்றும் இலக்கணம் கொடுக்கின்றன.

ஐந்தாம் இராசியில் புதன் நிலை கொள்வதும், அம்சத்தில் ஐந்தாதிபர் ஐந்தாமிடத்தை நோக்கலும் ஒருவருக்கு வித்தைக்குரிய யோக பலன் கிட்டவகை செய்யும். புதன், இடபம், மிதுனம், கன்னி, துலாம், தனு ஆகிய இராசிகளில் நிலை கொண்டால் மேற்படிப்புக்கு வகை செய்யும். புதனின் மூலத் திரிகோண அமைவு, சோதிடக்கலையில் நாட்டத்தைக் கொடுக்கும். சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்த பண்டிதனுவதற்கும் இந்நிலை வகைசெய்யும்.


கல்விஅமைவுபற்றி ஆராய்வதற்கு பேராசிரியர் அவர்களின் ஜெனன ஜாதகங்கள் வழிகாட்டும். கீழே பேராசிரியர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் ஜெனன இராசிச்சக்கரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

பண்டிதமணியவர்கள் விகாரி வருஷம் ஆனிமாதம் 14-ம் திகதி (27-6-1899) செவ்வாய்க்கிழமை இரா 11-36 மணிக்குப் பிறந்தார். நட்சத்திரம் சதயம் 2-ம் பாதம். இலக்கினம் மீனம். 4 பாகை 7 கலை) விண்மத்தி 244 பாகை 55 கலை. யோகம் (117பாகை 43கலை) பிரீதி யோகக் கோள்கள். புதன், இராகு, சூரியன். அதிஷ்ட எண்கள்: 5-1-4-2. கணிதம்: இந்திய நிரயன கணிதம் ஜெனனகால மகா தெசை. இராகு மகாதெசை. சேஷம் 12-1-66.

பண்டிதமணி அவர்கள ஜாதகத்தில் புதன் ஆட்சி வீடாகி இலக்கின கேந்திரம் பெறலால் பத்ரயோகத்தை புடிப்பாற்றலையும், 5ம் இராசி விவேகத்தையும் காட்டும், இராசிகளாகும்.

வியாழன் புதன் இரண்டாதிபர் ஆகிய கோள்கள், கேந்திரத்திலோ, திரிகோணத்திலோ ஆட்சி உச்சம் ஆகிய நிலைகளிலோ பலம் பெற்று நிற்பின் சிறந்த கல்விக்கு இடமுண்டு. சோதிட நூல்களும் ''பொன் புதனிரண்டின் கோஷம் பொருந்திய கேந்திரத்தில் பின் திரிகோணமேறிப் பெற்றி வீட்டதிபர் சுபர் நோக்குப் பெறலால் தீவிரபுத்தியோகத்தையும்கோள்கள் 7 இராசியமைவுறலால் வல்லகியோகத்தையும் நீங்கள் காண முடியும். இவை பெருத்த சிநேகம். சங்கீதப்பிரியராகவும் சகல சாஸ்திர வல்லுநராகவும் சிறந்த விவேகியாகவும்ஈடுஇணையற்ற அறிவாளியாகவும் ஆக்கும்.

சமயவிஷயங்களில் பெரியாருக்கு ஒரேநாட்டம் சங்கீதத்தில்அதிபிரியம். இதற்கு மூலகாரணம் நாலாதிபர் 4-ல் இலக்கினப்படியும் சந்திரஇலக்கினப்படியும் மேவுதலேயாம். மேலும் புதனின் நிலை ஜாதகரை அறிவாளியாகவும் கலைப்பிரதிநிதியாகவும் திகழ இடமளித்தது. (நூல்: ஜாதக நிதார்த்தம் யாங்கனம்). சந்திர இலக்கினப்படி வாயுதத்துவ இராசி (மிதுனம் 5வது இராசியாவதால் ஜாதகரை அறிஞராய் எப்பொழுதும் யோசிப்பதற்கிடமின்றிச் செயலில் காட்டத்துடிப்பவராய் வர இடமளித்தது. இவர்க்கு தர்க்க சாஸ்திர நாட்டம் உண்டு. சந்திரஇலக்கின ஐந்தாதிபர் 5-ல் மேவலால் ஜாதகருக்கு நீதிபிறழாத் தன்மையை வாரி வழங்கியுள்ளது.




பண்டிதமணி ஜாதகம்

பண்டிதமணி அவர்கள் மட்டுவில் சின்னத்தம்பியாருக்கும், தனங்கிளப்புவள்ளியம்மையாருக்கும், ஈழத்து மக்களுக்கு வழிகாட்டியாய், தவப்புதல்வராய் அவதரித்தார். இவருக்கு 18-வது பராயத்தில் கலைவாழ்வுகிட்டியது என்று பத்திரிகை வாயிலாக அறிகிருேம். அப்பொழுது நடப்பு மகா தெசை வியாழன் மகா தெசை புதன்புத்தியாகும். ஜாதகத்தில் வியாழனின் நோக்குப்பெற்று 4ல் புதன் ஆட்சிபலத்துடன் திகழ்கின்றதை நீங்கள் அவதானிக்கலாம். வியாழன் யோகர் இராகுவின் நட்சத்திரமாய சுவாதி 1-ம் பாதத்துமேவுகின்ருர், என்பது குறிப்பிடக்கூடிய அம்சம்.

பண்டிதமணியவர்கள்ஆசிரியர்க்கு ஆசிரியராய்-பேராசிரியர கலாசாலையில்கடமையாற்றினார். அரிய பல நூல்களை ஆக்கி வெளியீடுசெய்துள்ளார். பண்டிதமணி அவர்களின் பரிபாலனத்தில் ஒரு நூல்வெளியீட்டுச் சபையே இயங்கிவருகின்றது. கந்தபுராண தட்சகாண்ட உரை நூல் பண்டிதமணியவர்களைக் கலைத்துறையில் இன்னேர்படிமுன்வைத்தது. பண்டிதமணியவர்கள் மேலும்சாகித்தியமண்டலப் பரிசைப்பெற்றதும், மண்டலம் அவரைக்கௌரவித்ததும் கலைவாழ்வின் உச்சக் கட்டத்திற்கே அவரை இட்டுச்-சென்றது.

ஒரு இராசியின் கூடுதலான பாகையில் புதன் நின்றுள்ளார். எனவே புதன் பண்டிதமணியவர்கள் ஜாதகத்தில் அத்மக்காரகக் கோளாகும். நவாம்சப்படி மிதுனம் காரகாம்ச இராசியாகும். வியாழன் காரகாம்சத்திலோ அதற்கு ஐந்திலோ நிற்பின் ஒருவரை இலக்கணம், வேதாகமம் இவற்றில் வல்லுநராக்கும். (சுலோ 130 ஜெமினி சோதிடம்) இவ்வமைவைப்பண்டிதமணி அவர்கள் ஜாதகத்தில் காணலாம்.

காரகாம்சத்திற்கு பத்தாதிபர் குரு நவாம்சத்தில் ஆட்சிபெற்று நிற்றலால் ஜாதகர் சமய அறிவில் ஒரு மேதையாகவும், ஒப்பற்ற வேதாந்தியாகவும் திகழ (ஜெமினிசோதிடம் சுலோ 136) இடமளித்துள்ளது.

மேலும் பண்டிதமணியவர்கள் ஜாதகத்தில் சந்திரனுக்கு 5ல் புதனின் நிலை மதுரமான சொற்களையுடையவராகவும், மேதாவியாகவும், இந்நிலைப்படி மீனம்2ம் ஆதிபத்தியமாயமைவதால் சகலகலைகளிலும் பண்டிதனுயும், உலகியல் சமயவிஷயங்களில் ஈடுபாடுடையவராயும் (நூல்ஹோராசாரம்) ஆக்கியுள்ளது. பண்டிதமணியவர்கட்கு இளமையில் கல்விவிஷயமாய் பலகஷ்டங்களை எதிர்நோக்கவேண்டியிருந்தமைக்கு முக்கிய காரணம் கும்பசந்திரனை அவயோகர் செவ்வாய் நோக்கியமையேயாகும். பண்டிதமணியவர்களுக்குத் தற்போது நடப்பு மகாதெசையோகர் இராகுவின் நட்சத்திரத்துமேவிய கேது மகாதெசை. பண்டிதமணியவர்கள் இது காலம் ஈழத்துமக்களுக்கு அரிய பல கலைப்பணிபுரிவார். நூல்கள் பல வெளியிடுவார் என்பது துணிபு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம்

அரசியல் நிருபர்

# யு. என். பி. - தமிழரசு வாழ்க்கை ஒப்பந்தம் மணமுறிவில் முடியுமா?

1965-ம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் ஏற்பட்ட 'வாழ்க்கை ஒப்பந்தம்' 1968-ம் ஆண்டில் பிரிந்து வாழ்தல் என்ற நிலையையடைந்து இன்று 'மணமுறிவு' தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு வந்திருக்கிறது.

1965-ம் ஆண்டில் யு. என். பி.-தமிழரசு வாழ்க்கை ஒப்பந்தம் ஏற்பட்டதும் சிலர் சில காரணங்களையும் பலர் பல காரணங்களையும் கூறினார்கள். ''இனம் இனத்தைச் சேரும்'' என்றனர் சிலர்; மற்றும் சிலர் இது 'கூடா நட்பு' என்றனர். ''இது நீடிக்காது இப்பவோ, பின்னையோ இன்னும் சில நாளிலோ முடிந்துவிடும்'' என்று சிலர் ஆரூடம் கூறினர். இப்படி ஆரூடம் சொன்னவர்களும் கூட இன்று இந்த பிரிவையும் மணமுறிவையும் ஏற்கத் தயாராக இல்லை. தேன் நிலவு முடிந்திருக்கிறது. அதைத் தொடர்ந்து ஊடல் ஏற்பட்டிருக்கிறது; தேர்தல் முடிந்ததும் மீண்டும் 'கூடல்' ஏற்படும் என்று சொல்ல ஆரம்பித்திருக்கின்றனர். அவர்கள் அப்படித்தான் சொல்வார்கள். 'காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போனால்' அவனுக்கு வயிற்றெரிச்சல் ஏற்படாதா என்ன?

எப்படியோ கலியாணப் பேச்சின்போது கொடுத்த வாக்குறுதியை மாப்பிள்ளை வீட்டார் நிறைவேற்றத் தவறிவிட்டனர் என்பதும் இதற்கு மாப்பிள்ளையைமட்டும் குற்றம் சொல்வதற்கு இடமில்லையென்பதும் உண்மை. வாக்குறுதியை நிறைவேற்றாமல் செய்து இடையூறு விளைவித்து மணமக்களைப் பிரித்து வைப்பதற்கு, முதலில் பெண்ணைத் தட்டிக்கொண்டு போக நின்றவர்கள் செய்த முயற்சிக்கு மாப்பிள்ளையும் மாப்பிள்ளை வீட்டாரும் இடம் கொடுத்துவிட்டனர். அதன் விளைவுதான் இன்றைய நிலைமை!

## ஆட்சி அமைப்பை மாற்ற அவர்களின் உதவியும் தேவை

1949-ம் ஆண்டில் இலங்கைத் தமிழரசுக்கட்சி தோன்றியது. 1945-ம் ஆண்டில் தோன்றிய அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி, 1948-ம் ஆண்டில் காலஞ்சென்ற திரு. டி. எஸ். சேனநாயகாவின் மந்திரிசபையில் சேர்ந்து கொண்டதன் விளைவாக ஏற்பட்ட கருத்துவேற்றுமை காரணமாக அதிலிருந்து வெளியேறிய சிலர் தமிழ் அரசுக் கட்சியை உருவாக்கினர். இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளி மக்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டது. இந்த நாட்டிலுள்ள தமிழ் மக்களின் சகல உரிமைகளையும் பறித்து அடிமைகளாக்குவதற்கான முதல் திட்டம் என்று கூறி இந்தத் திட்டத்தை ஒழித்துக்கட்டுவதே தமிழரசுக் கட்சியின் நோக்கமென்றும் அதன் தலைவர்கள் கூறினர். அவர்கள் சொன்னதில் தவறில்லையென்பதை இன்று அனைவரும் ஏற்றுக்கொள்வர். தமிழ் பேசும் மக்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாத்து இதர சமூகத்தவர்களுடன் சமத்துவமாக வாழவும் இந்நாட்டுக்குக் கிடைத்த சுதந்திரத்தை அனுபவிக்கவும் உள்ள ஒரே வழி இங்கு சமஷ்டி ஆட்சி அமைப்பை ஏற்படுத்துவதுதான் என்பது தமிழரசுக் கட்சியின் இலட்சியம். ஒன்றுக்கு மேற்பட்ட மொழி பேசும் பல இன மக்கள் வாழ்கின்ற இலங்கை போன்ற நாட்டுக்கு சமஷ்டி ஆட்சி அமைப்புத்தான் உகந்தது என்று அவர்கள் கூறிவருகின்றனர். அவர்கள் கூற்றுக்கு ஆதாரமில்லாமலில்லை. சமீபத்தில் செக்கோஸ்லவாக்கியா கூட சமஷ்டி ஆட்சி அமைப்பு முறையை ஏற்படுத்தியிருக்கிறது.

சமஷ்டி ஆட்சி அமைப்புத்தான் இலங்கைக்குப் பொருத்தமானதென ஒரு காலத்தில் கருத்துத் தெரிவித்த காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா பின்னர் அரசியல் காரணங்களுக்காக மாற்றிக்கொண்டார். ஆயினும் அதிகாரம் ஒரே இடத்தில் ... பரவ

லாக்கப்பட வேண்டுமென்ற கருத்தைக்கொண்டிருந்ததால் 1957-ம் ஆண்டில் தமிழரசுக் கட்சியினருடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிரதேசசபைகள் அமைக்க இணங்கினார். அந்த ஒப்பந்தம் அமுல்செய்யமுடியாமல் போனதற்கு இன்று ஆட்சிபீடத்திலுள்ள யு. என். பி. யினரும் காரணமாக இருந்தனர். இதன் பின் மாவட்டசபைகள் அமைக்க திருமதி சிறிமா பண்டாரநாயகா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் கூட்டணியினரும் ஒப்புக்கொண்டனர். அப்போதும் எதிர்ப்புக்கிளம்பியது. மாவட்ட சபை அமைக்கு மறுத்துவிட்டனர். பின்னர் 1965-ல் தேசிய அரசாங்கம் அமைத்த திரு. டட்லி சேனநாயகாவும் அமைச்சர்களும் மாவட்ட சபை அமைக்க ஒப்புக்கொண்டு அதற்கான முயற்சிகளையும் செய்தனர். பழைய படி ஆளும் கட்சிக்குள்ளேயும் வெளியேயும் எதிர்ப்புக்கிளம்பியது. அத்துடன் மாவட்டசபைகளின் கதை முடிந்தது. சமஷ்டி ஆட்சி என்பதை இலங்கையைப் பிரிவினைசெய்யும் திட்டம் என்ற தவறான பிரசாரம் மாவட்டசபை சமஷ்டிக்கும் இலங்கையைப்பிரிவினைசெய்வதற்கும் முதற்படி என்ற பிரசாரமுமே இவற்றுக்கு மூலகாரணம். சமஷ்டி ஆட்சி அமைப்புமுறை தமிழ் மக்களுக்கு நன்மைதராது என்றும் மாவட்டசபையினால் ... உள்ள உரிமைகளும் ... போய்விடுமென்றும் ...

ளுரு தமிழ்க்கட்சியும் பிரசாரம் செய்துவந்தது. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பதுபோல தமிழ் மக்களுக்கிடையில் மாவட்ட சபை, பல்கலைக்கழகம் மற்றும் திட்டங்களிலுள்ள வேற்றுமையை ஆட்சிபீடத்துக்கு வரும் பெரும்பான்மைச் சமூகங்களைச் சேர்ந்த கட்சிகள் பயன்படுத்திக் கொள்கின்றன. ஆட்சிபீடத்திலமர்வதற்கு தமிழ்ப்பிரதிநிதிகளைப் பயன்படுத்துவதில்தான் அந்தக் கட்சிகளுக்கு அக்கறை.

தமிழரசுக் கட்சி கடந்த கால அனுபவங்களைக் கொண்டு சில மாறுதல்கள் செய்ய முன்வந்தாலினியும் பயன்தரச் சந்தர்ப்பமில்லாமல்போகாது முதலில்செய்த தவறைத்திருத்தி தமிழரசுக் கட்சி தன்னை ஒரு தேசியக் கட்சியாகப் பிரசடனம் செய்து சமஷ்டிஆடசிமுறையைப் பெரும்பான்மை மக்கள் மத்தியிலும் பிரசாரம் செய்வதுடன் தமிழரல்லாதவர்களும் கட்சியில் அங்கம் வகிக்கக்கூடியதாக அதன் அமைப்புத்திட்டங்களில் மாற்றம் செய்யலாம்.

இன்றைய அரசியல் அமைப்பு நமது நாட்டுக்கேற்றதல்லவென்பதைப் பெரும்பான்மைச் சமூகத்தவர் பலரும் இப்போது உணரத்தொடங்கியிருப்பதால் நிர்வாகத்தைப்பரவலாக்கவேண்டியதன் அவசியத்தை பல வழிகளிலும் எடுத்துககூறலாம். இவை தவிர ஒற்றையாட்சி அமைப்பினுல் இதுவரை கிடைத்த பயனைத் தமிழ் மக்கள் மத்தியில் விளக்கிக்கூறுவதோடு சமஷ்டி ஆட்சியையும் அதற்கு முன்னோடியாக மாவட்டசபையை ஏற்படுத் துவதிலும் இதுவரைகடைப்பிடித்த வழிகளை இனியும் கடைப்பிடிக்காமல் தமிழ் ... மற் ... இதரகட்சியின ஒத்துழைப்பை பெற்று தங்கள் இலட்சியத்தை

அடைய புது வழிகளைக் கையாள முன்வரலாம்.

தமிழரசுக்கட்சி தேசிய அரசாங்கத்துக்கு சென்ற மாதங்களாக அளித்துவரும் நிபந்தனையுடன் கூடிய ஒத்துழைப்பைக் கைவிட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்து எதிர்ப்பு இயக்கமாக மீண்டும் இயங்கத் தீர்மானித்தால் தென்னிலங்கையிலும் ஐக்கிய தேசியக்கட்சியின் பிரசாரத்துக்கு நல்ல வாய்ப்பு ஏற்படும். பழைய படி 'தேசியம்'' கைவிட்டுப் போகலாம். இன்னும்ஒருவருடகாலம் இந்த அரசாங்கம் ஆட்சிபீடத்திலிருக்கஉரிமை உண்டு. தமிழரசுக் கட்சியினர் வெளியேறினல் இவர்களைப் பயன்படுத்தி அரசாங்கத்தை வீழ்த்த எதிர்க்கட்சியினர் முன்வரலாம் இதுவும் பழைய அதாவது 1960-ம் ஆண்டு மார்ச் தேர்தலின் பின் நடந்த கதைதான். 1949-ம் ஆண்டு தொடக்கம் 1965-ம் ஆண்டுவரை எதிர்க்கட்சியாக இயங்கி வந்த தமிழரசுக் கட்சி 1965-ம் ஆண்டிலிருந்து இன்றுவரை ஆளும்கட்சியில் சேர்ந்து ஒத்துழைப்பு அளித்துவந்தது. கடந்த கால அனுபவங்கள் நம்பிக்கெட்ட கதைதான். மீண்டும் அது போராட்டத்திட்டங்கள் வகுத்துத் தயாராகலாம். இங்கு தமிழ் மக்கள் மத்தியில் உணர்ச்சியையும் எழுச்சியையும் ஏற்படுத்தியது தமிழரசுக்கட்சிதான். ஆனல் இன்றும் இதே உணர்வு மக்களிடம் உண்டா?

தமிழ் மக்களின் இந்த உரிமைகளைப்பெறவும் அவர்கள் சுதந்திரமாக வாழவும் சாதி, மதபேதங்களும் கட்சி விருப்புவெறுப்புக்களும் நீங்கவேண்டும். இது சாத்தியமாகுமா?

கள் நுண்கலைக்கல்வி ஆகிய சகலதுறைகளிலும் கைக்கொள்ளப்பட்டுவருகின்றதை நாம் காண்கிறேம். மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு கனிஷ்ட பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டுமென்ற உயர்கல்விச்சபையின் சிபாரிசு கல்விஅமைச்சினல் புறக்கணிக்கப்பட்டிருப்பதையும் அங்கு ஒரு கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரி நிறுவுவதாக அளித்த வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படாமல் இருப்பதையும் நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். தென்னிலங்கையில் வாழ்கின்ற தமிழ்ப்பிள்ளைகளின் கல்வி வசதிகள் மாற்றுந்தாய் மனப்பான்மையோடு உதாசீனம்செய்யப்பட்டுவருகின்றது.

தமிழ் கலாச்சார வளர்ச்சிக்கு அத்தியாவசியம் தேவையான வானெலிநிலையத்திற்கு பரந்தனில் போடப்பட்ட அத்திவாரக் கல் இன்னும் கல்லாகவே கிடக்கின்றது. சுருங்கக் கூறின் அரசாங்கத்திடம் பாகுபாடற்ற ஒரு அபிவிருத்தித் திட்டம் இல்லையென்பதுதான் உண்மை. இவையெல்லாம் இன்றைய ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் நாம் எப்படியெல்லாம் உரிமைகளை இழந்து அழிவுப்பாதையில் தள்ளப்படுகிறேம் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. இதை நாம் தடுத்து நிறுத்தியே ஆகவேண்டும். இந்த அரசியல் அமைப்பைமாற்றியே தீரவேண்டும். எம்மை நாம் ஆளக்கூடிய நிலையேற்பட்டாலன்றி எமக்கு விமோசனம் இல்லை. இந்த இலக்கையடைவதற்கு வழியென்ன என்பதை ஆராந்து தமிழினத்திற்குக் காட்ட வேண்டியது இம் மகாநாட்டின் கடமையாகும்.

**வடக்கு-கிழக்கில் சம அந்தஸ்து**

சென்ற மாதம் வெளியிடப்பட்ட உத்தியோக மொழி பற்றிய திறைசேரி சுற்றறிக்கை, சட்டத்தின் கீழ் இன்றுள்ள உத்தியோக மொழிக் கொள்கையை தெளிவுபடுத்துகின்றது. 1956-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சிங்களம் மாத்திரம் சட்டத்தில் இருந்து இன்றைய கொள்கை எவ்வளவோ மாற்றங்களை கண்டுவிட்டது என்பதை எவராலும் மறுக்க முடியாது. இத்திறைச்சேரிச் சுற்றறிக்கையின் படிவடக்கு கிழக்கு மாகாணங்களில் சகல நிர்வாக வேலைகளுக்கும் தமிழும் கட்டாயமாக உபயோகிக்கப்பட வேண்டும். இம்மாகாணங்களில் அரசாங்க அலுவலகங்களில்

ங்கள், பத்திரங்கள், பெயர் பலகைகள் எல்லாம் நாடு முழுவதும் தமிழிலும் இடம் பெறவேண்டுமென்று இன்று சட்டம் கூறுகின்றது. நமது கோரிக்கையான சிங்களத்திற்கும் தமிழுக்கும் நாடு முழுதும் சம அந்தஸ்தென்பது இன்னும் கிடைக்கவில்லை என்றாலும் தமிழினுடைய அந்தஸ்து நான் மேலே குறிப்பிட்ட விதத்தில் பெருமளவு முன்னேறியிருக்கின்றது என்பதில் சந்தேகம் இல்லை.

## புதுவருட பலன் சொல்லும் பஞ்சாங்கங்கள்

சௌமிய வருஷ வாக்கிய நியராற் கஷ்டம், அரசாங்க சம ... சேவையாளருக்கு ... வாய்ப்பெற்றேம் ... பொருள்

REGAL at JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m.
PrePoya Poya 10-30 A.M.
SPY SMASHER
(Serial சீரியல்)

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, & 9-45
Jay Mukerji
Asha Prackh
in
LOVE IN TOKYO
(HINDI)

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன் - பாரதி
நடித்த
வாலிப விருந்து

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45p.m
Poya, PrePoya 10-30 A.M.
Kazgaras - Steward Granger
Gabriellalicudi
in
THE LAST SAFARI

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி: 6-30, 9-30க்கு மட்டும்
சிவாஜி—சௌகார் ஜானகி
நடித்த
மோட்டார் சுந்தரம்பிள்ளை
4-15க்கு மாத்திரம்
John Wyne Robert Michin
in
ELDORADO

ராஜா (யாழ்ப்பாணம்) 87வது தினம்
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருட பலன் சொல்லும் பஞ்சாங்கங்கள்

சௌமிய வருஷ வாக்கிய பஞ்சாங்கம் வரப்பெற்றோம் யாழ்ப்பாணம் கொக்குவில் இ. சி. இரகுநாதையராலும் அவரது சகோதரரின் புத்திரர் இ. வெங்கடேசஐயராலும் இது கணிக்கப்பெற்றது.

கிடைக்குமிடம்:- இ. சி, இரகுநாதையர், சோதிடபரிபாலன மடம், கொக்குவில். விலை;- ரூ. 2-00.

வழமைபோல் வரப்போகும் புதுவருட பலன் தாங்கி சௌமிய வருஷ வாக்கிய பஞ்சாங்கம் வெளிவந்துள்ளது.

செய்ய சவுமியத்திற்
தேசத்திற் பல்லுயிரும்
உய்யு மழைமிகுதி யுண்
டாகும்-வெய்ய
வினையகலும் பூமி விளை
வினுஞ் செல்வம்
மனையகலா தென்றே மதி.

சௌமிய வருடத்தில் உலக மக்கள்யாவரும்ஏராளமான பயிர் பொருள் மழை இவைகளுடன் விளங்குபவர்களாய்பகைமை நீங்கப்பெற்றவர்களாய் இருப்பார்கள். பூமி பல நன்மைகளை உறுதியாகத்தரும். அந்தணர் பல வேள்விகளைச்செய்யஈடுபாடுடையவர்களாய் இருப்பார்கள்.

**பலன்**

முன்மழைக் குறைவு, பின்மழைசமம், தானிய விருத்தி சமம், கால்நடைகளால் நட்டம், கல்வி விருத்தி' கல்விக்கு அரசாங்க அதிக பணச்செலவு, படித்தவர்களுக்குக் கஷ்டம், அரசியல் கொந்தளிப்பு. ஆயுதப் பெருக்கம், கட்டிடம், தொழில் நுட்பக்கலை ஆகியவற்றில் முன்னேற்றம், அந்நியராற் கஷ்டம், அரசாங்க சேவையாளருக்கு சமசுகம், உணவுப்பொருள் அதிகரித்தல் என்பன உண்டாம்' என மேற்படி பஞ்சாங்கத்தில் எழுதப்பட்டுள்ளது.

சௌமியவருஷ சுத்தவாக்கிய பஞ்சாங்கம்: யாழ்ப்பாணம், கொக்குவில் செ. இராசதுரை சோதிடரால் கணிக்கப்பெற்றது. வரப்பெற்றோம்.

கிடைக்குமிடம்: ஸ்ரீசண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம். விலை ரூ. 2-00.

கலியுகாதி 5071க்குச் சரியான சௌமியவருஷம் சித்திரை மீ 1உ ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 21 நாடி 46 விஞடி 2-46ல்) கிருஷ்ணபக்ஷ துவாதசித் திதியில்சதய நக்ஷத்திரத்தின் நான்காம் பாதத்தில் சுப்பிரநாமயோகத்தில், கவுலகரணத்தில் சிங்கலக்னத்தில் இ புதிய சௌமியவருஷம் பிறக்கும். பகல் 11நாடி-43விஞடிமுதல் (10 மணி 46 நிமி) இரவு 31 நாடி 46 விஞடி வரை விஷு புண்ணிய காலம். (6 மணி 46 நிமி)

**சங்கிரமதோஷ நக்ஷத்திரம்:** 'திருவாதிரை புநர்பூசம் 4-ம் கால், பூசம். ஆயிலியம், சுவாதி, அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால் இந்த நக்ஷத்திரத்தில் பிறந்தோர்கள்தவருது மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்து தானதருமம்சிவார்ச்சனைசெய்துசுகம் பெறவும்' என சோதிடர் செ. இராசதுரை தெரிவித்துள்ளார். 'பூ'


## ஏல விற்பனை

சந்தை, ஆஸ்பத்திரி, கல்லூரிகள் முதலியவை
1/2 — 3/4 மைல் தொலைவுக்குள்ளும்,
திருநெல்வேலி குழாய்நீர் மிக அருகாமையில்
கிடைக்கக் கூடியதாகவும் அமைந்துள்ள 20 அடி
பாதையுடன் கூடிய 20 கட்டடக்காணித்துண்டுகள்
— 43 பரப்புகள் ஏலத்தில் விற்கப்படும்.
1 1/2—2 பரப்புத்துண்டுகளாகவும் பெறலாம்.
விற்பனைக்கான திகதியை எதிர்பாருங்கள்.

யாழ்ப்பாணத்தில் எமது பிரதிநிதி:

**சி. கனகரட்ணம்,** 3-ம் மைல், கொக்குவில்.

**அவ்லோன் ட்ரேட்ஸ்**
றியல் எஸ்டேட் ஏஜண்ட்ஸ்
குருநாகல்.
டெலி: 6179 1199



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 9ம்-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது'


காலத்தில் கருத்துத் தெரிவித்த காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா பின்னர் அரசியல் காரணங்களுக்காக மாற்றிக்கொண்டார். ஆயினும் அதிகாரம் ஒரே இடத்தில் குவிந்திருக்காமல் பரவ ... இலங்கையைப்பிரிவினைசெய்வதற்கும் முதற்படி என்ற பிரசாரமுமே இவற்றுக்கு மூலகாரணம். சமஷ்டி ஆட்சி அமைப்புமுறை தமிழ் மக்களுக்கு நன்மைதராது என்றும் மாவட்டசபையினுல் உள்ள உரிமைகளும் பறிபோய்விடுமென்றும் மற் ... சமஷ்டி ... அதற்கு முன்னோடியாக மாவட்டசபையை ஏற்படுத்துவதிலும் இதுவரைகடைப்பிடித்த வழிகளை இனியும் கடைப்பிடிக்காமல் தமிழ் மக்களினதும் இதரகட்சியினரதும் ஒத்துழைப்பை பெற்று தங்கள் இலட்சியத்தை ... உரிமைகளைப்பெறவும் அவர்கள் சுதந்திரமாக வாழவும் சாதி, மதபேதங்களும் கட்சி விருப்புவெறுப்புக்களும் நீங்கவேண்டும். இது சாத்தியமாகுமா?

# பொருளாதார கல்வித்துறைகளில் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சமீப காலத்தில் மக்களுடைய கலாச்சார தனித்தன்மையைக்கூட அழிப்பதற்கு முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. சில வாரங்களின் முன்காலம்சென்ற மகாநாயக்கதேரோ அவர்கள் தமிழ் மக்களையெல்லாம் தமது பெயர்களை சிங்களப் பெயர்களாக மாற்றும்படி கேட்டுக்கொண்டார். இன்னேர் பிக்குமார் சங்கத்தலைவர் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு ஆயிரக் கணக்கில் சிங்களமக்களைகொண்டு சென்று குடியேற்ற வேண்டுமென்று கூறினுர். நவீன கலாச்சார சாதனங்களில் திரைப்படங்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. அண்மையில் அரசாங்கம் மேற்கண்ட தமிழ்ப்பட பிரதி குறைப்பு நடவடிக்கை தமிழ் மக்களுடைய கலாச்சார தனித்துவத்தை அழிக்கும் திட்டத்தின் ஓர் அம்சமாகவே எனக்குத் தோன்றுகிறது.

இந்த சந்தர்ப்பத்தில் இலங்கைவாழ் தமிழினம் ஒரு தனி தேசிய இனம் என்பதையும் எமது தனித்துவத்தைநாம் எப்போதும் பாதுகாக்க வேண்டுமென்பதையும் நான் கூறிவைக்கவிரும்புகிறேன். இதுசம்பந்தமாக 1961-ம்ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற7-வது மாநில மாநாட்டில் நான் குறிப்பிட்டதை நினைவு கூருவது பொருத்தமாகும். 'எவ்வகையில் பார்த்தாலும்நாம் ஒரு தேசிய இனம் என்பதற்கு ஐயமில்லை. நாம் ஒரு திட்டவட்டமான எல்லையுள்ள பிரதேசத்தைதாயகமாகக் கொண்டிருக்கிறேம். ஒருபொதுமொழியைப்பேசுகிறேம். கல்தோன்றி மண் தோன்ருக்காலம் தொட்டு வளர்ந்துவந்த ஒரு தனிப் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் எமது சொந்தமாகக் கொண்டிருக்கிறேம். இவையெல்லாவற்றுக்கும் மேலாக ஒரு தேசிய இனத்திற்கு இன்றியமையாதநாம் ஒன்று என்னும் உணர்ச்சியைத் தமிழ்பேசும் மக்களாகிய நாம் எல்லோரும்பெற்றிருக்கிறேம். இந்நாட்டின் எப்பக்கத்தில் வாழ்ந்தாலும் என்னையும் உங்கள் எல்லோரையும் ஒன்ருகப் பிணைப்பதுஇவ்வுணர்ச்சியேயாகும். இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் ஒரு தனித் தேசிய இனம்என்பதும் அதேபோல தென்னிலங்கைவாழ் சிங்களசகோதரர்கள் ஒருதனித் தேசிய இனம் என்பதும்என் உள்ளத்தில் தோன்றும்ஒரு தெளிவான கருத்தாகும்'. இலங்கையின் சரித்திரத்தில் மகாவம்சகாலம்தொடக்கம் இவ்விரு தேசியஇனங்களின் போராட்டம் முக்கியஇடத்தைப்பெற்று வந்திருக்கிறது இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாக அளிக்கமுடியாத எமது தனித்துவத்தை இன்றுதாம் அழித்துவிடலாமென்று சிங்கள சகோதரர்கள் நினைப்பது வெறும்பகல் கனவாகவே முடியும்.

**அன்றே சொன்னுர்**

ஒன்றுககு மேற்பட்ட தேசிய இனங்கள் வாழும் நாடுகளில் அவ்வினங்களுக்கிடையே மோதல் ஏற்படுவது இயற்கை. தொகையில் கூடிய இனம் குறைந்தஇனத்தை விழுங்க முற்பட்டால் அச்சிறிய இனம் தன்னைகாத்துக்கொள்ளத் தவறினுல் அழிந்தொழிய வேண்டிய நிலையேற்படும். பல நூற்ருண்டுகளாக பெரும்பான்மை ஆங்கில மக்களுடைய ஆட்சியை ஏற்றுவாழ்ந்த தஸ்கொச், உவெல்ஸ் மக்கள்கூட சமீபகாலத்தில் சுயாட்சிகோரி இயக்கங்களை ஆரம்பித்து அவை வலுப்பெற்று வருவதை நாம்காண்கின்றேம். பல இனங்கள் வாழும் நாட்டில் இனப்பூசலைத் தடுக்கவேண்டுமாயின் ஒவ்வொரு இனத்திற்கும் சுயாதீனம் வழங்கக்கூடிய ஓர் அரசியல் அமைப்பு ஏற்படவேண்டும்.

பிரதேசரீதியாக பிரிக்கக் கூடிய வகையில் சிறுபான்மையினம் வாழுமாயின் அப்பிரதேசங்களுக்கு சுயாட்சி வழங்கக்கூடிய சமஷ்டி அமைப்பின் மூலமே உலகிலுள்ள மற்றநாடுகளில் இவ்வினப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது. இந்த அரசியல் பரிகாரம் கையாளப்படாத நாடுகளில் சிறுபான்மையினம் பெரும்பான்மையினத்திஞல் விழுங்கப்பட்டு அழியும்; அல்லது அந்த நாடு பிளவுபடும். சமீபத்தில்கூட செக்கோசிலவாக்கிய நாட்டில் சமஷ்டி அரசியல்அமைப்பை ஏற்று அங்கு வாழும் இரு இனங்களும் சுதந்திரமாகவும் ஒற்றுமையாகவும் வாழ வழி வகுத்திருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் இருபது ஆண்டுகளுக்குமுன் எமது கட்சியின் ஆரம்ப மாநாட்டில் தந்தை செல்வநாயகம் ஆற்றிய தலைமைப் பேருரையிலிருந்து ஒரு கருத்தை நினைவுபடுத்தவிரும்புகிறேன்.

**'நாம்கோருவதும் இதுதான். ஒருசுயாட்சி தமிழ்மாகாணமும், சுயாட்சி சிங்கள மாகாணமும் அமைத்து இரண்டிற்கும்பொதுவானதோர் மத்திய அரசாங்கமுள்ள சமஷ்டி அரசியல் இலங்கையில் ஏற்படவேண்டும். தமிழ் பேசும்தேசிய இனம் பெரிய தேசிய இனத்தால் விழுங்கப்பட்டு அழியாதிருக்க வேண்டுமேயானல் இவ்விரு சமஷ்டி ஏற்படுவது அவசியமாயிருக்கிறது. சமஷ்டி ஆட்சியில் ஒருவரும் நஷ்டமடையப்போவதில்லை நிச்சயமாக சிங்கள மக்கள் நஷ்டமடையமாட்டார்கள். ஏனென்ருல் இது பெரும்பான்மையோருடைய பிரதிநிதித்துவத்தை குறைத்து சிறுபான்மையோருக்கு கூடுதலான பிரதிநிதித்துவம் அளிக்கும் திட்டத்தை போன்றதன்று. ஆதலால் சமஷ்டி அரசியல் எல்லோரும் விரும்பவேண்டிய ஓர் இலட்சியமாகும்.**

1949-ம் ஆண்டு தந்தை செல்வநாயகம் அவர்கள் கூறிய வார்த்தைகள் சொல்லுக்கு சொல் இன்றும் சரியாக இருப்பதை நாம் காணலாம். இந்த ஒற்றை ஆட்சியின் கீழ் நமதுஉரிமைகள் பாதிக்கப்படுவது மாத்திரமின்றி பொருளாதாரத்துறையிலும் கல்வித்துறையிலும் கலாச்சாரத்துறையிலும் நாம் பின்தள்ளப்பட்டு வருகின்றேம் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

**பொருளாதார புறக்கணிப்பு**

வெளிநாட்டு உதவியுடனும் உலகவங்கி போன்ற சர்வதேசநிறுவனங்களின் உதவியுடனும் மிகப்பெரிய அபிவிருத்தித் திட்டங்கள் சமீபகாலத்தில் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் ஒன்றுதானும்வடக்குகிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்யவோ தமிழ்பேசும் மக்களுக்கு நன்மை தரக்கூடியவையாகவோ அமையவில்லை.

நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்கிக்கொண்டிருப்பது கிழக்கு மாகாணம். உணவுஉற்பத்தித் திட்டத்தின்கீழ் பலகோடி ரூபாவை செலவுசெய்யும் இந்த அரசாங்கம் கிழக்குமாகாண போக்குவரத்து வசதிகளையும் அபிவிருத்திசெய்து தமிழ்பேசும் விவசாயிகள் இவ்வுணவு உற்பத்தித் திட்டத்தில் பூரண வசதியோடு பங்குபெற வாய்ப்பு அளிக்கத் தவறிவிட்டது. எமது பிரதேசங்களின் நீர்ப்பாசன திட்டங்கள் போதிய கவனிப்பின்றி கிடக்கின்றன தமிழ்பேசும் மக்கள் குடியேற்றப்பட்ட திட்டங்கள் தானும் அரைகுறையாக அனுதரவாகக் கிடக்கின்றன. வடக்கே காங்கேசன்துறைத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படுமென்று ஆண்டுதோறும் அளிக்கப்பட்டு வரும் உறுதிமொழி ஏட்டுச்சுரைக்காயாகவே இருக்கின்றது. தென்னிலங்கையில் அரசாங்கம் பல கைத்தொழிற்சாலைகளை ஆரம்பித்தாயினும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒன்றுதானும் நிறுவப்படவில்லை.

பொருளாதாரத் துறையில் நான் மேலே குறிப்பிட்ட அதே புறக்கணிப்பு கல்வித்துறையில் இன்னும் மோசமாக கையாளப்பட்டு வருகிறது. தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டபின் முந்தியஅரசாங்கத்தினுல் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் நீக்கப்படுமென்று மக்கள் எதிர்பார்த்தனர். ஆனல் பௌத்த சிங்கள பெரும்பான்மையோரின் விருப்பத்துக்கு மாருக எதையும்செய்ய அஞ்சும் அரசாங்கம் சிறுபான்மை மக்களின் நம்பிக்கையில் மண்ணைப் போட்டுவிட்டது என்றே கூறவேண்டும்,

**மாற்ருந்தாய் மனப்பான்மை**

தமிழ்பேசும் மக்களின் பல்கலைக்கழகக் கோரிக்கை தட்டிக்கழிக்கப் பட்டதை ஏற்கனவே குறிப்பிட்டேன். அதேமனப்பான்மை பாடசாலைக் கட்டிடங்கள் விஞ்ஞான ஆய்வுகூடங்கள், தொழில்நுட்பக் கல்வி வசதி ... கண்டுவிட்டது என்பதை எவராலும் மறுக்க முடியாது. இத்திறைச்சேரிச் சுற்றறிக்கையின் படிவடக்கு கிழக்கு மாகாணங்களில் சகல நிர்வாக வேலைகளுக்கும் தமிழும் கட்டாயமாக உபயோகிக்கப்பட வேண்டும். இம்மாகாணங்களில் அரசாங்க அலுவலகங்களில் வைக்கப்படும் பதிவுகள் குறிப்புக்கள் அனைத்தும் தமிழிலும் வைக்கப்பட வேண்டும். சுருங்கக் கூறுவதாக இருந்தால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களத்திற்கும், தமிழுக்கும் ஒரு சமமான அந்தஸ்து சட்டபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. நாடு முழுவதிலும் தமிழ் பேசும் மக்களோடு அரசாங்கம் நடத்தும் கடிதப் போக்குவரத்து தமிழிலும் நடத்தப்படவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்க பிரசுரங்கள், விளம்பர


in
ELDORADO

ராஜா 87வது தினம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்கள்
அரைக்கட்டணத்துடன்
அனுமதிக்கப்படுவர்

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
சனி போயா, போயா 2-30 மணி
ஆனந்தன் - ஹேமலதா
நடித்த
விஜயபுரி வீரன்

புத்தாண்டு திரை விருந்து !!!
இங்ஸ்லி-மைலன், (கொழும்பு)
பிளாசா (வெள்ளவத்தை)
வெலிங்டன், (யாழ். நகர்)
விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை)
மற்றும் சினிமாஸ் திரைகளில்





கலைப்பேரரசர் எம். ஜி. ஆர்.
ஆடலழகி ஜெயலலிதா
எம். ஆர். ராதா, நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடிந்த
சரவணு பிலிம்ஸ்
சந்திரோதயம்
டைரக்ஷன்: கே. சங்கர்

4-வது வெற்றி வாரம்!
கெப்பிட்டல் (கொழும்பு)
முத்துராமன், ராஜன், பாரதி, பானுமதி
நடித்த
பூவும் பொட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org